சென்னை
மதுரை
கோவை
திருச்சி
திருநெல்வேலி
வேலூர்
தருமபுரி
புது தில்லி
விழுப்புரம்
நாகப்பட்டினம்
http://www.dinamani.com

தினமணி

செவ்வாய்க்கிழமை
17 ஆகஸ்ட் 2021
சென்னை
16 பக்கங்கள் ரூ.7

தலிபான்கள் கட்டுப்பாட்டில் ஆப்கானிஸ்தான்

மக்கள் அச்சம்; விமான நிலையத்தில் கூட்டம்

காபூல்/வாஷிங்டன்/பெய்ஜிங், ஆக. 16: புவியியல்ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த நாடான ஆப்கானிஸ்தான், மீண்டும் தலிபான்களின் கட்டுப்பாட்டுக்குள் சென்றுள்ளது.

தலிபான்களுக்கு அஞ்சி அங்கு வசிக்கும் வெளிநாடுகளைச் சேர்ந்தவர்கள் மட்டுமின்றி, ஆப்கன் மக்களும் நாட்டைவிட்டு வெளியேறுவதற்காக காபூல் விமான நிலையத்தில் திரண்டனர்.

ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கப் படைகள் வெளியேறத் தொடங்கிய பிறகு, அந்நாட்டின் மாகாணங்களைப் படிப்படியாக தலிபான்கள் கைப்பற்றி வந்தனர். தலைநகர் காபூலை அவர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை நெருங்கினர். இந்நிலையில், அந்நாட்டு அதிபர் அஷ்ரஃப் கனி திடீரென நாட்டைவிட்டு வெளியேறினார். அவர் எந்த நாட்டுக்குச் சென்றார் என்பது தெரியவில்லை.

இதையடுத்து, ஆப்கன் நாடாளுமன்றம், அதிபர் மாளிகையை கைப்பற்றிய தலிபான்கள், ஆட்சியமைப்பதற்கான பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். நாட்டில் அமைதி வழியிலான புதிய சகாப்தம் தொடங்கும் என்று தலிபான்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த 1996 முதல் 2001 வரை ஆப்கானிஸ்தானை ஆட்சி செய்த தலிபான்கள், மக்களுக்குக் கடும் கட்டுப்பாடுகளை விதித்தனர். பெண்கள் ஆண் உறவினர் துணையின்றி வீட்டைவிட்டு வெளியேறக் கூடாது, நவீன ஆடைகளுக்குத் தடை, ஆண்கள் கட்டாயம் தாடி வளர்க்க வேண்டும், பெண்கள் பள்ளிக்கூடங்கள் செல்லத் தடை உள்ளிட்ட கடும் கட்டுப்பாடுகளை தலிபான்கள் விதித்தனர்.

ஆனால், 2001-இல் அமெரிக்காவின் உதவியுடன் தலிபான்கள் ஆட்சி அகற்றப்பட்ட பிறகு, சமூக ரீதியிலும் பொருளாதாரரீதியிலும் ஆப்கானிஸ்தான் முன்னேற்றம் காணத் தொடங்கியது. பெண்கள் கல்வி கற்றனர். நாட்டின் பல்வேறு பகுதிகளில் நவீன ஆடைகளும், தொழில்நுட்பங்களும் அறிமுகமாயின. சிறுபான்மையினர் நலனுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.

இந்நிலையில், ஆப்கானிஸ்தான் மீண்டும் பழமைவாதிகளான தலிபான்களின் கட்டுப்பாட்டுக்குள் சென்றுள்ளதால், எத்தகைய கட்டுப்பாடுகள் விதிக்கப்படும் என்று மக்கள் அச்சம் தெரிவித்து வருகின்றனர். குறிப்பாக, பெண்களின் நிலை குறித்து மனித உரிமை அமைப்புகள் கவலை தெரிவிக்கின்றன.

விமானத்திலிருந்து விழுந்த மக்கள்: தலிபான்கள் மீதுள்ள அச்சம் காரணமாக, ஆப்கானிஸ்தானில் வசித்து வரும் வெளிநாடுகளைச் சேர்ந்தோர், தாயகம் திரும்பி வருகின்றனர். அதனால், காபூல் விமான நிலையத்தில் கூட்டம் அலைமோதியது. ஆப்கானிஸ்தான் நாட்டைச் சேர்ந்தவர்களும் வெளிநாடுகளுக்குத் தப்பிச் செல்லும் நிலை காணப்படுகிறது.

விமான நிலையத்தில் இருந்து கிளம்பிய அமெரிக்கப் போர் விமானத்தில் ஏறுவதற்கு மக்கள் முண்டியடித்தனர். சிலர் விமானத்தின் இறக்கைகளில் தொங்கிக் கொண்டு சென்றனர். விமானம் புறப்பட்ட பிறகு 3 பேர் கீழே விழும் காணொலி வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியது. விமானத்தில் இருந்து விழுந்தவர்கள், நெரிசலில் சிக்கியவர்கள் என 7 பேர் இறந்துவிட்டதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மக்கள் வெளியேற வேண்டாம்-தலிபான்கள்: ஆப்கானிஸ்தான் அரசுக்காகவும், அரசுப் படைகளுக்காகவும் பணியாற்றியவர்கள் மீது எந்தவித பழிவாங்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாது என்று தலிபான்கள் தெரிவித்துள்ளனர். நாட்டில் தொழில் தொடங்குவதற்கு ஏற்ற சூழ்நிலைகள் உருவாக்கப்படும் என்று தெரிவித்துள்ள தலிபான்கள், மக்கள் நாட்டைவிட்டு வெளியேற வேண்டாம் என்றும் அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

ஆனால், அரசுக்கு ஆதரவாகச் செயல்பட்டவர்கள் மீது தலிபான்கள் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருவதாக மனித உரிமைகள் அமைப்பு ஒன்று தெரிவித்துள்ளது.

6,000 அமெரிக்க வீரர்கள்: அமெரிக்காவைச் சேர்ந்த மக்கள், ஆப்கானிஸ்தானில் இருந்து பாதுகாப்பாக வெளியேறுவதை உறுதி செய்வதற்காக காபூல் விமான நிலையத்தில் 6,000 வீரர்கள் குவிக்கப்படவுள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது. எதிர்பார்த்ததைவிட விரைவாக தலிபான்கள் கட்டுப்பாட்டுக்குள் ஆப்கானிஸ்தான் சென்றுள்ளதாக அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஆன்டனி பிளிங்கன் தெரிவித்துள்ளார். இதே கருத்தை அமெரிக்க அதிபர் ஜோ பைடனும் தெரிவித்துள்ளார். எந்தவித எதிர்ப்புமின்றி தலிபான்கள் கட்டுப்பாட்டுக்குள் காபூல் சென்றது, அமெரிக்காவின் வரலாற்றில் மிகப்பெரிய தோல்வியாகப் பதிவாகும் என்று முன்னாள் அதிபர் டொனால்ட் டிரம்ப் தெரிவித்துள்ளார்.

அனைவருக்குமான அரசு-சீனா நம்பிக்கை: தலிபான்கள் தலைமையில் அமையும் அரசு, அனைத்துத் தரப்பினருக்கும் நன்மை தரும் வகையில் இருக்குமென்று நம்புவதாக சீனா தெரிவித்துள்ளது. இது தொடர்பாக, அந்நாட்டு வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் ஹுவா சன்யிங் கூறுகையில், 'வன்முறையின்றி அமைதி வழியிலான ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தவும், உள்நாட்டு, வெளிநாட்டு மக்களைக் காக்கவும் தலிபான்கள் உறுதி அளித்தனர். அந்த வாக்குறுதியை அவர்கள் நிறைவேற்றுவார்கள் என நம்புகிறோம். போரால் மக்கள் பாதிக்காத வகையிலான நடவடிக்கைகளை தலிபான்கள் மேற்கொள்ள வேண்டும். மற்ற நாடுகளின் உள்விவகாரங்களில் சீனா தலையிடாது. ஆப்கானிஸ்தான் மக்களுடனான நட்புறவை மேம்படுத்தி, அமைதியை நிலைநாட்டுவதற்கான நடவடிக்கைகளை சீனா மேற்கொள்ளும்' என்றார்.

ஆப்கன் அதிபர் மாளிகையை தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்த தலிபான் படையினர்.

தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு அமைய வேண்டும்: ஐ.நா.

நியூயார்க், ஆக.16: ஆப்கானிஸ்தானில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு அமைய வேண்டும் என்று ஐ.நா.பாதுகாப்பு கவுன்சில் வலியுறுத்தியுள்ளது.

இந்த மாதம் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலுக்கு இந்தியா தலைமை ஏற்றுள்ளது. ஆப்கானிஸ்தானில் நிலவும் சூழல் காரணமாக இந்த கவுன்சிலின் கூட்டம் 10 நாள்களில் இரண்டாவது முறையாக திங்கள்கிழமை நடைபெற்றது. இந்தக் கூட்டத்தை தொடர்ந்து கவுன்சில் வெளியிட்ட அறிக்கையில், 'ஆப்கானிஸ்தானில் உடனடியாக வன்முறை முடிவுக்கு வரவேண்டும். அனைத்து போர் நடவடிக்கைகளும் உடனடியாக கைவிடப்பட வேண்டும். அந்நாட்டில் அனைத்து தரப்பினரையும் உள்ளடக்கி பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு அமைய வேண்டும். அந்த அரசில் பெண்களுக்கும் சம அளவிலும் அர்த்தமுள்ள வகையிலும் பங்கிருக்க வேண்டும்.

ஆப்கானிஸ்தானில் உள்ள எந்தவொரு தனிநபரோ, குழுவோ, தலிபான்களோ பிற நாட்டில் உள்ள பயங்கரவாதிகளை ஆதரிக்கக் கூடாது. ஆப்கானிஸ்தானின் தற்போதைய நெருக்கடிக்கு அமைதியான முறையில் தீர்வு காணப்பட வேண்டும்'' என்று தெரிவிக்கப்பட்டது.

முன்னதாக கூட்டத்தில் பேசிய ஐ.நா. பொதுச் செயலர் அன்டோனியோ குட்டெரெஸ், 'ஆப்கானிஸ்தான் மீண்டும் பயங்கரவாதத்தின் புகலிடமாவதை தடுக்க சர்வதேச சமூகம் ஒன்றிணைய வேண்டும். ஆப்கன் மக்களை பாதுகாக்கவும், அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்யவும் அனைத்து தரப்பினரும், குறிப்பாக தலிபான்கள் மிகுந்த கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்ள வேண்டும்.

ஆப்கானிஸ்தானை பயங்கரவாத அமைப்புகளின் தளமாகவும் புகலிடமாகவும் மீண்டும் பயன்படுத்தாமல் தடுக்க சர்வதேச சமூகம் ஒன்றிணைய வேண்டும்.

அந்நாட்டில் இருந்து அகதிகளாக வருவோரை உலக நாடுகள் ஏற்றுக்கொள்ள வேண்டும். அவர்களை நாடு கடத்த வேண்டாம்.

ஆப்கானிஸ்தானில் அடுத்த வரும் நாள்கள் மிக முக்கியமானதாக இருக்கும். அந்நாட்டு மக்களை நாம் கைவிட முடியாது; கைவிடவும் கூடாது' என்று தெரிவித்தார்.

ஐ.நா.வுக்கான இந்திய தூதர் டி.எஸ்.திருமூர்த்தி கூட்டத்தில் பேசுகையில், 'ஆப்கானிஸ்தானில் நிலவும் தற்போதைய சூழல் இந்தியாவை மிகவும் கவலைக் குள்ளாக்கியுள்ளது. அந்நாட்டு விவகாரம் தொடர்பாக விடையில்லாத பல கேள்விகள் உள்ளன. அந்நாட்டு பெண்களின் குரல்கள், சிறார்களின் கனவுகள், சிறுபான்மையினரின் உரிமைகள் மதிக்கப்பட வேண்டும்' என்று தெரிவித்தார்.

'ஆப்கன் மக்கள் பாதுகாப்பாகவும் கண்ணியமாகவும் வாழ உரிமையுள்ளவர்கள். அவர்களுக்கு உதவ சர்வதேச சமூகம் தயாராக உள்ளது' என்று ஐ.நா.வுக்கான அமெரிக்க தூதர் லிண்டா தாமஸ் க்ரீன்ஃபீல்டு தெரிவித்தார்.

இந்தியர்களை பாதுகாப்பாக வெளியேற்ற நடவடிக்கை: வெளியுறவு அமைச்சகம் தகவல்

புது தில்லி, ஆக. 16: ஆப்கானிஸ்தானில் உள்ள இந்தியர்களுக்கு பாதுகாப்பு அளிக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருவதாகவும், அங்கிருந்து வெளியேற விரும்பும் சீக்கியர்கள், ஹிந்துகளுக்கு போதிய வசதிகள் செய்து தரப்படும் என்று இந்திய வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் அரிந்தம் பாக்சி திங்கள்கிழமை தெரிவித்தார்.

செய்தியாளர்களின் கேள்விக்கு பதிலளித்து அவர் மேலும் கூறுகையில், 'ஆப்கானிஸ்தான் சூழல் கடந்த சில நாள்களில் வேகமாக மோசமடைந்து வருகிறது. அங்கு நிலவி வரும் சூழல் குறித்து உயர்நிலை அளவில் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

ஆப்கானிஸ்தானில் உள்ள இந்திய தூதரக அதிகாரிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும். அங்குள்ள சீக்கியர்கள், ஹிந்து சமூகத்தினரின் பிரதிநிதிகளுடன் தொடர்பில் உள்ளோம். அவர்கள் வெளியேற விரும்பினால் அதற்கான உதவிகள் செய்து தரப்படும். தற்போதைக்கு நிறுத்தப்பட்டுள்ள விமானப் போக்குவரத்தை மீண்டும் தொடங்குவதற்காக காத்திருக்கிறோம். அங்குள்ள இந்தியர்களுக்கு அவசரகால உதவி எண்கள் வழங்கப்பட்டு, இந்திய அதிகாரிகள் தொடர்ந்து தொடர்பில் இருந்து வருகின்றனர்' என்றார் அரிந்தம் பாக்சி.

கடந்த 2001-ஆம் ஆண்டில் தலிபான்கள் ஆட்சி வீழ்ந்த பிறகு, ஆப்கானிஸ்தானுடனான உறவை இந்திய அரசு தொடர்ந்து வலுப்படுத்தி வந்தது. தற்போது ஆப்கானிஸ்தான் தலிபான்களின் கட்டுப்பாட்டில் சென்றுள்ளதால், அந்நாட்டில் இந்தியா மேற்கொண்டுள்ள முதலீடுகள் கேள்விக்குறியாகியுள்ளன.

ஏர் இந்தியா விமானம் ரத்து: இதற்கிடையே காபூல் விமான நிலையம் கட்டுப்பாடற்ற நிலைக்கு சென்றுவிட்டதாக விமான நிலைய அதிகாரிகள் எச்சரிக்கை வெளியிட்டனர். இதையடுத்து காபூலுக்கு திங்கள்கிழமை காலை செல்ல இருந்த கடைசி ஏர் இந்தியா விமானம் ரத்து செய்யப்பட்டது.

உள்ளே...

- பெட்ரோல்-டீசல் வரியைக் குறைக்க முடியாதது ஏன்?

- லார்ட்ஸ் டெஸ்ட்: இந்தியா அபார வெற்றி

இன்றைய இதழுடன் 4 பக்க இளைஞர்மணி இணைப்பு

கருணாநிதி வழியில் ஸ்டாலின்!

கடையநல்லூர்/சென்னை, ஆக. 16: முதல்வர் மு.க. ஸ்டாலினின் உத்தரவைத் தொடர்ந்து தென்காசி மாவட்டம் நயினாரகரத்தில் உள்ள தியாகி லட்சுமிகாந்தன் பாரதியின் (95) இல்லத்துக்கு மாவட்ட ஆட்சியர் கோபால சுந்தரராஜ் திங்கள்கிழமை சென்று மரியாதை செலுத்தினார்.

தென்காசியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற சுதந்திர தின விழாவில், சுதந்திரப் போராட்ட தியாகியும் முன்னாள் ஐஏஎஸ் அதிகாரியுமான லட்சுமிகாந்தன் பாரதி கலந்துகொண்டார். ஆனால், அங்கு அவருக்கு உரிய மரியாதை அளிக்கப்படவில்லை. இது தொடர்பான சிறப்புச் செய்தி 'தினமணி'யில் திங்கள்கிழமை வெளியானது.

லட்சுமிகாந்தன் பாரதியுடன் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேச்சு: செய்தி வெளியானதைத் தொடர்ந்து, தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு, முதல்வரின் தனிச் செயலாளர் த.உதயசந்திரன் ஆகியோர் மூலம் மாவட்ட ஆட்சியரைத்தொடர்பு கொண்டு விசாரித்தார் முதல்வர் மு.க.ஸ்டாலின். தியாகி லட்சுமிகாந்தன் பாரதியை தொலைபேசியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அழைத்து விழாவின்போது நடந்த விவரங்களைக் கேட்டறிந்தார்; மேலும், நடந்த சம்பவத்துக்கு அரசின் சார்பில் முதல்வர் மு.க.ஸ்டாலின் வருத்தம் தெரிவித்தார்.

தியாகி லட்சுமிகாந்தன் பாரதிக்கு திங்கள்கிழமை சால்வை அணிவித்து மரியாதை செலுத்திய தென்காசி மாவட்ட ஆட்சியர் கோபால சுந்தரராஜ்.

தினமணி செய்தி எதிரொலி

இதையடுத்து, நயினாரகரத்தில் தியாகி லட்சுமிகாந்தன் பாரதியின் வீட்டுக்கு மாவட்ட ஆட்சியர் கோபால சுந்தரராஜ் சென்று உரிய விளக்கம் அளித்து, அவருக்கு சால்வை அணிவித்து மரியாதை செலுத்தினார். பின்னர், நயினாரகரம் ஊராட்சி மன்ற அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள சுதந்திரப் போராட்ட தியாகிகளின் உருவப் படங்களுக்கு ஆட்சியர் மரியாதை செலுத்தினார்.

முன்னாள் முதல்வர் கருணாநிதியைப் பின்பற்றி...: கருணாநிதி முதல்வராக இருந்தபோது, 'தினமணி' வெளியிடும் செய்திகளுக்கு முன்னுரிமை வழங்கி உடனடியாக நடவடிக்கை எடுப்பது வழக்கம். மதுரையில் தியாகி வைத்தியநாத ஐயரின் சிலை பராமரிக்கப்படாமல் இருந்த செய்தியைப் படித்த சில மணி நேரங்களில் மதுரை மாவட்ட ஆட்சியருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு சரி செய்யப்பட்டது. அதேபோல, கோவையில் உலகத் தமிழ் மாநாடு நடத்தப்பட வேண்டும் என்கிற 'தினமணி' கட்டுரையைத் தொடர்ந்து, அதே நாளில் செம்மொழி மாநாடு அறிவிக்கப்பட்டது.

முன்னாள் முதல்வர் கருணாநிதியைப் போலவே தியாகி லட்சுமிகாந்தன் பாரதி தொடர்பான செய்தி வெளியானதும், முதல்வர் மு.க. ஸ்டாலினும் உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டது குறிப்பிடத்தக்கது.

தீர்ப்பாயங்களில் காலிப் பணியிடங்களை 10 நாள்களில் நிரப்ப வேண்டும்

மத்திய அரசுக்கு உச்சநீதிமன்றம் கெடு

புது தில்லி, ஆக. 16: உச்சநீதிமன்ற உத்தரவுகளை மத்திய அரசு பின்பற்றாதது குறித்து அதிருப்தி தெரிவித்த உச்சநீதிமன்றம், 'தீர்ப்பாயங்களில் உள்ள காலிப் பணியிடங்களை 10 நாள்களில் நிரப்ப வேண்டும்' என மத்திய அரசுக்கு கெடு விதித்து திங்கள்கிழமை உத்தரவிட்டது.

தீர்ப்பாயங்களில் உள்ள காலிப் பணியிடங்களை நிரப்ப உத்தரவிடக்கோரி தாக்கல் செய்த மனுவை கடந்த ஆகஸ்ட் 5-ஆம் தேதி விசாரித்த உச்சநீதிமன்றம், பாதுகாப்புப் படை தீர்ப்பாயம், தேசிய பசுமைத் தீர்ப்பாயம் மற்றும் ரயில்வே உரிமைகோரல் தீர்ப்பாயம் ஆகியவற்றில் ஏராளமான காலிப் பணியிடங்கள் நீண்ட காலமாக நிரப்பப்படாமல் உள்ளதாகத் தெரிவித்திருந்தது. அந்த காலிப் பணியிடங்கள் குறித்த முழுமையான விவரங்கள், அந்தப் பணியிடங்களை நிரப்ப எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து 10 நாள்களில் மத்திய அரசு பதிலளிக்கவும் உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்த வழக்கு உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி என்.வி.ரமணா தலைமையிலான அமர்வு முன்பு திங்கள்கிழமை மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவில் கூறியதாவது:

தீர்ப்பாயங்களில் காலிப் பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருப்பது மோசமான நிலையாகும். இதுதொடர்பாக உச்சநீதிமன்றம் ஏற்கெனவே பிறப்பித்த உத்தரவையும் மத்திய அரசு பின்பற்றவில்லை. பணியிடங்களை நிரப்பாமல் தாமதப்படுத்துவதில் அரசியல் இருப்பதாக சந்தேகம் எழுகிறது. எனவே, தீர்ப்பாயங்களில் உள்ள காலிப் பணியிடங்களை நிரப்ப மத்திய அரசுக்கு 10 நாள்கள் கால அவகாசம் அளிக்கப்படுகிறது.

மேலும், தீர்ப்பாயங்கள் சீர்திருத்த அவசர சட்டத்தை உச்சநீதிமன்றம் ரத்து செய்த பிறகும், அந்தச் சட்டத்தில் இடம்பெற்றிருந்த ஷரத்துகளுடன் 'தீர்ப்பாயங்கள் சீர்திருத்த மசோதா 2021' நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு எந்தவித விவாதமும் நடத்தப்படாமல் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

இது, சட்டத்தை உருவாக்கும் நாடாளுமன்றத்தின் தனி உரிமை என்றபோதிலும், இந்த வகையில் சட்டத்தை உருவாக்குவதற்கான காரணம் என்ன என்பதை நாங்கள் அறிய விரும்புகிறோம். தீர்ப்பாயங்கள் தொடர்ந்து செயல்பட வேண்டுமா அல்லது மூடப்பட வேண்டுமா என்பதை மத்திய அரசு தெளிவுபடுத்த வேண்டும் என்று தெரிவித்தனர்.

இதற்கு பதிலளித்த மத்திய அரசின் தலைமை வழக்குரைஞர் துஷார் மேத்தா, 'தீர்ப்பாய சீர்திருத்த மசோதா இப்போது சட்டமாக நிறைவேற்றப்பட்டுவிட்டது. எனவே, அதுகுறித்து இப்போது பதிலளிப்பது முறையாக இருக்காது' என்றார்.

காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயிலில் சிலை கடத்தல் தடுப்புப் பிரிவு போலீஸார் ஆய்வு

காஞ்சிபுரம், ஆக. 16: காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயிலில் சிலை கடத்தல் தடுப்புப் பிரிவு போலீஸார் திங்கள்கிழமை திடீர் ஆய்வு மேற்கொண்டனர்.

இக்கோயிலின் பின்புறம் உள்ள இரட்டை திருமாளிகை மண்டபத்தில் பழைமையான கல்தூண்கள் சேதமடைந்திருப்பதாகவும், காணாமல் போய் விட்டதாகவும் கடந்த 2017-ஆம் ஆண்டு புகார்கள் வந்தன. இப்புகாரின் அடிப்படையில், இந்து சமய அறநிலையத் துறை அதிகாரிகள் 7 பேர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு விசாரணை நடந்தது.

இந்நிலையில், இவ்விசாரணையில் தொய்வு இருப்பதாக மீண்டும் புகார் வந்ததைத் தொடர்ந்து, சிலை கடத்தல் தடுப்புப் பிரிவு ஆய்வாளர் மலர்விழி தலைமையிலான காவல் துறையினர், காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயிலில் திடீர் ஆய்வு மேற்கொண்டனர்.

இரட்டை மாளிகையில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த 34 பழைமையான கல்தூண்களையும் பார்வையிட்டனர். கோயிலின் சுற்றுப்புறங்களையும் பார்வையிட்டனர். ஆய்வின் போது, கோயில் செயல் அலுவலர் ந.தியாகராஜன் உடன் இருந்தார்.

முதியோர் ஓய்வூதியத் திட்டத்தில் 10 சதவீதம் பேரை கூடுதலாகச் சேர்ப்போம்

நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன் உறுதி

சென்னை, ஆக. 16: முதியோர் ஓய்வூதியத் திட்டத்தில் தகுதியுள்ள 10 சதவீத கூடுதல் பயனாளிகளைச் சேர்க்கவுள்ளதாக நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன் தெரிவித்தார்.

சட்டப் பேரவையில் நிதி, வேளாண்மை நிதிநிலை அறிக்கைகள் தொடர்பாக, திங்கள்கிழமை நடைபெற்ற விவாதம்:

அதிமுக உறுப்பினர் ஆர்.பி.உதயகுமார்: அதிமுக ஆட்சிக் காலத்தில் ஏராளமான மக்கள் நலத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. திமுக ஆட்சிக் காலத்தில் முதியோர் ஓய்வூதியத் தொகை ரூ.500 மட்டுமே கொடுக்கப்பட்டது. அதனை ஆயிரம் ரூபாயாக அதிகரித்து 35 லட்சம் பேருக்கு அளிக்கப்பட்டது.

நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன்: நிதியை ரூ.500-லிருந்து ஆயிரமாக உயர்த்தும் போதே, ஓய்வூதியப் பயனாளிகளின் எண்ணிக்கையை 25 சதவீதம் நிறுத்தி வைத்தீர்கள். சமூக-பொருளாதாரம் குறித்த ஆய்வினை மேற்கொள்ள, நோபல் பரிசு பெற்ற எஸ்தர் டஃப்லோவுடன் அதிமுக அரசு ஒப்பந்தம் செய்து கொண்டது. ஆனால், ஓய்வூதியத் திட்டத்தின் பயனாளிகள் சரியாக இல்லை. அதனைத் திருத்த வேண்டுமென அவரே தெரிவித்தார். அவல நிலையில் இருந்தவர்களைக் கூட நீக்கி விட்டீர்கள். இவற்றைச் சரி செய்து நாங்கள் 10 சதவீதம் கூடுதலான பயனாளிகளுக்குக் கொடுக்க உள்ளோம்.

வருவாய்த் துறை அமைச்சர் கேகேஎஸ்எஸ்ஆர். ராமச்சந்திரன்: அதிமுக ஆட்சிக் காலத்தில் தகுதியுள்ளவர்களிலேயே 7 லட்சம் பேரை நீக்கப்பட்டனர். தேர்தல் வந்த நேரத்தில் தொகுதி நிலவரத்துக்கு ஏற்றாற் போன்று ஓய்வூதியத்தை அளித்தனர். தகுதியுள்ள அனைவருக்கும் சரியான முறையில் நாங்கள் வழங்க உள்ளோம்.

எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி கே.பழனிசாமி: அதிமுக ஆட்சியில் தகுதியான நபர்களுக்கே ஓய்வூதியம் அளிக்கப்பட்டது. அதிலும் 60 சதவீதம் பேருக்கு கூடுதலாக வழங்கினோம். கடந்த திமுக ஆட்சிக் காலத்தில் தேர்தல் நெருங்கும் நேரத்தில் சேலம் வீரபாண்டி தொகுதியில் மட்டும் 18,000 தகுதியில்லாத நபர்களுக்கு வழங்கப்பட்டது.

அமைச்சர் ஐ.பெரியசாமி: தகுதியில்லாத நபர்களுக்கு நாங்கள் வழங்கியதாக தெரிவித்த பட்டியலைத் தரத் தயாரா?

எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி கே.பழனிசாமி: அதிமுக ஆட்சியில் தகுதியில்லாதவர்களே நீக்கப்பட்டனர். தகுதியுள்ளவர்கள் நீக்கப்படவில்லை.

நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன்: அதிமுக ஆட்சியில் தகுதியுள்ள பயனாளிகள் பலருக்குக் கிடைக்காமல் இருந்தது. வறுமை நீக்குவதற்கான எம்.ஐ.டி.யின் ஆராய்ச்சிக் குழு தனது ஆய்வில், ஓய்வூதியம் பல தகுதியுள்ள பயனாளிகளுக்குக் கிடைக்கவில்லை என தெரிவித்திருந்தது என்றார்.

அரசு மருத்துவக் கல்லூரிகளில் நேரடி வகுப்புகள் தொடங்கின

ஓமந்தூரார் மருத்துவக் கல்லூரிக்கு திங்கள்கிழமை வந்த மாணவிகளுக்கு கரோனா நெறிமுறைகள் குறித்து அறிவுறுத்திய டீன் ஜெயந்தி.

சென்னை, ஆக. 16: தமிழகத்தில் கரோனா தொற்று பாதிப்பு குறைந்ததால் 6 மாதங்களுக்குப் பின் அரசு மருத்துவக் கல்லூரிகளில் நேரடி வகுப்புகள் திங்கள்கிழமை தொடங்கின.

கரோனா தொற்று பாதிப்பு குறைந்ததைத் தொடர்ந்து 6 மாதங்களுக்குப் பின் அனைத்து அரசு மருத்துவக் கல்லூரிகளிலும் நேரடி வகுப்புகள் திங்கள்கிழமை தொடங்கப்பட்டன. 48 மணி நேரத்துக்கு முன்பு எடுக்கப்பட்ட பரிசோதனையில் கரோனா தொற்று இல்லை (நெகட்டிவ்) என்ற சான்றுடன் மாணவ, மாணவிகள் முகக்கவசம் அணிந்து கல்லூரிகளுக்கு வந்தனர். சமூக இடைவெளியைப் பின்பற்றி வகுப்பறைகளில் மாணவர்களுக்குப் பேராசிரியர்கள் பாடங்களை எடுத்தனர்.

இதுகுறித்து ஓமந்தூரார் மருத்துவக் கல்லூரி முதல்வர் ஜெயந்தி, கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் சாந்திமலர் கூறுகையில், வகுப்பறையில் சமூக இடைவெளியைக் கடைப்பிடிக்க வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது. வகுப்பறைகளில் நோய் பாதிப்பு ஏற்படாத வகையிலும் மாணவர்களுக்கு பாதுகாப்பு முறைகள் பாடங்கள் எடுக்கப்படுகின்றன என்றனர்.

கேஜரிவால் பிறந்த நாள்: பிரதமர், முதல்வர் ஸ்டாலின் வாழ்த்து

நமது நிருபர்

புது தில்லி, ஆக. 16: தில்லி முதல்வர் அரவிந்த் கேஜரிவாலின் 53-ஆவது பிறந்த நாளையொட்டி, திங்கள்கிழமை அவருக்கு பிரதமர் நரேந்திர மோடி, மத்திய அமைச்சர்கள், முதல்வர் ஸ்டாலின் உள்ளிட்ட மாநில முதல்வர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.

பிரதமர் நரேந்திர மோடி, தில்லி துணைநிலை ஆளுநர் அனில் பய்ஜால், அஸ்ஸாம் முதல்வர் ஹிமந்தா விஸ்வாஸ் சர்மா, மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி, ஹிமாசலப் பிரதேச முதல்வர் ஜெய்ராம் தாக்குர், ஜார்க்கண்ட் முதல்வர் ஹேமந்த் சோரன், மத்திய அமைச்சர் நிதின் கட்கரி ஆகியோரும் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின்: சமூக ஊடகத்தில் முதல்வர் ஸ்டாலின் திங்கள்கிழமை தெரிவித்த பிறந்த நாள் வாழ்த்து: எனது இனிய நண்பரும், தில்லி முதல்வருமான அரவிந்த் கேஜரிவாலுக்கு பிறந்தநாள் வாழ்த்துகள்.

அவர் நீண்ட காலம் உடல் நலத்துடன் மக்கள் பணியில் ஈடுபட வாழ்த்துகள் என்று தெரிவித்துள்ளார்.

Bank of Baroda — பெருங்குடி கிளை, மனை எண்.231, ராஜீவ் காந்தி ரோடு, பெருங்குடி, சென்னை-600 096, Ph: 044 - 2345 4301

கடன்தாரர் / ஜாமீன்தாரர்களுக்கான அறிவிப்பு

2002-ம் வருடத்திய பத்திரமயமாக்குதல் மற்றும் நிதிச் சொத்துகள் சீரமைப்பு மற்றும் செக்யூரிட்டி இன்டரஸ்ட் அமலாக்கச் சட்டத்தின் 13(2) பிரிவின் கீழ் அனுப்பப்பட்ட நோட்டீஸ்

கடன்தாரர்: 1. M/s. VSV ஏஜென்சி, 2. Mr.V.C.ஸ்ரீனிவாசன் ... [illegible]

வ.எண்	கடன் வசதி	கடன் தொகை	வட்டி விகிதம்	05.07.2021 அன்றுள்ளபடி நிலுவைத்தொகை (31.05.2021 வரை வட்டி உட்பட)
1.	Overdraft 31720400000029	ரூ.4,00,00,000/-	10.75%	ரூ.4,24,60,586.07 * கணக்கிடப்படாத வட்டி மற்றும் செலவுகள்
2.	Housing Loan 31720600000800	ரூ.40,93,000/-	8.15%	Rs.37,52,906/- * கணக்கிடப்படாத வட்டி மற்றும் செலவுகள்

சொத்துக்கள் விவரம்

[illegible]

தேதி: 26.07.2021 இடம்: சென்னை — அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, பேங்க் ஆஃப் பரோடா

ஆக்சிஸ் பேங்க் லிமிடெட் — வீகல் டியார்மெண்ட், 4வது தளம், ஆற்காடு பிளாசா, பழைய எண்.38, புதிய எண்.165, ஆற்காடு ரோடு, கோடம்பாக்கம், சென்னை-600024

சுவாதீன அறிவிப்பு விதி 8(1)-ன் கீழ் (அசையா சொத்துக்களுக்காக)

பிணைக்காப்பு நிதிச் சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்கச் சட்டம் 2002 ... (Securitisation and Reconstruction of Financial Assets and Enforcement of Security Interest Act, 2002 and Security Interest (Enforcement) Rules, 2002) ... [illegible]

வரிசை எண். 1: கடன்தாரர் / இணை-கடன்தாரர்: (1) திரு.T.ஆனந்தன் மற்றும் (2) திருமதி.மகேஸ்வரி, கோரிக்கை அறிவிப்பு தேதி: 20.04.2021, நிலுவைத் தொகை (கடன் கணக்கு எண்: LPR118201560813), 20.04.2021 அன்றுள்ளபடி, ரூ.37,79,711/- ... சுவாதீனம் எடுத்த தேதி: 13.08.2021 ... [illegible]

வரிசை எண். 2: கடன்தாரர் / இணை-கடன்தாரர்: (1) திரு.T.திரிமல், மற்றும் (2) திரு.திருமாள், கோரிக்கை அறிவிப்பு தேதி: 26.04.2021, நிலுவைத் தொகை (கடன் கணக்கு எண்: LTR156602825206 & LTR156604595160 & PCR156601766692), 23.04.2021 அன்றுள்ளபடி, ரூ.63,94,487/- ... சுவாதீனம் எடுத்த தேதி: 12.08.2021 ... [illegible]

வரிசை எண். 3: கடன்தாரர் / இணை-கடன்தாரர்: (1) திரு.V.பஞ்சாராஜன் மற்றும் (2) திருமதி.ஆனந்தி, கோரிக்கை அறிவிப்பு தேதி: 30.04.2021, நிலுவைத் தொகை (கடன் கணக்கு எண்: PHR008201454248), 30.04.2021 அன்றுள்ளபடி, ரூ.7,38,229/- ... சுவாதீனம் எடுத்த தேதி: 12.08.2021 ... [illegible]

வரிசை எண். 4: கடன்தாரர் / இணை-கடன்தாரர்: (1) திரு.O.மொகைத் ஹுசைன் முக்தர், கோரிக்கை அறிவிப்பு தேதி: 19.04.2021, நிலுவைத் தொகை (கடன் கணக்கு எண்: PHR085101814730), 19.04.2021 அன்றுள்ளபடி, ரூ.49,36,363/- ... சுவாதீனம் எடுத்த தேதி: 12.08.2021 ... [illegible]

வரிசை எண். 5: கடன்தாரர் / இணை-கடன்தாரர்: (1) திரு.S.வீரபாண்டியன், மற்றும் (2) திரு.S.செந்தில்குமார் கோரிக்கை அறிவிப்பு தேதி: 24.05.2021, நிலுவைத் தொகை (கடன் கணக்கு எண்: PHR086502541245 & LTR086502573851), 18.05.2021 அன்றுள்ளபடி, ரூ.33,23,327/- ... சுவாதீனம் எடுத்த தேதி: 12.08.2021 ... [illegible]

வரிசை எண். 6: கடன்தாரர் / இணை-கடன்தாரர்: (1) திரு.அரவிந்த் S. மற்றும் (2) திருமதி.கவியா, கோரிக்கை அறிவிப்பு தேதி: 12.05.2021, நிலுவைத் தொகை (கடன் கணக்கு எண்: PHR086504146564), 12.05.2021 அன்றுள்ளபடி, ரூ.35,67,555/- ... சுவாதீனம் எடுத்த தேதி: 12.08.2021 ... [illegible]

இடம்: சென்னை தேதி: 12.08.2021 / 13.08.2021 — அங்கீகாரம் பெற்ற அதிகாரி, ஆக்சிஸ் பேங்க் லிமிடெட்

வெள்ளிதோறும் தினமணியுடன்... வெள்ளி மணி — ஆன்மீகச் சிறப்பு, ஜோதிடச் சிறப்பு, இரண்டும் இணைந்த வண்ண இணைப்பு

ஆக்சிஸ் பேங்க் லிமிடெட் — வீகல் டியார்மெண்ட், 4வது தளம், ஆற்காடு பிளாசா, பழைய எண்.38, புதிய எண்.165, ஆற்காடு ரோடு, கோடம்பாக்கம், சென்னை-600024 போன்: 99620 05554 / 99414 43159

அசையா சொத்து இ-ஏல விற்பனைக்கான பொது அறிவிப்பு

[illegible]

வரிசை எண். 1: கடன்தாரர்கள்: 1. திரு. U.K.சந்துராம், கடன் நிலுவை தொகை: ரூ. 22,89,413/- (06.08.2021 அன்றுள்ளபடி) கடன் கணக்கு எண். PHR008200281596

அசையா சொத்துக்களின் விவரங்கள்: [illegible]

குறைந்தபட்ச விலை: ரூ.21,32,100/- முன்வைப்பு தொகை: ரூ.2,13,210/- ஏல உயர்வு தொகை: ரூ.10,000/-

வரிசை எண். 2: கடன்தாரர்கள்: 1. திரு. சுப்ரமணி மற்றும் 2. திருமதி.காஞ்சனா, கடன் நிலுவை தொகை: ரூ.6,27,234/- (06.08.2021 அன்றுள்ளபடி) கடன் கணக்கு எண். PHR008200929688

அசையா சொத்துக்களின் விவரங்கள்: [illegible]

குறைந்தபட்ச விலை: ரூ.10,01,875/- முன்வைப்பு தொகை: ரூ.1,00,188/- ஏல உயர்வு தொகை: ரூ.10,000/-

வரிசை எண். 3: கடன்தாரர்கள்: 1. திரு. சுந்தரமகாலிங்கம் மற்றும் 2. திருமதி.சாந்தி, கடன் நிலுவை தொகை: ரூ.26,91,111/- (06.08.2021 அன்றுள்ளபடி) கடன் கணக்கு எண். PHR086502275631

அசையா சொத்துக்களின் விவரங்கள்: [illegible]

குறைந்தபட்ச விலை: ரூ.16,88,794/- முன்வைப்பு தொகை: ரூ.1,68,880 ஏல உயர்வு தொகை: ரூ.10,000/-

பொது மின் ஏலத்திற்கான தேதி / நேரம்

28.09.2021 அன்று காலை 11.00 மணி முதல் நண்பகல் 12.00 வரை

web portal https://www.bankeauctions.com மூலம் ... [illegible]

EMD உடன் விலைக்குறிப்பு சமர்ப்பிக்கும் கடைசி தேதி மற்றும் நேரம்: 24.09.2021 அன்று மாலை 5.00 மணிக்குள்

[illegible] https://www.axisbank.com/auction-retail ... M/s. C1 India Pvt. Ltd., ... Web Portal: https://www.bankeauctions.com ...

தேதி: 09.08.2021 இடம்: சென்னை — அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, ஆக்சிஸ் பேங்க் லிமிடெட்.

அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் மூன்று புதிய பாடப் பிரிவுகள்

சென்னை, ஆக. 16: தமிழகத்தில் உள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் மாணவர்களுக்கான வேலைவாய்ப்பை அதிகரிக்கும் மூன்று புதிய பாடப்பிரிவுகள் தொடங்கப்படவுள்ளன.

தமிழகத்தில் உள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் திறன் சார்ந்த படிப்புகள் கற்றுத் தரப்படுகின்றன. 'எலக்ட்ரீசியன், பிளம்பர், பெயிண்டர், 'ஃபிட்டர்' போன்ற படிப்புகள் நடத்தப்படுகின்றன. இந்தநிலையில் புதிய படிப்புகளை தொடங்குவது குறித்து, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வி. கணேசன், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறை இயக்குநர் வீரராகவராவ் மற்றும் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

இதன்படி நவீன காலத்துக்கு தேவையான மற்றும் வேலைவாய்ப்புகளை வழங்கும் வகையில், 'மெடிக்கல் எலக்ட்ரானிக்ஸ், ரேடியாலஜி டெக்னீசியன், ஏர்கிராப்ட் மெயின்டனன்ஸ்' போன்ற படிப்புகளை புதிதாகத் தொடங்க அமைச்சர் உத்தரவிட்டுள்ளார். விரைவில் இதற்கான பணிகள் தொடங்கும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

முன்னதாக சென்னை கிண்டியில் செயல்படும் அரசு தொழிற்பயிற்சி நிலையம், திருவான்மியூர் தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகம், அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் உள்ளிட்ட இடங்களில் அமைச்சர் ஆய்வு மேற்கொண்டதாக வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி துறை அலுவலகம் தெரிவித்துள்ளது.

சமையல் எண்ணெயை பயோ டீசலாக மாற்றும் திட்டம் தொடக்கம்

சென்னை, ஆக. 16: சென்னையில் ஒரு முறை பயன்படுத்திய சமையல் எண்ணெயை பயோ டீசலாக மாற்றும் திட்டம் திங்கள்கிழமை தொடக்கப்பட்டது.

சென்னையில் ஒருமுறை பயன்படுத்தும் சமையல் எண்ணெயை மறு உபயோகம் செய்வதைத் தடுக்கும் வகையில் அதை பயோ டீசலாக மாற்றும் திட்டத்தை ஆட்சியர் ஜெ.விஜயா ராணி திங்கள்கிழமை தொடக்கி வைத்தார்.

இதுகுறித்து உணவுப் பாதுகாப்புத் துறை அதிகாரிகள் கூறுகையில், ஒரு முறை உபயோகப்படுத்திய எண்ணெயை மீண்டும் பயன்படுத்தும் போது அதில் உள்ள ஊட்டச்சத்து உள்ளிட்ட பண்புகள் பாதிக்கப்படுகின்றன. இதனால் புற்றுநோய், இதய பாதிப்பு, நெஞ்சு எரிச்சல், உயர் ரத்த அழுத்தம், உடல் பருமன், ஞாபகமறதி, கொழுப்பு மற்றும் கல்லீரல் சம்பந்தமான உடல் உபாதைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. இதைத் தவிர்க்கும் பொருட்டு இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தரங்கள் ஆணையம், பெட்ரோலியத் துறை இணைந்து ஒருமுறை உபயோகப்படுத்திய எண்ணெயை பயோ டீசலாக மாற்றும் திட்டத்தை அறிமுகப்படுத்தி உள்ளது.

இதற்காக அங்கீகரிக்கப்பட்ட 33 பயோ டீசல் தயாரிப்பாளர்கள் மற்றும் 19 அனுமதிக்கப்பட்ட நிறுவனங்கள் மூலம் பயன்படுத்திய எண்ணெயை வாங்குவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது, சென்னை மாவட்டத்தில் பயன்படுத்திய எண்ணெயை வாங்க envogreen energy என்ற நிறுவனத்துக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, சென்னை மாவட்டத்தில் நாளொன்றுக்கு 50 லிட்டர்களுக்கு மேல் பயன்படுத்தப்படும் அனைத்து உணவகங்கள், இனிப்பு மற்றும் கார வகைகள் தயாரிக்கும் கடைகள் மற்றும் துரித உணவகங்கள் ஆகியவைகளில் பயன்படுத்திய சமையல் எண்ணெயை மறுமுறை உபயோகப்படுத்தாமல் இந்த நிறுவன ஊழியர்களிடம் வழங்கலாம். இதுதொடர்பாக அனைத்து உணவக உரிமையாளர்களுக்கும் அவர்களின் சங்கம் மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றனர்.

புகார் தெரிவிக்க...: உணவு தொடர்பான புகார்கள், புகைப்படங்கள், விடியோக்களைத் தெரிவிக்க qr code scanner திட்டத்தை ஆட்சியர் விஜயா ராணி தொடக்கி வைத்தார். இதன் மூலம் மக்கள் தங்கள் புகார் தொடர்பான விடியோ, புகைப்படங்களைப் பதிவேற்றம் செய்யலாம் என உணவுப் பாதுகாப்புத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்நிகழ்ச்சியில் உணவுப் பாதுகாப்பு, தர நிர்ணய ஆணையகத்தின் மண்டல இயக்குநர் மருத்துவர். முத்துமாறன், உணவுப் பாதுகாப்புத் துறை மாவட்ட நியமன அலுவலர் மருத்துவர் சதீஷ்குமார் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

சென்னை மாவட்ட உணவு பாதுகாப்புத் துறையின் சார்பில் உணவகங்களில் உபயோகப்படுத்திய சமையல் எண்ணெயை மறுசுழற்சி மூலம் பயோ–டீசலாக மாற்றும் திட்டத்தை திங்கள்கிழமை தொடக்கி வைத்த ஆட்சியர் ஜெ.விஜயா ராணி. உடன் உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையகத்தின் மண்டல இயக்குநர் மருத்துவர்.முத்துமாறன் உள்ளிட்டோர்.

தண்டனை அல்ல...
தவம்...

☞ வீட்டில் இருப்பதும்,
வெளியில் செல்லாமல்
இருப்பதும்சிறை வாசமில்லை
தீநுண்மி அரக்கனை
அடித்து விரட்டுவதற்கு
நாம் செய்யும் தவம்.

தகவல்:
தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர்.
மருத்துவப் பல்கலைக்கழகம்.

மத்திய பல்கலை. பொது நுழைவுத் தேர்வு: விண்ணப்பப் பதிவு தொடக்கம்

சென்னை, ஆக. 16: மத்திய பல்கலைக்கழகங்களில் இளநிலை, முதுநிலை படிப்புகளில் சேருவதற்கான பொதுநுழைவுத் தேர்வுக்கு (சியூசெட்) விண்ணப்பப்பதிவு திங்கள்கிழமை முதல் தொடங்கியுள்ளது.

தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகம் உள்பட 12 மத்தியப் பல்கலைக்கழகங்களில் சேர பொது நுழைவுத் தேர்வு நடத்தப்பட உள்ளது. இந்த நுழைவுத் தேர்வு செப்.15, 16, 23, 24 ஆகிய தேதிகளில் நடைபெற உள்ளது.

இந்தப் பொது நுழைவுத் தேர்வானது 2 மணி நேரம் கணினி வழியில் நடத்தப்படுகிறது. இந்தத் தேர்வில் கேட்கப்படும் கேள்விகளுக்குத் தவறான பதில் ஒன்றுக்கு 0.25 மதிப்பெண் குறைக்கப்படும். இந்நிலையில் தேர்வுக்கான விண்ணப்பப் பதிவு தொடங்கியுள்ளது. மத்தியப் பல்கலைக்கழகங்களில் படிக்க விரும்புவோர், தங்களுக்கு ஏற்ற படிப்புகளைத் தேர்வு செய்து செப்டம்பர் 2-ஆம் தேதி வரை இணையவழியில் விண்ணப்பிக்கலாம். இது குறித்து கூடுதல் தகவல்களை cucet.nta.nic.in என்ற இணையதளத்தில் காணலாம்.

கைராட்டை....

சென்னை சத்தியமூர்த்தி பவனில் வடிவமைக்கப்பட்டுள்ள மகாத்மா காந்தியின் கைராட்டை சின்னத்தை திறந்து வைத்தார் நடிகர் சிவகுமார். உடன் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் கே.எஸ்.அழகிரி முன்னாள் தலைவர் கே.வி. தங்கபாலு, கைராட்டை அமைப்பாளர் விருகை பட்டாபி, மாவட்டத் தலைவர்கள் உள்ளிட்டோர்.

கரோனா இரண்டாவது தவணை தடுப்பூசி செலுத்த அலட்சியம் வேண்டாம்

சென்னை, ஆக. 16: சென்னையில் கரோனா இரண்டாவது தவணை தடுப்பூசி செலுத்த காவலர்கள் அலட்சியம் காட்ட வேண்டாம் என பெருநகர காவல்துறை ஆணையர் சங்கர் ஜிவால் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் அனுப்பிய சுற்றறிக்கை:

சென்னை பெருநகர காவல் துறையில் அண்மைகால புள்ளி விவரங்களின்படி இரண்டு தவணை தடுப்பூசி போட்டுக் கொண்டவர்களுக்கு கரோனா தொற்று பாதிப்பு மிக குறைவாகவும் மற்றும் உயிருக்கு பாதிப்பு ஏற்படுவதும் இல்லை என தெரிய வருகிறது. அதன் அடிப்படையில், சென்னை பெருநகர காவல் ஆணையரக அலுவலகத்தில் காவல்துறையினர் மற்றும் அமைச்சுப் பணியாளர்களுக்கு கரோனா தடுப்பூசி செலுத்திக் கொள்ள போதிய ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது.

முதல் தவணை தடுப்பூசி செலுத்திக் கொள்ளாத காவலர்கள், அமைச்சுப் பணியாளர்கள் தவிர்க்காமல் தடுப்பூசி செலுத்திக் கொள்ள முன் வரவேண்டும். இது உங்களையும் உங்கள் குடும்பத்தினரையும் காப்பாற்றும். அதேபோல முதல் தவணை தடுப்பூசி போட்டவர்கள் இரண்டாம் தவணை தடுப்பூசி போட்டுக் கொள்வதில் அலட்சியமாகவும், கவனக்குறைவாகவும் இருப்பது தெரிய வருகிறது. இது முற்றிலும் தவறான செயலாகும்.

இரண்டாவது தவணை தடுப்பூசி செலுத்திக் கொள்வது தான் பாதுகாப்பானதாகும். இரண்டாவது தவணை தடுப்பூசி செலுத்திக் கொள்ளாதவர்கள் காரணம் ஏதும் கூறாமல் தாமாகவே முன் வந்து தடுப்பூசி செலுத்திக் கொள்ள வேண்டும்.

நற்றமிழ்ப் பாவலர் விருதுக்கு விண்ணப்பங்கள் வரவேற்பு

தமிழக அரசு தகவல்

சென்னை, ஆக. 16: தமிழக அரசின் அகரமுதலி இயக்ககத்தின் சார்பில் வழங்கப்படும் நற்றமிழ்ப் பாவலர் விருதுக்குத் தகுதியானவர்கள் ஆக. 31-ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: தூய தமிழ்ச் சொற்களால் கவிதை புனையும் படைப்பாளர்களை ஊக்கப்படுத்தும் வகையில் தமிழக அரசு நற்றமிழ்ப் பாவலர் விருது அறிவித்துள்ளது. புதுக்கவிதைகளில் மொழிக் கலப்பில்லாத நல்ல தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்தினால் அச்சொற்களின் வீச்சு மக்களிடமும், எதிர்காலத் தலைமுறையினரிடமும் எளிதாகச் சென்றடையும்.

இதைக் கருத்தில் கொண்டு தங்களது கவிதைப் படைப்புகளில் (மரபுக்கவிதை, புதுக்கவிதை) பிறமொழிக் கலப்பின்றி தூயதமிழ்ச் சொற்களையும், புதிய தமிழ்க் கலைச் சொற்களையும் பயன்படுத்தும் பாவலர்கள் இருவரைத் தேர்ந்தெடுத்து தமிழ் அகராதியியல் விழாவின்போது தங்கப்பதக்கம் மற்றும் நற்றமிழ்ப் பாவலர் விருது வழங்கி விருதுத் தொகையாக தலா ரூ.50,000 வழங்கப்படும்.

இந்த விருதுக்கு விண்ணப்பிப்பவர்கள் அதற்கான விண்ணப்பப் படிவத்தைச் சொற்குவை.காம் (sorkuvai.com) என்ற வலைதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து, நிறைவு செய்து ஆக.31-ஆம் தேதிக்குள் paavalarvirudu@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ அல்லது 'இயக்குநர், செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் திட்ட இயக்ககம், நகர நிர்வாக அலுவலக வளாகம், முதல் தளம், எண் 75, சாந்தோம் நெடுஞ்சாலை, எம்ஆர்சி நகர், சென்னை-28' என்ற முகவரிக்கோ அனுப்பி வைக்க வேண்டும்.

மேலும் தங்கள் படைப்புகளில் தூயதமிழ் மட்டுமே பயன்படுத்தப்படுகிறது என்பதை உறுதிப்படுத்தும் சான்றுகளாக, கடைசியாக வெளிவந்த இரண்டு கவிதை நூல்களை இந்த இயக்ககத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

கரோனா: 1,851 பேருக்கு புதிதாக தொற்று

சென்னை, ஆக. 16: தமிழகத்தில் புதிதாக 1,851 பேருக்கு கரோனா தொற்று திங்கள்கிழமை கண்டறியப்பட்டுள்ளது.

திங்கள்கிழமை வெளியான பரிசோதனை முடிவுகளில் அதிகபட்சமாக கோவையில் 217 பேருக்கும், சென்னையில் 205 பேருக்கும், ஈரோட்டில் 170 பேருக்கும், தஞ்சாவூரில் 127 பேருக்கும், சேலத்தில் 123 பேருக்கும், செங்கல்பட்டில் 112 பேருக்கும் பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளது.

இதனிடையே, மேலும் 1,911 பேர் கரோனாவிலிருந்து விடுபட்டு வீடு திரும்பியுள்ளனர். தமிழகத்தில் கரோனா பாதிப்புக்குள்ளாகி மேலும் 28 பேர் பலியாகினர்.

https://t.me/Tamil_epaper2

Bank of Baroda பெருங்குடி கிளை மனை எண்.231, ராஜீவ் காந்தி சாலை, பெருங்குடி, சென்னை-600 096 Ph. 044-2345 4301

கடன்தாரர்களுக்கான அறிவிப்பு

2002-ம் வருடத்திய பத்திரமயமாக்குதல் மற்றும் நிதிச்சொத்துகள் சீரமைப்பு மற்றும் செக்யூரிட்டி இன்ட்ரஸ்ட் அமலாக்கச் சட்டத்தின் 13(2) பிரிவின் கீழ் அனுப்பப்பட்ட நோட்டீஸ்

கடன்தாரர்: M/s.VSU Wingo, Mr.V.C.சீனிவாசன், 4/341, ராஜீவ் காந்தி ரோடு (OMR) YMCA ... சென்னை-600041 ... Mr.V.C.சீனிவாசன் ... சென்னை-600041.

வ. எண்	கடன் வசதி	கடன் தொகை	வட்டி விகிதம்	12.07.2021 அன்றுள்ளபடி நிலுவைத்தொகை
1.	Cash Credit (31720500000016)	Rs.17,00,000/-	10.75%	Rs.17,43,508.59 + ...
2.	Term Loan-1 (31720600001058)	Rs.82,88,000/-	8.75%	Rs.59,55,297.29 + ...
3.	FITL-1 (31720600001639)	Rs.93,389/-	9.60%	Rs.50,241.66 + ...
4.	FITL-2 (31720600001734)	Rs.1,55,000/-	7.60%	Rs.1,59,646.37 + ...
5.	WCTL-1 (31720600001733)	Rs.3,45,000/-	8.10%	Rs.3,56,414.54 + ...

சொத்து விவரம்: Hypothecation of plant and machinery 2) Hypothecation of stock

தேதி: 26.07.2021 இடம்: சென்னை — அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, பேங்க் ஆஃப் பரோடா

IREL (India) Limited (Formerly Indian Rare Earths Limited) A Govt. of India Undertaking, Manavalakurichi, Tamil Nadu, e-mail: purchase-mk@irel.co.in, An ISO 9001, 14001 & 45001 Company, Phone: 04651-280402, CIN: U15100MH1950GOI008187

MK/P. ADVT/2021-22/05 — **TENDER NOTICE** — 14-08-2021

IREL, MK invites Request for Proposal for the following items / job descriptions:

Tender No.	Description
GEM/2021/B/1430203	Supply, Supervision of Installation and Commissioning of Rare Earth Roll Magnetic Separator (RERMS) - 3 Nos.

For further details visit https://gem.gov.in, www.irel.co.in and CPP Portal. Corrigendum / Extension, if any, will be hosted in the above websites only. Sd/- HOD(Purchase)

ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட் ஃபைனான்ஸ் கம்பெனி லிட்
வாலாஜாபாத் கிளை — வாகனங்கள் விற்பனை

வ.எண்.	வாகன எண்	வாகன விவரம்	வருடம்
1	TN31AJ8030	TATA LPS 3518	2013
2	TN73X1797	MAHINDRA TOURISTER FBV-P	2011

தொடர்புக்கு : 044-27257258

அருள்மிகு காரணீஸ்வரர் திருக்கோயில், சைதாப்பேட்டை, சென்னை -15.

டெண்டருடன் இணைந்த பொது ஏல அறிவிப்பு — அறிவிப்பு நாள் 17.08.2021

வ. எண்.	குத்தகை இனம்	டெண்டர் வைப்புத் தொகை ரூபாய்	டெண்டர்/ஏல ஆரம்ப கேள்வித் தொகை ரூபாய்	குறிப்பு
1	தேங்காய் அர்ச்சனை பொருட்கள் விற்பனை செய்யும் உரிமம்	50,000.00	3,12,125.00	டெண்டர் ஏலம்
	சர்வ இனம்			
2	தேங்காய் பூவன் வாழைப்பழம் சப்ளை செய்தல்	5,000.00	-------	டெண்டர் மட்டும்
3	நித்தியப்படி மற்றும் அபிஷேக நாட்களில் மலர் மாலைகள் மற்றும் ... சப்ளை செய்தல்	5,000.00	-------	டெண்டர் மட்டும்
4	திருக்கோயிலுக்குத் தேவையான கட்டண சீட்டுகள் மற்றும் ரசீது புத்தகங்கள் அச்சிட்டு வழங்குதல்	5,000.00	-------	டெண்டர் மட்டும்

கடன் வசூல் தீர்ப்பாயம் III, சென்னை

DRC No. 79/2020 — தேதி: 13.08.2021

பேங்க் ஆப் பரோடா, பாண்டிச்சேரி ... சான்றிதழ் வைத்திருப்பவர் -Vs- M/s.அருணாச்சலம் சுகர் மில்ஸ் லிமிடெட் & பிறநபர்கள் ... சான்றிதழ் கடன்தாரர்கள்

கேட்பு அறிவிப்பு [illegible]

Union Bank of India — அசையா சொத்துக்களுக்கான சுவாதீன அறிவிப்பு. ... ரூ.4,35,959/- ... 10-08-2021 அன்று சுவாதீனப்படுத்திக் கொண்டுள்ளேன். ... தேதி: 10-08-2021, இடம்: சென்னை — அதிகாரப்பூர்வ அலுவலர், யூனியன் பேங்க் ஆப் இந்தியா [illegible]

சிட்டி யூனியன் வங்கி லிமிடெட் (CUB) — கடன் வசூல் மற்றும் நிர்வாகத் துறை ... ரூ. 11,27,540/- ... இடம்: கும்பகோணம், தேதி: 12-08-2021 — அதிகாரப்பூர்வ அதிகாரி. Website: www.cityunionbank.com [illegible]

வெள்ளிதோறும் தினமணியுடன்... வெள்ளி மணி

ஆன்மிக சிந்தனை

ஒருவன் இன்னொரு மனிதன் மீது அன்பு வைக்கும்போது பொதுவாகச் செய்யும் முதல் தவறு அந்த மனிதன் தன் மீது பதிலுக்கு அன்பு வைக்க வேண்டும்; தன்னுடைய வழியில், தன்னுடைய ஆசைகளைத் திருப்தி செய்யும் வழியில் அன்பு செலுத்த வேண்டும் என்று விரும்புவதுதான். இதுவே மனிதர்களின் துயரங்களுக்கும், ஏமாற்றங்களுக்கும், துன்பங்களுக்கும் முதல் காரணம். அன்பு செய்தல் என்றால், அது பேரம் பேசாமல் தன்னைக் கொடுப்பதுதான். இல்லையென்றால் அது அன்பு அல்ல. ஆனால், மனிதர்கள் அரிதாகவே இதை உணர்கிறார்கள். வாழ்க்கையில் அதன்படி நடந்து கொள்கிறவர்கள் அதைவிடவும் அரிது. அதன் பின்விளைவுகள் வேதனை தருவதாகவே உள்ளன.

–ஸ்ரீஅன்னை

நானே வானத்திலிருந்திறங்கின ஜீவ அப்பம்; இந்த அப்பத்தைப் புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான்.

–யோவான் 6:51

எவர்கள் நம்பிக்கை கொண்டு தம்முடைய இறைவனை முழுமையாகச் சார்ந்து இருக்கின்றார்களோ அவர்கள் மீது சைத்தானுக்கு எந்த அதிகாரமும் இல்லை.

–திருக்குர்ஆன் 16:99

இன்றும்

செவ்வாய்க்கிழமை
(17–08–2021)
பிலவ ஆண்டு, ஆவணி – 01

பிறை: வளர்பிறை.
திதி : தசமி பின்னிரவு 02.48 வரை பிறகு ஏகாதசி.
நட்சத்திரம் : கேட்டை நள்ளிரவு 01.40 வரை பிறகு மூலம்.
யோகம் : அமிர்த யோகம்.
ராகுகாலம் : பிற்பகல் 3.00 – 4.30 மணி.
எமகண்டம் : காலை 9.00 – 10.30 மணி.
சூலம் : வடக்கு.
நல்ல நேரம் : காலை 8 – 9 மணி. மாலை 5 – 6 மணி.

இன்றைய விசேஷம்: சுவாமிமலை ஸ்ரீ முருகப் பெருமான் பேராயிரம் கொண்ட தங்கப்பூமாலை சூடியருளல். மதுரை ஸ்ரீ கூடலழகர் பவனி வரும் காட்சி. மதுரை ஸ்ரீ சோமசுந்தரக் கடவுள் வளையல் விற்றருளிய லீலை. இரவு பட்டாபிஷேகம். சுவாமி அம்பாள் தங்கப் பல்லக்கில் பவனி. விருதுநகர் சுவாமி அம்பாள் விருஷப வாகன புறப்பாடு. ராமேசுவரம் சுவாமி அம்பாள் தங்கச் சப்பரத்தில் திருவீதிவுலா.

மேஷம்..... சிந்தனை
ரிஷபம்..... நட்பு
மிதுனம்..... செலவு
கடகம்..... மாற்றம்
சிம்மம்..... உழைப்பு
கன்னி..... வரவு
துலாம்..... மாறுதல்
விருச்சிகம்..... ஆசை
தனுசு..... உயர்வு
மகரம்..... லாபம்
கும்பம்..... பரிசு
மீனம்..... நலம்

நாளையும்

புதன்கிழமை
(18–08–2021)
பிலவ ஆண்டு, ஆவணி – 02

பிறை: வளர்பிறை.
திதி : ஏகாதசி நள்ளிரவு 12.36 வரை பிறகு துவாதசி.
நட்சத்திரம் : மூலம் நள்ளிரவு 12.19 வரை பிறகு பூராடம்.
யோகம் : அமிர்த யோகம்.
ராகுகாலம் : நண்பகல் 12.00 – 1.30 மணி.
எமகண்டம் : காலை 7.30 – 9.00 மணி.
சூலம் : வடக்கு.
நல்ல நேரம் : காலை 6 – 7 மணி. மாலை 4 – 5 மணி.

இன்றைய விசேஷம்: சர்வ ஏகாதசி. மதுரை ஸ்ரீசிவபெருமான் நரிகளைப் பரிகளாக்கிய திருவிளையாடல், தங்கக் குதிரையில் பவனி. ஸ்ரீபெரும்புதூர் ஸ்ரீ மணவாள மாமுனிகள் புறப்பாடு. திருப்பதி ஸ்ரீஏழுமலையப்பன் சகஸ்ர கலசாபிஷேகம். மதுராந்தகம் ஏரிகாத்த ஸ்ரீகோதண்டராம சுவாமி சிறப்பு திருமஞ்சன சேவை. பத்ராசலம் ஸ்ரீராம பிரான் புறப்பாடு. ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்ரீஆண்டாள், ஸ்ரீரங்கமன்னார் கண்ணாடி மாளிகைக்கு எழுந்தருளல்.

மேஷம்..... நிம்மதி
ரிஷபம்..... புகழ்
மிதுனம்..... கடமை
கடகம்..... நலம்
சிம்மம்..... கட்டுப்பாடு
கன்னி..... கவனம்
துலாம்..... உற்சாகம்
விருச்சிகம்..... சலனம்
தனுசு..... ஆக்கம்
மகரம்..... மாற்றம்
கும்பம்..... பணிவு
மீனம்..... உயர்வு

தினமணி இந்தியா@75
ஆகஸ்ட் 1947 - 2021

தமிழகத்தின்
தியாக தீபங்கள்

3 சுப்பிரமணிய சிவா

தமிழகத்தில் வ.உ.சிதம்பரம் பிள்ளை, சுப்பிரமணிய சிவா, சி.சுப்பிரமணிய பாரதி ஆகிய மூவரையும் 'மும்மூர்த்திகள்' என வரலாற்றாளர்கள் வர்ணிக்கின்றனர்.

வத்தலகுண்டில் 4–10–1884–இல் ராஜம் ஐயர் – நாகம்மை தம்பதிக்குப் பிறந்தார் சுப்பிரமணிய சிவா. குடும்பச் சூழல், வறுமை காரணமாக சிவாவின் பள்ளிப் படிப்புக் காலத்திலேயே பெற்றோர் திருவனந்தபுரத்தில் குடும்பத்துடன் குடியேறினர்.

1905–இல் வங்கப் பிரிவினை இந்தியாவில் சுதேசியக் கனலை மூட்டியது. விவேகானந்தரின் தாக்கம், தேசியப் பிரச்னைகளில் நாட்டம் ஆகியவை சிவாவைச் செயல்படத் தூண்டின.

1906–ஆம் ஆண்டு அங்குள்ள இளைஞர்களை ஒன்றுதிரட்டி 'தர்ம பரிபாலன சமாஜம்' எனும் அமைப்பை நிறுவினார். திருவாங்கூர் சமஸ்தான அதிபதிகள் சிவாவை திருவனந்தபுரத்தை விட்டு வெளியேற்றினர்.

இளம் வயதிலேயே திருமணமாகியிருந்த சிவா, மனைவியை வீட்டிலேயே விட்டுவிட்டு நடைப்பயணமாகவே ஊர்ஊராகப் போய் பிரசாரப் பிரளயத்தில் தன்னை மூழ்கடித்துக்கொண்டார். தேசாவேசம் மிக்க ஒரு பெரும் எழுச்சிமிகு இளைஞர் பட்டாளத்தையே தனது பேச்சாலும் எழுத்தாலும் உருவாக்கும் ஆளுமை சிவாவுக்கு அமைந்திருந்தது.

இத்தகைய எழுச்சிப் பயணத்தின் ஒரு பகுதியாகத்தான் தூத்துக்குடிக்கு வந்தார் சிவா. அங்கு வ.உ.சி.யைச் சந்தித்தார். வ.உ.சி.யின் வேண்டுகோளுக்கிணங்க அவரின் இல்லத்திலேயே தங்கி பணியாற்றினார். சுதேசிக் கப்பல் கம்பெனியை நிறுவியதுடன், 'கோரல் மில்' தொழிலாளர்களின் உரிமைப் போராட்டத்தையும் வழிநடத்திய வ.உ.சி.க்கு வலதுகரமாக மட்டுமல்ல, அனைத்துமாக விளங்கினார் சிவா. இருவரின் சொற்பொழிவுகளும் தூத்துக்குடி, திருநெல்வேலி, பாளையங்கோட்டை பகுதிகளில் தேசபக்தப் பெருநெருப்பு பற்றிப் படர்வதற்குக் காரணங்களாயின.

நீதிபதி பின்ஹே, வ.உ.சி.க்கு ராஜதுரோகக் குற்றத்துக்காக ஓர் ஆயுள் தண்டனையும், சிவாவுக்கு அடைக்கலம் கொடுத்ததற்காக ஓர் ஆயுள் தண்டனையும் என தீர்ப்பில் தனித்தனியாகக் குறிப்பிட்டு வழங்கியதிலிருந்தே சிவாவின் அதிமுக்கியத்துவம் வெளிப்படுகிறது. சுப்பிரமணிய சிவாவுக்கு 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

சுப்பிரமணிய சிவா 6 ஆண்டுகள் சிறைவாசத்துக்குப் பின் விடுவிக்கப்பட்டார். சிறைக்குள் கம்பளி ரோமம் நறுக்குதல், நீரில் கம்பளியை ஊறவைத்து உலர்த்துதல் போன்ற பணிகளைச் செய்யுமாறு வற்புறுத்தப்பட்டார். இதனால் வெளியில் வருகிறபோது தொழுநோயோடு வந்தார். 1921–இல் அரசு நிந்தனைச் சொற்பொழிவுக்காக இரண்டாம் முறையாக இரண்டரை ஆண்டுகள் சிறை வைக்கப்பட்டார். ஞானபானு, பிரபஞ்சமித்திரன், இந்திய தேசாந்திரி ஆகிய இதழ்களைத் தனித்துவத்துடன் நடத்திய சுப்பிரமணிய சிவா 30 நூல்களை எழுதியுள்ளார்.

'பாரதாஸ்ரமம்' என்ற அமைப்பைத் தொடங்கி தேசபக்தப் பணிகளை ஓய்வொழிச்சலில்லாது இறுதிவரை செய்துவந்த சுப்பிரமணிய சிவா, பாரதமாதா ஆலயத்தைப் பாப்பாரப்பட்டியில் அமைக்க தேசபந்து சி.ஆர்.தாஸைக் கொண்டு அடிக்கல் நாட்டினார். அப்பணி முழுமை பெறுவதற்கு முன்னரே 1925–இல் காலமானார். அப்போது அவருக்கு வயது 41.

–த. ஸ்டாலின் குணசேகரன்

கடந்த நிதியாண்டில் ரூ.794 கோடி வருவாய் ஈட்டி சென்னை துறைமுகம் சாதனை

துறைமுகத் தலைவர் பி.ரவீந்திரன்

திருவொற்றியூர், ஆக.16: கடந்த 2020–21–ஆம் நிதியாண்டில் ரூ.794 கோடியை மொத்த வருவாயாக ஈட்டி சென்னை துறைமுகம் சாதனை புரிந்துள்ளதாக துறைமுகத் தலைவர் பி.ரவீந்திரன் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தார்.

75–ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு சென்னைத் துறைமுகத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் துறைமுகத் தலைவர் பி.ரவீந்திரன் கலந்து கொண்டு தேசியக் கொடியை ஏற்றி வைத்து தொழில் பாதுகாப்புப் படையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுப் பேசியது:

கரோனா பெருந்தொற்றால் கடல்சார் வர்த்தகம் பெருமளவு பாதிக்கப்பட்ட நிலையிலும் கடந்த நிதியாண்டில் சுமார் 44 மில்லியன் மெட்ரிக் டன் சரக்குகளை துறைமுகம் கையாண்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் சுமார் 15.5 மில்லியன் மெட்ரிக் டன் கையாண்டுள்ளது. கடந்த நிதி ஆண்டில் சுமார் 14 லட்சம் சரக்குப் பெட்டகங்களை இத் துறைமுகம் கையாண்டுள்ளது. கடந்த நிதியாண்டில் தனது ஒட்டு மொத்த செயல்பாட்டின் மூலம் ரூ.794 கோடி மொத்த வருவாயாக ஈட்டியுள்ளது சென்னை துறைமுகம். இதில் சுமார் ரூ.550 கோடி சம்பளம் மற்றும் இயக்கம் சார்ந்த செலவினங்களுக்கு செலவிடப்பட்டுள்ளது. சிறப்பான நிர்வாகத்தின் மூலம் கணிசமாக செலவினங்கள் குறைக்கப்பட்டு உள்ளது.

பயணிகள் கப்பல் போக்குவரத்து: கடல்சார் சுற்றுலாவை ஊக்குவிக்கும் வகையில் காரைக்கால் துறைமுகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. சென்னை, புதுச்சேரி, கடலூர், நாகப்பட்டினம், காரைக்கால் மற்றும் கடலோர நகரங்களை இணைக்கும் வகையில் பயணிகள் கப்பல் போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திடும் இரண்டு தனியார் நிறுவனங்கள் தங்களது விருப்ப மனுக்களைத் தெரிவித்துள்ளன. இதுகுறித்து விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அனுமதி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மதுரவாயல் மேம்பாலத் திட்டம் மாற்றிமைக்கப்படுகிறது: எண்ணூர், மணலி சாலை விரிவாக்க சாலை விரிவாக்கத் திட்டம் ஒரு சில இடங்களைத் தவிரபெரும்பாலான இடங்களில் பணிகள் முடிக்கப்பட்டு தடையற்ற போக்குவரத்து நடைபெற்று வருகிறது. பல்வேறு பிரச்னைகளால் நீண்ட காலமாக கிடப்பில் இருந்து வரும் மதுரவாயல் உயர்மட்ட மேம்பாலத் திட்டம் தற்போது புதியதாக வடிவமைக்கப்பட்டு திட்டப் பணிகள் தொடங்க உள்ளது என்றார் ரவீந்திரன்.

துறைமுகத் துணைத்தலைவர் எஸ். பாலாஜி அருண்குமார், தலைமை கண்காணிப்பு அதிகாரி எஸ்.முரளி கிருஷ்ணன், துறைத் தலைவர்கள் கிருபானந்தசாமி, ரமணமூர்த்தி, ஜெயசிம்மா, மக்கள் தொடர்பு அதிகாரி சன்னி ராஜ், பட்டிமன்ற பேச்சாளர் மாலதி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

புத்தக வெளியீடு....

சென்னை கொரட்டூரில் திங்கள்கிழமை நடைபெற்ற புத்தக வெளியீட்டு நிகழ்ச்சியில், ஹரிகதா(ஆங்கிலப் புத்தகம்) மற்றும் பாரதியப் பெண்மணிகள் என்று இரு புத்தகங்களை அண்ணா பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணை வேந்தர் ஆ.கலாநிதி வெளியிட, பெற்றுக்கொள்கிறார் எழுத்தாளர் கோதை ஜோதிலட்சுமி. உடன் தமிழ்நாடு வித்யாபாரதியின் தலைவர் டி.சக்கரவர்த்தி, மாநில அமைப்புச் செயலர் உ.சுந்தர். விஜய ஸ்ரீ ஹரிகதா பள்ளியின் நிர்வாகி நிர்மலா. இந்நிகழ்ச்சியில் காணொலி மூலம் பங்கேற்றார் தொழிலதிபர் நல்லி குப்புசாமி.

திமுக நிர்வாகி தீக்குளிக்க முயற்சி

திருவள்ளூர், ஆக. 16: திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு திடீரென மண்ணெண்ணெய் ஊற்றி திமுக நிர்வாகி தீக்குளிக்க முயற்சித்தார்.

பள்ளிப்பட்டு ஊராட்சி ஒன்றியத்துக்கு உள்பட்ட சாமந்தவாடா கிராமத்தைச் சேர்ந்த திமுக கிளை நிர்வாகி மோகன்(60). இவரது மனைவி தனலட்சுமி(58) , கடந்த ஆண்டு ஆண்டு நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில் ஊராட்சி மன்றத் தலைவருக்கு போட்டியிட்டார்.

இந்த நிலையில் அஞ்சல் வாக்குகள் எண்ணாத நிலையில் 4 வாக்குகள் வித்தியாசத்தில் முறைகேடு செய்து தோல்வி அடையச் செய்ததாகவும், அதனால் மீண்டும் மறுவாக்கு எண்ணிக்கை கோரி தமிழக தேர்தல் ஆணையம், திருவள்ளூர் மாவட்ட ஆட்சியரிடமும் தொடர்ந்து கோரிக்கை மனு அளித்தும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று மோகன் தெரிவித்து வந்தார்.

இந்த நிலையில் திங்கள்கிழமை மோகன் ஆட்சியர் அலுவலகத்துக்கு வந்துள்ளார். அப்போது, திடீரென மண்ணெண்ணெய் ஊற்றி மோகன் தீக்குளிக்க முயற்சித்தார். அங்கிருந்த அதிகாரிகள் மற்றும் போலீஸார் ஆகியோர் விரைந்து வந்து தண்ணீர் ஊற்றி மோகனைக் காப்பற்றினர்.

கிரசென்ட் கல்வி நிறுவனத்தில் சுதந்திர தின விழா

https://t.me/Tamil_epaper2

தாம்பரம், ஆக.16: வண்டலூர் கிரசென்ட் அறிவியல் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற சுதந்திர தின விழாவில் கிராமப்புற அரசுப் பள்ளி மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

நிறுவன வேந்தர் பிஎஸ்ஏ ஆரிப் புகாரி ரஹ்மான் தேசியக் கொடி ஏற்றி வைத்தார். கிராமப்புற அரசுப் பள்ளி மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் தத்தெடுக்கப்பட்ட கீரப்பாக்கம் கரசங்கால் கிராமங்களைச் சேர்ந்த 40 அரசுப் பள்ளி மாணவர்கள் மற்றும் பள்ளி ஆசிரியர்களுக்கு பரிசுடன் சான்றிதழ்களையும் ஆரிப் புகாரி ரஹ்மான் வழங்கினார். விளையாட்டு போட்டிகளில் பங்கேற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

விளையாட்டு மைதானத்தைச் சுற்றிலும் 75 மரக்கன்றுகள் நடப்பட்டன. ஆசிரியர்கள், கல்லூரி பணியாளர்களுக்கு ஓட்டப் பந்தயம் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன.

துணைவேந்தர் ஏ.பீர்முகமது, பதிவாளர் ஏ.ஆசாத், இணைப் பதிவாளர் ராஜா உசேன், முது நிலை பொதுமேலாளர் வி.என். ஏ.ஜலால், விளையாட்டுத்துறை இயக்குநர் செல்வகுமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

திமுக தொடர்ந்த நீதிமன்ற அவமதிப்பு வழக்கு முடித்து வைப்பு

சென்னை, ஆக.16: உள்ளாட்சித் தேர்தல் நடத்தப்படவில்லை எனக் கூறி திமுக தொடர்ந்த அவமதிப்பு வழக்கு முடித்து வைக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் உள்ளாட்சி அமைப்புகளுக்கு 2017–ஆம் ஆண்டு நவ.17–ஆம் தேதிக்குள் தேர்தல் நடத்த வேண்டும் என சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தது. அந்த உத்தரவை அமல்படுத்தவில்லை எனக் கூறி, தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, ஊராட்சி நிர்வாகத் துறைச் செய லாளர் ஆகியோருக்கு எதிராக திமுக சார்பில் நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தொடரப்பட்டது.

இந்த வழக்கு, சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள் எம்.எம்.சுந்தரேஷ், எஸ்.எம்.சுப்ரமணியம் ஆகியோர் முன்பு திங்கள்கிழமை விசாரணைக்கு வந்தது.

அப்போது, உச்சநீதிமன்ற உத்தரவு படி உள்ளாட்சித் தேர்தலை நடத்துவதற்கானநடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக அரசு தரப்பில் கூறப்பட்டது. இதைப் பதிவு செய்த நீதிபதிகள், நீதிமன்ற அவமதிப்பு வழக்கை முடித்து வைத்தனர்.

30–ஆம் ஆண்டு ராஜீவ் ஜோதி மத நல்லிணக்க யாத்திரை தொடக்கம்

ஸ்ரீபெரும்புதூர், ஆக. 16: 30–ஆம் ஆண்டு ராஜீவ் ஜோதி மத நல்லிணக்க யாத்திரை ஸ்ரீபெரும்புதூரில் இருந்து திங்கள்கிழமை தொடங்கியது. இந்த யாத்திரை தில்லியை ஆக. 19–இல் சென்றடைகிறது.

30–ஆம் ஆண்டு ராஜீவ் ஜோதி மத நல்லிணக்க யாத்திரை தொடக்க விழா ஸ்ரீபெரும்புதூரில் உள்ள ராஜீவ் காந்தி நினைவிடத்தில் திங்கள்கிழமை தொடங்கியது.

ஸ்ரீபெரும்புதூர் எம்எல்ஏ கு.செல்வபெருந்தகை, கன்னியாகுமரி எம்.பி. விஜய் வசந்த் ஆகியோர் ஜோதியை ஏற்றிவைத்து, யாத்திரையைத் தொடக்கி வைத்தனர்.

மாவட்ட காங்கிரஸ் தலைவர் அளவூர் நாகராஜ், ராஜீவ் காந்தி நினைவிட சீரமைப்புக் குழு உறுப்பினர் முருகானந்தம், ஸ்ரீபெரும்புதூர் நகர காங்கிரஸ் தலைவர் எஸ்.ஏ.அருள்ராஜ், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

ராஜீவ் காந்திக்கு ஆகஸ்ட் 20–இல் 77– ஆவது பிறந்தநாளாகும்.

அவரது பிறந்த நாளை முன்னிட்டு இந்த யாத்திரை பல்வேறு மாநிலங்களின் வழியாக சாலை மார்கமாகச் சென்று தில்லியில் உள்ள ராஜீவ் காந்தியின் சமாதி உள்ள வீர்பூமியில் ஆகஸ்ட் 19–இல் காங்கிரஸ் கட்சியின் தலைவர்கள் சோனியா காந்தி, ராகுல் காந்தி ஆகியோரிடம் கர்நாடக மாநில ஐஎன்டியுசி தலைவர் எஸ்.எஸ். பிரகாசம் ஒப்படைக்க உள்ளார் என்று காங்கிரஸார் தெரிவித்தனர்.

கரோனாவால் பெற்றோரை இழந்த 2 குழந்தைகளுக்கு தலா ரூ. 5 லட்சம் அளிப்பு

செங்கல்பட்டு, ஆக. 16: கரோனா தொற்றால் பெற்றோரை இழந்த இரு குழந்தைகளுக்கு தலா ரூ. 5 லட்சம் நிதிக்கான பத்திரம் வழங்கப்பட்டது.

கரோனா தொற்றால் பெற்றோர் இருவரையும் இழந்த ஆதரவற்ற குழந்தைகளுக்கு ரூ. 5 லட்சம் நிதியுதவி வழங்கப்படும் என தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்திருந்தார்.

இந்நிலையில், செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் கோட்டம், சேலையூரைச் சேர்ந்த குழந்தைகளின் பாதுகாவலரான கௌசல்யாவிடம், முதல்வரின் பொது நிவாரண நிதியிலிருந்து இரண்டு குழந்தைகளுக்கு தலா ரூ. 5 லட்சம் வீதம் ரூ. 10 லட்சத்துக்கான வைப்புத் தொகை பத்திரத்தினை ஆட்சியர் ஆர்.ராகுல் நாத் வழங்கினார்.

மாவட்டக் குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் எம்.மதியழகன் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நேரடி நெல் கொள்முதல் மையம்

அமைச்சர் தொடக்கி வைப்பு

திருவள்ளூர், ஆக. 16: திருவள்ளூர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நேரடி நெல் கொள்முதல் மையத்தை பால்வளத் துறை அமைச்சர் சா.மு.நாசர் திங்கள்கிழமை தொடக்கி வைத்தார்.

அவர் செய்தியாளர்களிடம் கூறியது: திருவள்ளூர் மாவட்டத்தில் சொர்ணவாரி பருவத்தில் 40 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் நெல் பயிரிடப்பட்டுள்ளது. வெளிச்சந்தையில் வியாபாரிகள் ஒரு கிலோ நெல் ரூ. 17.50–க்கு கொள்முதல் செய்கின்றனர். அரசு நெல் கொள்முதல் நிலையத்தில் ஒரு கிலோ ரூ. 19.50–என கூடுதல் விலைக்கு வாங்குகின்றனர்.

திருவள்ளூர் பகுதியில் கடந்த ஆண்டு 12–ஆக இருந்த நெல் கொள்முதல் நிலையங்கள் 46–ஆக உயர்ந்துள்ளன. மேலும், 62 நிலையங்களாக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது. இவற்றில் இடைத்தரகர்கள் நெல்லை விற்பனை செய்வது தெரியவந்தால், விவசாயிகள் இலவச தொலைபேசி எண்–18005997621, கட்செவி அஞ்சல் எண்–9840320626 ஆகியவற்றில் புகார் தெரிவிக்கலாம் என்றார்.

நிகழ்ச்சியில், ஆட்சியர் ஆல்பி ஜான் வர்கீஸ், சட்டப்பேரவை உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன், கூட்டுறவு துறை இணைப் பதிவாளர் ஜெயஸ்ரீ உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

9 மார்க்கங்களில் ஓடும் ரயில்களின் வேகம் அதிகரிக்கப்படும்

தெற்கு ரயில்வே பொதுமேலாளர் தகவல்

சென்னை, ஆக.16: தெற்கு ரயில்வேயில் 14 மார்க்கங்களில் ஓடும் ரயில்களின் வேகம் அதிகரிக்கப்பட்டுள்ளன. மேலும் 9 மார்க்கங்களில் ஓடும் ரயில்களின் வேகம் விரைவில் அதிகரிக்கப்படும் என்று தெற்கு ரயில்வே பொதுமேலாளர் ஜான் தாமஸ் தெரிவித்தார்.

பெரம்பூர் ரயில்வே மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்பட்ட சுதந்திர தின விழாவில், தெற்கு ரயில்வே பொதுமேலாளர் ஜான் தாமஸ், தேசிய கொடியேற்றி ரயில்வே பாதுகாப்புப் படை வீரர்களின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டு பேசியது:

தமிழகம்,கேரளத்தில் ஆக்சிஜன் தட்டுப்பாட்டை போக்கும் வகையில், 214 ஆக்சிஜன் சிறப்பு ரயில்கள் இயக்கப்பட்டன. கரோனா இரண்டாம் அலை உச்சத்தின்போது, பெரம்பூர் ரயில்வே மருத்துவமனையில் தனி வார்டு உருவாக்கி, கரோனா நோயாளிகளுக்காக, 80 படுக்கைகளில் இருந்து 280 படுக்கைகளாக அதிகரிக்கப்பட்டன. இதன்மூலம், மருத்துவ உள்கட்டமைப்பு வலுப்படுத்தப்பட்டது.

ரூ.943.11 கோடி வருவாய்: கரோனா மற்றும் பொதுமுடக்கம் எங்கள் செயல்பாடுகளை கடுமையாக கட்டுப்படுத்தின. இருப்பினும், 2020–21–ஆம் ஆண்டில் 26.85 மில்லியன் டன் சரக்குகள் ஏற்றப்பட்டன. குறிப்பாக, 2021–ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் ஜூலை வரை 9.43 மில்லியன் சரக்குகள் ஏற்றப்பட்டன. இதன் மூலமாக, ரூ. 943.11 கோடி வருவாய் ஈட்டப்பட்டது.

2020–21–ஆம் ஆண்டில் பயணிகள் போக்குவரத்து மிகவும் பாதிக்கப்பட்டது. ஆனாலும், இந்த ஆண்டில் 92 சதவீதம் ரயில்கள் இயக்கப்படுகின்றன. 2021–ஆம் ஆண்டு ஏப்ரல்–ஜூலை இடையே 6 கோடியே 40 லட்சம் பேர் பயணம் செய்துள்ளனர். குறிப்பிட்ட நேரத்தில் ரயில்கள் அடைவதில் தெற்குரயில்வே இரண்டாவது இடத்தை (97.6 சதவீதம்) பிடித்துள்ளது.

இரட்டைபாதை பணிகள் 2020–21–ஆம்ஆண்டு காலத்தில் ஏழு மார்க்கங்களில் இரட்டை பாதைப்பணிகள் நிறைவடைந்தன. 2021–22 முதல் காலாண்டில் , மதுரை–போடிநாயக்கனூர் அகலப்பாதை திட்டத்தில் ஆண்டிப்பட்டி–தேனி மார்க்கம், தாம்பரம்–செங்கல்பட்டு 3–ஆவது பாதை திட்டத்தில் ஒரு பகுதியான தாம்பரம்–கூடுவாஞ்சேரி மார்க்கத்தில் பணிகள் நிறைவடைந்துள்ளன. தட்டப்பாறை–மிளவிட்டன் மார்க்கத்தில் பாதுகாப்பு ஆணையர் ஆய்வு விரைவில் நடைபெறவுள்ளது.

தெற்கு ரயில்வேயில் 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் 2021–ஆம் ஆண்டு ஜூலை வரை 14 மார்க்கங்களில் ஓடும் ரயில்களின் வேகம் அதிகரிக்கப்பட்டுள்ளன. மேலும் 9 மார்க்கத்தில் ஓடும் ரயில்களின் வேகம் விரைவில் அதிகரிக்கப்படும் என்றார் ஜான் தாமஸ். விழாவில் கூடுதல் பொதுமேலாளர் பி.ஜி.மல்லையா உள்பட பலர் கலந்துகொண்டனர்.

அனைத்துத் துறைகளிலும் வேகமாக வளரும் இந்தியா வல்லரசாகும்

விஜடி வேந்தர் ஜி.விசுவநாதன்

விழாவில் புகைப்பட கண்காட்சியை திறந்துவைத்துப் பார்வையிட்ட விஜடி வேந்தர் ஜி.விசுவநாதன். உடன் விஜடி துணைத்தலைவர் ஜி.வி.செல்வம் உள்ளிட்டோர்.

வேலூர், ஆக.16: அனைத்துத் துறைகளிலும் வேகமாக வளர்ந்து வரும் இந்தியா வல்லரசாகும் வாய்ப்புள்ளதாக விஜடி வேந்தர் ஜி.விசுவநாதன் தெரிவித்தார்.

நாட்டின் 75–ஆவது சுதந்திர தினவிழா, பாரதியார், நேதாஜியின் 125–ஆவது ஆண்டு பிறந்த நாள் விழா ஆகிய முப்பெரும் விழா வேலூர் விஜடி பல்கலைக்கழகத்தில் ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்பட்டது.

இதில், தேசியக் கொடியை ஏற்றி வைத்து விஜடி வேந்தர் ஜி.விசுவநாதன் பேசியது: அனைத்துத் துறைகளிலும் வேகமாக வளர்ந்து வருவதால் இந்தியா வல்லரசாக உயர வாய்ப்புள்ளது. நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 3.05 டிரில்லியன் டாலராக உள்ளது. இதை பிரதமர் 5 டிரில்லியன் டாலராக உயர்த்த கூறியுள்ளார். இதை நிறைவேற்றிட அனைவரும் கடினமாக உழைக்க வேண்டும்.

இந்தியர்களின் தனிநபர் வருமானத்தை உயர்த்த வேண்டும். இதை சாத்தியமாக்க அனைவருக்கும் உயர்கல்வி கிடைக்க அரசு வழிவகை செய்ய வேண்டும். மத்திய, மாநில அரசுகள் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும். இந்தியாவில் வரி செலுத்த தகுதியுடையோர் அனைவரும் தவறாமல் வரி செலுத்தி நாட்டை வளர்ச்சிப் பாதைக்கு எடுத்துச் செல்ல வேண்டும். விஜடி மாணவ, மாணவிகள் உள்பட அனைவரும் நேர்மையாகவும் சமுதாயத்தில் சிறந்த தலைவராகவும் இருக்க வேண்டும் என்றார்.

விழாவையொட்டி தேசிய சிந்தனைக் கழகம், விஜடி இணைந்து புகைப்பட கண்காட்சியை விஜடி அண்ணா கலையரங்கில் நடத்தின. வேந்தர் ஜி.விசுவநாதன் புகைப்பட கண்காட்சியை திறந்து வைத்து நேதாஜி, பாரதியாரின் வீரதீர செயல்களை நினைவு கூர்ந்தார். முன்னதாக மத்திய, தக வல், ஒளிபரப்புத் துறை இணை அமைச்சர் க.முருகன் கணொலிக் காட்சி மூலம் புகைப்படக் கண்காட்சியில் பங்கேற்று கட்டபொம்மன், பூலித்தேவன், மருது சகோதரர்கள், தீரன் சின்னமலை, வ.உ.சி., பாரதியார் உள்பட பல தமிழர்களின் சுதந்திர போராட்டப் பங்களிப்பை நினைவுகூர்ந்து பேசினார்.

விழாவில் விஜடி துணைத்தலைவர் ஜி.வி.செல்வம், துணைவேந்தர் ராம்பாபுகொடாலி, இணை துணைவேந்தர் எஸ்.நாராயணன், பதிவாளர் கே.சத்யநாராயணன், பேராசிரியர்கள் பலர் பங்கேற்றனர்.

முருகன் கோயில் தக்கார் பொறுப்பேற்பு

திருத்தணி, ஆக.16: திருத்தணி முருகன் கோயிலில் தக்காராக லட்சுமணன் பொறுப்பேற்றார்.

இங்கு கடந்த 10 ஆண்டுகளாக ஜெய்சங்கர் தக்காராக பணியாற்றி வந்தார். திமுக ஆட்சி வந்ததால், தக்கார் ஜெய்சங்கர் தனது பதவியை ராஜிாமா செய்தார். இதையடுத்து, புதிய அறங்காவலர் குழு நியமிக்கும் வரை திருவேற்காடு கருமாரியம்மன் கோயில் இணை ஆணையர் லட்சுமணனை, திருத்தணி கோயில் தக்காராக நியமனம் செய்வதாக அறநிலையத் துறை அறிவித்தது. இதையடுத்து, புதிய தக்காராக லட்சுமணன் திங்கள்கிழமை பொறுப்பேற்றார்.

epaper.dinamani.com

கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவோம்

சென்னை, ஆக.16: தேர்தலின்போது கொடுத்த வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்றுவோம் என்று நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் கூறினார்.

சட்டப்பேரவையில் திங்கள்கிழமை நிதிநிலை அறிக்கை மற்றும் வேளாண் நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் அதிமுக உறுப்பினர் தாமோதரன் பேசியது:

வேளாண்மைக்கு என்று தனிநிலை அறிக்கை வெளியிட்டதற்காகப் பாராட்டுகிறேன். ஆனால், வேளாண் துறைக்கான நிதி முறையாக ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறதா என்றால் இல்லை. வேளாண் துறைக்கு வெறும் ரூ. 900 கோடி மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஒரு துறையின் முக்கியத்துவம் என்பது ஒதுக்கீடு செய்யப்படும் நிதியைப் பொருத்ததாகும். வேளாண் துறை நிதிநிலை அறிக்கை என்று 18 துறைகளைச் சேர்த்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எல்லாவற்றுக்கும் சேர்த்துத்தான் ரூ. 34,000 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வேளாண் நிதிநிலை அறிக்கையில் நிறைய எதிர்பார்த்தோம். அனைத்துப் பயிர்களுக்கும் குறைந்த பட்ச ஆதார விலை கிடைக்கும், பயிர் வாரியாக சிறப்புத் திட்டம் இருக்கும் என எதிர்பார்த்தோம். ஆனால், புதிய உத்திகளோ, புதிய திட்டங்களோ இல்லை என்றார்.

வேளாண்மைத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்: அதிமுக ஆட்சியில் கரும்புக்கான கொள்முதல் விலையை உயர்த்தித் தருமாறு கேட்டோம். தரவில்லை. இப்போது உயர்த்திக் கொடுத்துள்ளோம். நெல்லுக்கான கொள்முதல் விலையையும் உயர்த்திக் கொடுத்துள்ளோம். நாங்கள் ஆட்சிக்கு வந்து 100 நாள்கள்தான் ஆகின்றன. அதற்குள் எத்தனையோ வித்தை காட்டி வருகிறோம்.

எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஓ.பன்னீர்செல்வம்: அமைச்சர் வித்தை காட்டிக் கொண்டிருக்கிறோம் என்று கூறினார். உங்களைப் போல எங்களுக்கு வித்தை காட்டத் தெரியாது.

எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி கே. பழனிசாமி: தேர்தலின்போது நெல் ஒரு குவிண்டாலுக்கு ரூ.2,500 உயர்த்தித் தருவதாகக் கூறினீர்கள். கரும்புக்கு டன்னுக்கு ரூ.4,000 தருவோம் என்று கூறினீர்கள். தரவில்லை. அதைத்தான் நாசூக்காக அதிமுக உறுப்பினர் கூறியுள்ளார்.

அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்: இப்போதுதான் ஆட்சிக்கு வந்துள்ளோம். 100 நாள்கள்தான் ஆகின்றன. பெண் பார்ப்பதற்கு முன்பே பிள்ளைக்கு பெயர் வைக்க முடியுமா?

அமைச்சர் துரைமுருகன்: இப்போதுதான் ஆட்சிக்கு வந்துள்ளோம். எதிர்க்கட்சித் தலைவர் பொறுத்திருக்க வேண்டும். கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவோம். என்ன சொன்னமோ, அதை நிச்சயம் செய்வோம். சொன்னதைச் செய்வதுதான் திமுக என்றார்.

கடந்த ஆட்சிக் காலத்தில் அறிவிக்கப்பட்ட திட்டங்களின் நிலையை பேரவைக்குத் தெரிவிப்போம்

சென்னை, ஆக. 16: அதிமுக ஆட்சிக் காலத்தில் பேரவை விதி 110-ன் கீழ் அறிவிக்கப்பட்ட திட்டங்களின் நிலைகளை நாங்களே அவைக்கு விளக்குவோம் என்று நிதித் துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் தெரிவித்தார்.

சட்டப் பேரவையில் திருத்திய நிதிநிலை அறிக்கை, வேளாண் நிதிநிலை அறிக்கை குறித்த விவாதம் திங்கள்கிழமை தொடங்கியது. இந்த விவாதத்தை அதிமுக உறுப்பினர் ஆர்.பி.உதயகுமார் தொடக்கி வைத்துப் பேசினார். அப்போது நடந்த விவாதம்:

ஆர்.பி.உதயகுமார்: கடந்த 2011-ஆம் ஆண்டு அதிமுக ஆட்சியைத் தொடங்கிய போது ரூ.1 லட்சம் கோடிக்கும் கூடுதலான கடன் இருந்தது. ஆனாலும் மக்கள்மீதுள்ள அக்கறையால் 1.83 கோடி குடும்பங்களுக்கு விலையில்லாத அரிசி திட்டத்தை அப்போதைய முதல்வர் ஜெயலலிதா அறிவித்தார்.

நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன்: இன்றைக்குள்ள நிதி நிலையை, அப்போதைய நிலையுடன் ஒப்பிடக் கூடாது. பணத்தின் மதிப்பு ஆண்டுக்கு ஆண்டு வேறுபடக் கூடியது. நிதிநிலை அறிக்கைக்கு முன்பாக, நிதி நிலைமை குறித்த வெள்ளை அறிக்கையை வெளியிட்டோம். திமுக ஆட்சிக் காலத்தில் 2006-07-ஆம் நிதியாண்டில் உற்பத்தி மதிப்பில் இருந்த கடன் அளவு 18 சதவீதமாக இருந்தது. ஆனால், கடந்த நான்கு ஆண்டுகளில் உற்பத்தி மதிப்பில் 27 சதவீதமாக கடன் சுமை உள்ளது.

அறிவிக்கும் திட்டங்களையெல்லாம் யாரும் செயல்படுத்தியதில்லை. பேரவை விதி 110-ன் கீழ் ஏராளமான அறிவிப்புகளை வெளியிட்டீர்கள். அவற்றின் நிலைமை என்ன என்பதை நாங்களே கூறப் போகிறோம். பட்ஜெட் மதிப்பீட்டுக்கும், உண்மையான செலவினத்துக்கும் இடையிலான வித்தியாசம் 2014-ஆம் ஆண்டு வரையில் 3 முதல் 4 சதவீதமாக இருந்தது. அதற்குப் பிறகு 30 முதல் 40 சதவீதமாக உயர்ந்துள்ளது. அரசின் செயல்திறன் குறைந்ததால் வந்த வித்தியாசமே இது.

ஆர்.பி.உதயகுமார்: கடந்த 2011 முதல் 2020-ஆம் ஆண்டு வரையில் பேரவை விதி 110-ன் கீழ் 715 அறிவிப்புகள் வெளியிடப்பட்டன. அவற்றில் 537 அறிவிப்புகளுக்கு அரசாணை வெளியிடப்பட்டு செயலாக்கத்துக்குக் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதிமுக ஆட்சியில் மக்கள் நலன் சார்ந்த திட்டங்கள் அறிவிக்கப்பட்டன. அதில் குறிப்பிடத்தக்கது மடிக்கணினி வழங்கும் திட்டம். இந்தத் திட்டத்தின் கீழ் 52 லட்சம் மடிக்கணினிகள் அளிக்கப்பட்டன.

நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன்: 2016 முதல் 2019-ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் இரண்டு ஆண்டுகளுக்கு மடிக்கணினிகள் வழங்காமல் இருந்தன. நீங்கள் எடுத்த சில சிறப்பான செயல்களைச் சுட்டிக் காட்டி உங்கள் மீதுள்ள குறைகளைச் சமாளிப்பது எப்படிச் சரியாகும்?

ஆர்.பி.உதயகுமார்: தமிழக அரசின் சார்பில் வெள்ளை அறிக்கை வெளியிடப்பட்டது. இந்த அறிக்கை என்பது கடந்த கால நிதிநிலை அறிக்கைகளின் ஒட்டுமொத்த தொகுப்பாகவே உள்ளது. இதிலுள்ள காரணங்களைச் சொல்லி தேர்தல் அறிக்கையில் தெரிவித்த திட்டங்களை நிறைவேற்றுவதில் பின்வாங்கி விடுவீர்களோ என்ற சந்தேகம் எழுகிறது. மேலும், நிதி நிலை அறிக்கையில் அனைத்துத் துறைகளுக்கும் ஒதுக்கப்படும் நிதி குறைந்து இருக்கிறது. அகவிலைப்படியை அடுத்த ஆண்டுக்கு தள்ளிவைத்தது அரசு ஊழியர்களுக்கு கவலையை ஏற்படுத்தியுள்ளது.

நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன்: கடந்த 2001-ஆம் ஆண்டு அதிமுக ஆட்சிக்காலத்தில் நிதிநிலைமை குறித்த வெள்ளை அறிக்கை வெளியிடப்பட்டது. இதைத் தொடர்ந்து, அரசு ஊழியர்களுக்கான அகவிலைப்படி தள்ளிப் போடப்பட்டது. இப்போது, மிகவும் சிக்கலான சூழ்நிலையில் அகவிலைப்படியை ஒத்தி வைத்ததை குறை சொல்கிறீர்கள் என்றார்.

500 கோயில்களுக்கு குடமுழுக்கு

சென்னை, ஆக.16: தமிழகத்தில் உள்ள 500 கோயில்களுக்கு விரைவில் குடமுழுக்கு நடத்தப்படும் என்று இந்து அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு கூறினார்.

சட்டப்பேரவையில் திங்கள்கிழமை நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தின்போது உறுப்பினர் ஈஸ்வரன் (கொமதேக) பேசும்போது, தமிழகத்தில் உள்ள பெரிய கோயில்களுக்கான பணிகள் நடைபெற்று நிறைவுபெற்றுவிடுகின்றன. ஆனால், கிராமங்களில் உள்ள சிறு கோயில்கள் அப்படிச் செய்ய முடியாத நிலை உள்ளது. எனவே, சிறுகோயில்கள் குறித்தும் தனிக் கவனம் செலுத்த வேண்டும் என்றார்.

அப்போது அமைச்சர் பி.கே.சேகர்பாபு குறுக்கிட்டுக் கூறியது:

கேட்காமலே கொடுக்கும் அரசாகவும், கேட்டாலும் கொடுக்கும் அரசாகவும் திமுக அரசு உள்ளது. 250 கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்தப்படும் என்று நிதிநிலை அறிக்கையில் அறிவித்துள்ளோம். பேரவையில் மானியக் கோரிக்கை மீதான விவாதம் வருவதற்குள் 500 கோயில்களுக்கு குடமுழுக்கு நடைபெறும் என்கிற நிலை உருவாகும். எந்தெந்த கோயில்களுக்கு குடமுழுக்கு செய்ய வேண்டும் என்று உறுப்பினர் ஈஸ்வரன் பட்டியல் கொடுத்தால், அதையும் நிறைவேற்றித் தருவோம் என்றார்.

செம்மொழி தமிழாய்வு நிறுவனத்தில் பாவேந்தர் நூலகம்

சென்னை, ஆக. 16: செம்மொழித் தமிழாய்வு நிறுவனத்தில் பாவேந்தர் நூலகம் அமைக்கப்படும் என்று தொழில் மற்றும் தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்தார்.

சென்னை தரமணியில் உள்ள செம்மொழித் தமிழாய்வு நிறுவனம், கர்நாடக மாநிலம் மைசூரில் உள்ள மத்திய அரசு நிறுவனத்துடன் இணைக்கப்படுவதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென பேரவையில் நிதிநிலை அறிக்கை மீது திங்கள்கிழமை பேசிய திமுக உறுப்பினர் கம்பம் ராமகிருஷ்ணன் கோரிக்கை விடுத்தார். இதற்கு அமைச்சர் தங்கம் தென்னரசு அளித்த பதில்:

செம்மொழித் தமிழாய்வு நிறுவனம், மைசூரில் உள்ள மத்திய அரசு நிறுவனத்துடன் இணைக்கப்பட இருப்பதாக தகவல்கள் அறிந்தவுடன் அதை முதல்வர் மு.க.ஸ்டாலின் கடுமையாக எதிர்த்தார். செம்மொழித் தமிழாய்வு நிறுவனம், சென்னையிலேயே தொடர்ந்து செயல்பட வேண்டும் என்பதில் முதல்வர் உறுதியாக உள்ளார்.

சென்னை பெரும்பாக்கத்தில் தமிழாய்வு நிறுவனத்துக்கென தனி கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. இது விரைவில் திறக்கப்படும்.

இந்தக் கட்டடத்தில் பாவேந்தர் பெயரில் நூலகம் அமைக்கப்படும்.

ஏற்கெனவே கடந்த திமுக ஆட்சிக் காலத்தில் இந்த நூலகம் செயல்பட்டு வந்தது. புதிய கட்டடத்துக்கு தமிழாய்வு நிறுவனம் மாற்றப்பட்டதும், நூலகம் ஏற்படுத்தப்படும் என்று அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்தார்.

கைரேகை வைக்க முடியாவிட்டாலும் நியாயவிலைக் கடைகளில் பொருள்கள் வாங்கலாம்

சென்னை, ஆக.16: கைரேகை வைக்க முடியாவிட்டாலும் நியாயவிலைக் கடைகளில் பொருள்களை வாங்கிக் கொள்ளலாம் என்று உணவுத் துறை அமைச்சர் அர.சக்கரபாணி பேரவையில் விளக்கம் அளித்தார்.

சட்டப்பேரவையில் நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் காங்கிரஸ் உறுப்பினர் பிரின்ஸ் பேசும்போது, 5 வகையான குடும்ப அட்டைகள் உள்ளன. அதனால், நியாயவிலைக் கடைகளில் அனைவருக்கும் எல்லாப் பொருள்களும் கிடைக்காத சூழல் உள்ளது. கடந்த ஆட்சியில் நடந்த தவற்றை திமுக ஆட்சியும் செய்யக் கூடாது. இதை மாற்றி பழைய முறையையே கடைப்பிடிக்க வேண்டும். அதைப்போல நியாயவிலைக் கடைகளில் கைரேகை வைப்பதிலும் குழப்பம் நிலவுகிறது என்றார்.

அப்போது, அதிமுகவைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் காமராஜ் எழுந்து பேசுவதற்கு அனுமதி கேட்டார். பேரவைத் தலைவர் அப்பாவு அனுமதி தர மறுத்தார். அதிமுக உறுப்பினர் பேசும்போது உங்கள் கருத்தையும் சேர்த்துப் பேசச் சொல்லுங்கள் என்றார். ஆனால், அதிமுக உறுப்பினர்கள் காமராஜுக்கு பேசுவதற்கு வாய்ப்புத் தருமாறு கோரினர். அப்போது அவை முன்னவர் துரைமுருகன் குறுக்கிட்டு காமராஜுக்கு பேசுவதற்கு வாய்ப்புத் தருமாறு கூறினார். அதைத் தொடர்ந்து பேரவைத் தலைவர் அனுமதித்தார்.

அமைச்சர் அர.சக்கரபாணி

காமராஜ்: கடந்த ஆட்சியில் செய்த தவறை செய்யக்கூடாது என்று காங்கிரஸ் உறுப்பினர் கூறுகிறார். மத்திய அரசின் தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட பிறகுதான் 5 வகையான குடும்ப அட்டை முறை வந்தது. ஆனால், தமிழகத்தைப் பொருத்தவரை அனைவருக்குமான பொது விநியோகத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறோம். அதனால், நியாயவிலைக் கடையில் பொருள்கள் யாருக்கும் கிடைக்கவில்லை என்ற நிலை ஏற்படவில்லை. அனைவருக்கும் பொருள்கள் கிடைத்தன.

உணவுத் துறை அமைச்சர் அர.சக்கரபாணி: மத்திய அரசின் தேசிய உணவு பாதுகாப்புச் சட்டத்துக்குப் பிறகு 5 வகையான குடும்ப அட்டைகள் உள்ளன. உணவுப் பொருள்களும் முறையாக வழங்கப்பட்டு வருகின்றன. மத்திய அரசின் ஒரே நாடு ஒரே ரேஷன் கார்டு திட்டம் அமல்படுத்தப்பட்ட பிறகு கைரேகை வைக்கும் முறையும் வந்தது. பல்வேறு மாவட்டங்களில் 99 சதவீதம் பேர் கைரேகை வைத்து பொருள்களை வாங்குகிறார்கள். சில இடங்களில் கைரேகை பதிவு செய்வதில் சிரமம் இருக்கிறது. ஒரு குடும்பத்தில் 5 வயதுக்கு மேற்பட்டவர்கள் யாராக இருந்தாலும், நியாயவிலைக் கடைக்கு வந்து பொருள்களை வாங்கிக் கொள்ளலாம். வயதானவர்கள் யாராவது பொருள்களை வாங்க முடியவில்லை என்றால், குறிப்பிட்ட கடையில் என் சார்பில் வரும் நபரிடம் பொருள்களைக் கொடுக்கலாம் என்று கடிதம் கொடுத்தால், பொருள்களை வழங்குவதற்கு துறை நடவடிக்கை எடுக்கும் என்றார்.

https://t.me/Tamil_epaper2

அப்போது காங்கிரஸ் உறுப்பினர் விஜயதரணி எழுந்து பேசுவதற்கு முற்பட்டார். ஆனால் அவருக்கு அனுமதி கொடுக்கப்படவில்லை.

பேரவைத் தலைவர் அப்பாவு: கூலித் தொழில் செய்பவர்களின் கைரேகைகள் அழிந்துவிடுகின்றன. அந்தப் பிரச்னைக்குத் தீர்வு என்ன?

அமைச்சர் அர.சக்கரபாணி: இந்தப் பிரச்னை மட்டும் அல்ல. நியாயவிலைக் கடைகளுக்கு வர முடியாதவர்கள் அவர்கள் சார்பில் கடிதம் கொடுத்தால் போதும். பொருள்கள் கொடுப்பதற்கு துறை ரீதியாக உத்தரவு வழங்கப்பட்டுள்ளது என்றார்.

சட்டப்பேரவை மாற்றுத் தலைவர்கள் அறிவிப்பு

சென்னை, ஆக. 16: சட்டப் பேரவையின் மாற்றுத் தலைவர்களாக ஆறு சட்டப் பேரவை உறுப்பினர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர். இதற்கான அறிவிப்பை பேரவைத் தலைவர் மு.அப்பாவு வெளியிட்டார்.

அதன்படி, சாக்கோட்டை க.அன்பழகன், நா.ராமகிருஷ்ணன், எஸ்.ஆர்.ராஜா, உதயசூரியன், துரை சந்திரசேகரன், டி.ஆர்.பி.ராஜா ஆகியோர் மாற்றுத் தலைவர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.

பேரவைத் தலைவர், துணைத் தலைவர் இருவரும் அவையில் இல்லாத தருணங்களில், மாற்றுத் தலைவர்களில் யாரேனும் ஒருவர் அவைத் தலைவர் இருக்கையில் அமர்ந்து பேரவையை நடத்துவர்.

மறைந்த முக்கிய பிரமுகர்களுக்கு பேரவையில் இரங்கல்

சென்னை, ஆக. 16: மூத்த தமிழறிஞர் இளங்குமரனார், பெரியாரியவாதி வெ.ஆனைமுத்து ஆகியோரின் மறைவுக்கு, சட்டப் பேரவையில் திங்கள்கிழமை இரங்கல் தெரிவிக்கப்பட்டது. சட்டப் பேரவை காலை 10 மணிக்குக் கூடியதும், இரங்கல் குறிப்புகள் மற்றும் இரங்கல் தீர்மானங்களை பேரவைத் தலைவர் மு.அப்பாவு வாசித்தார்.

மறைந்த முன்னாள் உறுப்பினர்கள் ஆ.தங்கராசு (குறிஞ்சிப்பாடி), க.ந.ராமச்சந்திரன் (ஆண்டிமடம்), கே.பண்ணை சேதுராம் (பெரியகுளம்), பூ.ம.செங்குட்டுவன் (மருங்காபுரி), கி.அய்யாறு வாண்டையார் (திருவையாறு), ம.விஜயசாரதி (அரக்கோணம்), நன்னிலம் அ.கலையரசன் (நன்னிலம்), இ.மதுசூதனன் (ஆர்.கே.நகர்), திண்டிவனம் கே.ராமமூர்த்தி (திண்டிவனம்) ஆகியோர் பேரவையில் உறுப்பினர்களாக இருந்த காலத்தையும், அவர்களது தொகுதிகளின் பெயர்களையும் அவைத் தலைவர் வாசித்தார். முன்னாள் உறுப்பினர்களின் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கும் வகையில், உறுப்பினர்கள் அனைவரும் சில மணித் துளிகள் எழுந்து நின்றனர்.

தமிழறிஞர் இளங்குமரனார், பெரியாரியவாதி வெ.ஆனைமுத்து, மூத்த மருத்துவர் காமேஸ்வரன், சமூக செயற்பாட்டாளர் ஸ்டேன் சுவாமி, மதுரை ஆதீனம் அருணகிரி நாதர் ஆகியோர் மறைவுக்கும் பேரவையில் இரங்கல் தெரிவிக்கப்பட்டது. மறைந்த முக்கிய நபர்களின் தனிப் பண்புகளை எடுத்துரைத்த பேரவைத் தலைவர் அப்பாவு, அவர்களுக்கு இரங்கல் தெரிவிக்கும் வகையில் இரண்டு மணித் துளிகள் எழுந்து நிற்க அறிவுறுத்தினார். இந்த நிகழ்வுக்குப் பிறகு, பேரவை நிகழ்வுகள் தொடர்ந்தன.

பாரம்பரிய மீனவர்களின் நலன் காக்கப்படும்

சென்னை, ஆக.16: பாரம்பரிய மீனவர்களின் நலன்களைக் காக்க தமிழக அரசு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் என்று மீன்வளத் துறை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் கூறினார்.

சட்டப்பேரவையில் நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் காங்கிரஸ் உறுப்பினர் பிரின்ஸ் பேசும்போது, மத்திய அரசின் மீன்வள மசோதா தமிழக மீனவர்களுக்கு எதிராக உள்ளது. அதை தமிழக அரசு தடுக்க வேண்டும் என்றார்.

அப்போது மீன்வளத் துறை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் குறுக்கிட்டு கூறியது:

மத்திய அரசின் மீன்வள வரைவு மசோதாவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் ஏற்கெனவே எதிர்ப்புத் தெரிவித்து மத்திய அரசுக்கு கடிதம் எழுதியுள்ளார். பாரம்பரிய மீனவர்களை குற்றவாளிகளைப் போல அந்த மசோதா சித்தரிப்பதாகவும் அதில் சுட்டிக்காட்டியுள்ளார். அதனால், பாரம்பரிய மீனவர்களின் நலனைக் காக்க அனைத்து நடவடிக்கைகளையும் தமிழக அரசு மேற்கொள்ளும் என்றார்.

ஆறுமுகசாமி ஆணையம்: திமுக - அதிமுக விவாதம்

சென்னை, ஆக.16: சட்டப்பேரவையில் ஆறுமுகசாமி ஆணையம் குறித்து திமுக - அதிமுக உறுப்பினர்களுக்கு இடையே விவாதம் நடைபெற்றது.

சட்டப்பேரவையில் நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் திமுக உறுப்பினர் மார்க்கண்டேயன் பேசும்போது, தேர்தல் நேரத்தில் கொடுத்த வாக்குறுதிகளை திமுக நிறைவேற்றவில்லை என்று குறை கூறுகின்றனர்.

ஆறுமுகசாமி ஆணையத்தின் விசாரணை நடைபெற்று வருகிறது. 3 ஆண்டுகளாக அதில் எந்த உண்மையையும் கொண்டுவராமல் ஏமாற்றி வந்தனர்.

இந்த விவகாரத்தில் குற்றவாளிகள் அனைவரும் கண்டுபிடிக்கப்படுவார்கள் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தேர்தல் நேரத்தில் வாக்குறுதி கொடுத்தார். அந்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம் என்றார்.

அதற்கு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஓ.பன்னீர்செல்வம் எதிர்ப்பு தெரிவித்துப் பேசியது:

ஒரு வழக்கு நீதிமன்றத்தில் இருக்கும்போது, அது குறித்து முடிவுரை கூறுவது போல பேசுவது முறையற்ற செயல். திமுக உறுப்பினர் பேசியதை அவைக் குறிப்பில் இருந்து நீக்க வேண்டும் என்றார்.

பேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி: திமுக உறுப்பினர் வழக்கு குறித்து மேலோட்டமாகத்தான் கூறினார். யாருடைய பெயரையும் குறிப்பிட்டுப் பேசவில்லை.

அதனால், அவைக் குறிப்பில் இருந்து அதை நீக்க வேண்டியது இல்லை.

அவை முன்னவர் துரைமுருகன்: பொதுவாக நிலுவையில் உள்ள வழக்கு குறித்து பேசக்கூடாது என்பதை ஏற்கிறேன். ஆனால், திமுக உறுப்பினர் வழக்கின் தன்மை குறித்துத்தான் பேசினார். அதனால், நீக்க வேண்டியது இல்லை.

ஓ.பன்னீர்செல்வம்: 3 ஆண்டுகளாக ஏமாற்றப்படுகிறது என்றெல்லாம் கூறினார். தனியார் மருத்துவமனை, உச்சநீதிமன்றத்தில் வழக்கு குறித்து தடையாணையெல்லாம் பெற்றிருந்தது. அதனால், திமுக உறுப்பினர் பேசியதை அவைக் குறிப்பில் இருந்து நீக்க வேண்டும்.

பேரவைத் துணைத் தலைவர் பிச்சாண்டி: திமுக உறுப்பினர் மேலோட்டமாகத்தான் பேசினார். அதனால், அவைக் குறிப்பில் இருக்கலாம். ஓ.பன்னீர்செல்வம் பேசியதும் அவைக் குறிப்பில் இருக்கும் என்றார்.

பொது அறிவிப்பு

சொத்து விவரத்தில் குறிப்பிட்டுள்ள சொத்தினை ... [illegible] ... பத்திர எண் 124 /1997, ... [illegible] ... பத்திர எண் 133/1997 ... [illegible] ... (PARENT DOCUMENT) ... [illegible] ... (ORIGINAL SALE DEEDS) ... [illegible]

i) 17.01.1997 பத்திர எண் 124/1997

ii) 20.01.1997 பத்திர எண் 133/1997

சொத்து விவரம் ... [illegible]

G.Cecilia Jayarani (ADVOCATE)
No.17, Third Cross Street, West CIT Nagar, Chennai - 600035. Contact Number - [illegible]

ரெப்கோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட்
Repco Home Finance

கார்ப்பரேட் அலுவலகம்: மூன்றாவது தளம், அலெக்சாண்டர் சதுக்கம், பழைய எண் 34 & 35, புதிய எண்.2, சர்தார் பட்டேல் ரோடு, கிண்டி, சென்னை-600032, போன்: (044)-4210 6650 Fax: (044)-4210 6651, E-mail: publication@repcohome.com, Website: www.repcohome.com

கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்களுக்கான அறிவிப்பு

2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதி சொத்துக்களைச் சீரமைத்தல் & கடனீட்டுச் சொத்தின் உரிமை அமலாக்கச் சட்டத்தின் பிரிவு 13(2) கீழ் அறிவிப்பு

வ.எண்.1: (காஞ்சிபுரம் கிளை): ... [illegible]

கோரிக்கை அறிவிப்பு தேதி: 22.06.2021; NPA தேதி: 01.06.2020; கடன் கணக்கு எண்.1701814332391 (Old A/c No. 1331814002391) dated 07.05.2010 for ₹ 15,00,000/- was sanctioned under the scheme of Commercial Construction; கடன் நிலுவைத்தொகை: ₹ 5,46,077/- மற்றும் 22.06.2021 முதல் ... [illegible]

அசையா சொத்துக்கள் விபரம்

சொத்து எண்.1: ... [illegible] ... ஆக மொத்தம் 1800 சதுர அடி நிலம் மற்றும் கட்டிடம் ... [illegible]

கடை எண்.11: ... [illegible] ... ஆக மொத்தம் 242 சதுர அடி நிலம் மற்றும் கட்டிடம் ... [illegible]

கடை எண்.12: ... [illegible] ... ஆக மொத்தம் 242 சதுர அடி நிலம் மற்றும் கட்டிடம் ... [illegible]

சொத்து எண்.2: ... [illegible] ... ஆக மொத்தம் 610.5 சதுர அடி நிலம் மற்றும் கட்டிடம் ... [illegible]

வ.எண்.2: (ARB கிளை): ... [illegible]

கோரிக்கை அறிவிப்பு தேதி: 07.07.2021; NPA தேதி: 29.02.2020; கடன் கணக்கு எண்கள்.2571820000089 (Old A/c No. 1161820002421) & 2571820000140 (Old A/c No. 1161820002804) dated 18.06.2013 & 09.05.2014 for ₹ 15,00,000/- & ₹ 20,00,000/- respectively was sanctioned under the scheme of Prosperity Loan & Prosperity Loan; கடன் நிலுவைத்தொகை: முறையே ₹ 12,40,798/- & ₹ 19,43,987/- மற்றும் 08.07.2021 முதல் ... [illegible]

அசையா சொத்து விபரம்

... [illegible] ... ஆக மொத்தம் 1110 சதுர அடி நிலம் மற்றும் கட்டிடம் ... [illegible]

... [illegible] ... (Non-Performing Asset) ... [illegible]

SARFAESI சட்டம் பிரிவு 13(8)ன் படி ... [illegible]

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
ரெப்கோ ஹோம் பைனான்ஸ் லிமிடெட்

தேதி: 17.08.2021

தினமணி

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

செவ்வாய்க்கிழமை 17-8-2021
பிலவ ஆவணி 1 ஹிஜ்ரி 1443 முஹர்ரம் 7

ஆப்கன் சவால்!

அமெரிக்கா, ஆப்கானிஸ்தானிலிருந்து தனது படைகளை திரும்பப் பெறுவது என்று முடிவெடுத்தபோதே விரைவில் தலிபான்களின் ஆட்சி அங்கே நிலைநாட்டப்படும் என்பதை உலகம் எதிர்பார்த்தது. எதிர்பார்த்ததுபோலவே, ஆப்கானிஸ்தான் தேசிய அரசு வீழ்த்தப்பட்டு தலைநகரமான காபூலை தலிபான்கள் கைப்பற்றியிருக்கிறார்கள். அதிபர் அஷ்ரஃப் கனி நாடுவிட்டு தப்பியோடிவிட்டார். தலிபான் தலைவர் முல்லா அப்துல் கனி பராதர் அங்கு புதிய ஆட்சி அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

1989 பிப்ரவரி மாதம் சோவியத் யூனியன் படைகள் ஆப்கானிஸ்தானிலிருந்து பின்வாங்கியபோது மதரஸாக்களில் அடிப்படைவாத கொள்கைகளுடன் கூடிய பயிற்சி அளிக்கப்பட்ட மதத் தீவிரவாதிகள் ஆப்கானிஸ்தானில் ஏற்பட்ட அரசியல் வெற்றிடத்தை நிரப்ப முற்பட்டனர். கடுமையான உள்நாட்டுப் போருக்குப் பிறகு 1996-இல் தலிபான்களால் ஆப்கானிஸ்தான் இஸ்லாமிக் அமீரகம் நிறுவப்பட்டதும், உருவ வழிபாடு தங்களது மதக்கொள்கைக்கு எதிரானது என்பதால் வரலாற்றுச் சிறப்பு மிக்க புத்தர் சிலைகள் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டதும் மறக்க முடியாத நிகழ்வுகள்.

எல்லோரும் நினைப்பது போல ஆப்கானிஸ்தானில் உள்ள மக்களின் பெரும்பான்மை ஆதரவு தலிபான்களுக்குக் கிடையாது. தலிபான் என்பவர்கள் ஆப்கானிஸ்தானின் மக்கள்தொகையில் 45% மட்டுமே உள்ள பஷ்டூன் பிரிவினரின் பிரதிநிதிகள். ஏனைய அனைத்து இனக்குழுவினரும் பஷ்டூனையும், தலிபான்களையும் எதிர்ப்பவர்கள், வெறுப்பவர்கள். தலிபான்களுக்கு எதிரான நிலைப்பாட்டுக்கு தலைமை தாங்கும் திஜிக்ஸ் பிரிவினர் 35% இருக்கிறார்கள்.

1996-இல் ஆப்கானிஸ்தான் தலிபான்களின் கட்டுப்பாட்டில் வந்தது முதல் உலகில் உள்ள எல்லா பயங்கரவாத அமைப்புகளுடனும் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டதுடன் அவற்றுக்கு ஆதரவு வழங்குவதையும் வழக்கமாக்கிக் கொண்டனர் தலிபான்கள். அந்த அமைப்புகளில் அல்-காய்தாவும் ஒன்று.

அமெரிக்காவிலுள்ள இரட்டை கோபுரங்கள் மீது அல்-காய்தா தாக்கியதைத் தொடர்ந்து, ஆப்கானிஸ்தானில் தலையிட வேண்டிய நிர்பந்தம் அமெரிக்காவுக்கு ஏற்பட்டது. அமெரிக்க படைகளால் விரட்டி அடிக்கப்பட்ட தலிபான்கள், பாகிஸ்தானில் தங்கி அங்கிருந்து செயல்பட்டார்கள். விசித்திரம் என்னவென்றால், அது தெரிந்தும் கூட பாகிஸ்தானுக்கு அமெரிக்கா பொருளாதார உதவிகள் வழங்கி வந்ததுதான். ஒசாமா பின்லேடனுக்கு அடைக்கலம் வழங்கியிருந்த பாகிஸ்தானின் சாயம் வெளுத்தபோதுதான் அமெரிக்கா சற்று சுதாரிக்கத் தொடங்கியது.

அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படைகளால் காபூலிலிருந்தும், ஆப்கானிஸ்தானிலிருந்தும் விரட்டி அடிக்கப்பட்ட தலிபான்கள், அதே அமெரிக்காவின் நிலைப்பாட்டால் 20 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் தங்களது கட்டுப்பாட்டில் ஆப்கானிஸ்தானைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆப்கானிஸ்தானில் உள்ள அமெரிக்கர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும்படி ஆப்கானிஸ்தானுக்கான அமெரிக்காவின் சிறப்பு பிரதிநிதி ஜல்மே கலிஜாத் அவர்களைக் கெஞ்சுகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

கைப்பற்றியிருக்கும் ஆப்கானிஸ்தானை தலிபான் தலைமை எப்படி ஆட்சி செய்வது என்பதில் தெளிவாகவே இருக்கிறது. அதன் செய்தித் தொடர்பாளர் ஜபியுல்லா மொஜாஹிர், கடுமையான முறையில் இஸ்லாமியர்களின் ஷரியத் சட்டத்தின் அடிப்படையில்தான் ஆட்சி நடத்தப்படும் என்று அறிவித்திருக்கிறார். தேர்தல்கள் கிடையாது என்று தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். தங்களது ஜிஹாத் தொடரும் என்கிற அறைகூவலுடன் காபூலைக் கைப்பற்றியிருக்கிறார்கள் தலிபான்கள்.

கடந்த வியாழக்கிழமை கத்தாரில் அமெரிக்கா, இந்தியா, சீனா மட்டுமல்லாமல் ஐநா சபை, ஐரோப்பியக் கூட்டமைப்பு ஆகியவற்றின் பிரதிநிதிகள் அடங்கிய 12 நாடுகள் கூடின. சமாதானத்தின் மூலம் அல்லாமல், ராணுவத்தால் காபூல் கைப்பற்றப்பட்டால் அந்த அரசுக்கு அங்கீகாரம் வழங்குவதில்லை என்று முடிவெடுத்திருக்கின்றன. ரஷியா என்ன முடிவெடுக்கும் என்பது இன்னும் தெரியவில்லை. நிச்சயமாக தலிபான்களை ஆதரிக்க வாய்ப்பில்லை. அதனால், காபூலில் அமையப் போகும் ஆட்சிக்கு பக்கபலமாக இருக்கப் போவது பாகிஸ்தான் மட்டுமாகத்தான் இருக்கும்.

தலிபான்களின் கட்டுப்பாட்டில் ஆப்கானிஸ்தான் சென்றிருப்பதை பாகிஸ்தானைத் தவிர, ஏனைய நாடுகள் கவலையுடன்தான் எதிர்கொள்கின்றன. மத்திய ஆசியாவில் உள்ள தஜிகிஸ்தான் போன்ற முன்னாள் சோவியத் யூனியன் நாடுகளில் தலிபான்கள் ஊடுருவிவிடக்கூடாது என்று ரஷியா அச்சப்படுகிறது.

ஆப்கானிஸ்தான் எல்லையையொட்டிய பகுதிகளில் வாழும் ஷியா பிரிவு முஸ்லிம்கள் மீது தாக்குதல் நடத்துமோ என்கிற எச்சரிக்கையுடன்தான் ஈரானும் இருக்கிறது. சீனாவின் ஷின்ஜியாங் மாநிலத்தில் உள்ள இஸ்லாமியர்களின் சார்பாக இயங்கும் கிழக்கு துர்கிஸ்தான் விடுதலை இயக்கத்தினருக்கு தலிபான்கள் உதவக் கூடாது என்றும், ஆப்கானிஸ்தான் தேசிய அரசுடன் சமாதானமாகப் போக வேண்டும் என்றும் சீனா விடுத்த வேண்டுகோள் ஏற்கப்படாததற்கு தலிபான்கள் மீது பெய்ஜிங்கிற்கு வருத்தம் உண்டு.

அமெரிக்காவுக்கு தீவிரவாத இயக்கங்களை வளர்ப்பது வழக்கமாகிவிட்டது. இராக்கிலிருந்து அரைகுறையாக வெளியேறியபோது அந்த வெற்றிடத்தை ஐஎஸ் பயங்கரவாதிகள் நிரப்பி பேரழிவை ஏற்படுத்தினர். ஐஎஸ் பயங்கரவாதத்தால் ஏற்பட்டிருக்கும் பாதிப்புகளுக்கு ஆளாகியிருக்கின்றன பிரிட்டன், மேற்கு ஐரோப்பா, ஜெர்மனி, துருக்கி ஆகியவை. இப்போது அதேபோல ஆப்கானிஸ்தானைக் கைகழுவி தலிபான்களை நிலைநிறுத்தியிருக்கிறது. இதில் மிகப் பெரிய சவாலை எதிர்கொள்ளப்போவது இந்தியாவாகத்தான் இருக்கும். அதுதான் நமது கவலை.

காலம் கருதி இருப்பர், கலங்காது
ஞாலம் கருது பவர்.

உலகத்தைக் கொள்ளக் கருதுகின்றவர் அதைப் பற்றி எண்ணிக் கலங்காமல் அதற்கு ஏற்ற காலத்தைக் கருதிக்கொண்டு பொறுத்திருப்பர்.

திருக்குறள் (எண்: 485) *அதிகாரம்: காலம் அறிதல்*

தீயரல்லர் திராவிடர்

புலவர் சா. பன்னீர்செல்வம்

இந்திய வரலாற்றில் கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டில் மிக முக்கியமான மாற்றம் ஒன்று உருவாயிற்று. வணிகம் செய்வதற்கென இந்தியா வந்த ஆங்கிலேயக் கிழக்கிந்திய கம்பெனியார் இந்தியாவின் பல பகுதிகளைக் கைப்பற்றி ஆட்சியாளர் ஆயினர். அதனையடுத்து வரலாற்றுச் சாதனையொன்று நிகழ்த்த முற்பட்டனர். அது என்ன?

'உற்றுழி உதவியும், உறுபொருள் கொடுத்தும் பிற்றைநிலை முனியாது கற்றல் நன்று', 'கீழ்ப்பால் ஒருவன் கற்பின் மேற்பால் ஒருவனும் அவன்கட் படுமே' என நாட்டு மக்களுக்கு அறிவுறுத்திய பாண்டியன் நெடுஞ்செழியன் அத்தகைய கல்வியைக் குடிமக்கள் அனைவரும் பெறும்படியாகக் கல்விச் சாலைகளை அமைத்ததற்கான எந்தக் குறிப்பும் கிடைக்கப் பெறவில்லை.

நீண்ட காலத்திற்குப் பின்னர் இந்தியாவை ஆட்சி செய்த அந்நியரான ஆங்கிலேயர் இந்திய மக்களுக்குக் கல்வியளிக்க முற்பட்டு, அதற்கான ஆலோசனை வழங்க லார்டு மெக்காலே என்பவரை நியமித்தனர்.

லார்டு மெக்காலே சுமார் இரண்டாண்டு காலம் இந்தியா முழுவதும் சுற்றி வந்தபின்னர் தந்த அறிக்கையில், முதலாவது, இந்திய சமூகத்தில் அனைத்துப் பிரிவினர்க்கும் கல்வி அளிக்கும் பொறுப்பை அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும். இரண்டாவது, அளிக்கப்படும் கல்வி உலகளாவிய நவீன கல்வி முறையாக வேண்டும். மூன்றாவது, பயிற்று மொழி ஆங்கிலமாக வேண்டும் என்பது தான் அவரின் பரிந்துரையாயிற்று.

அதன் விளைவாக, இந்திய வரலாற்றில் முதன்முறையாக, சமூகத்தின் அனைத்துப் பிரிவினர்க்குமான இலவச அரசுப் பள்ளி என்னும் முறைமை ஏற்பட்டது. அத்துடன் ஆங்கிலேயர் ஆட்சிமுறையில் இன்னொரு புதுமையும் நிகழ்ந்தது. 'குறிப்பிட்ட கல்வித் தகுதியுடையோர்க்குக் குறிப்பிட்ட அரசுப் பதவி' என்பது நடைமுறையாயிற்று.

அதாவது, சமூகத்தில் மேல்சாதி எனப்படுவோர் மீது அதிகாரம் செலுத்தும் சூழல் உருவாயிற்று. ஆனாலும் காலங்காலமாகக் கல்வி மறுக்கப்பட்ட கீழ் சாதியினர் அரசின் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்வதில் இடர்ப்பட்டனர். எனவே, பரம்பரைக் கல்வியாளர்களான மேல் வருணத்தார் ஆங்கிலேயர் அளித்த வாய்ப்பை முழுமையாகப் பயன்படுத்தி புதிய சூழலிலும் ஆதிக்க வருணத்தாராக நீடித்தனர்.

இச்சூழலில் 1909-இல், சென்னை நகரில் வாழ்ந்து வந்த வி. சுப்பிரமணியம், எம். புருஷோத்தம நாயுடு எனும் வழக்குரைஞர் இருவர் 'சென்னை பார்ப்பனரல்லாதார் சங்கம்' என்னும் அமைப்பைத் தொடங்கினர். அத்துடன், வேறு சிலர் இணைந்து 'சென்னை ஐக்கியக் கழகம்' என்பதை ஏற்படுத்தினர்.

அதுவே, 1913-இல் 'சென்னை திராவிடர் சங்கம்' என்றாயிற்று. இவ்விடத்தே இன்னொன்று, 1892-ஆம் ஆண்டிலேயே தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த படித்த சிலர் 'திராவிட சனசபை' என்னும் அமைப்பை ஏற்படுத்தியிருந்தனர்.

https://t.me/Tamil_epaper2

அடுத்த கட்டமாக 1916-இல், 'தென்னிந்திய நலவுரிமை சங்கம்' என்னும் அரசியல் கட்சி ஏற்படுத்தப்பட்டது. அக்கட்சியின் சார்பில் 'ஜஸ்டிஸ்' என்னும் ஆங்கில நாளேடும், 'திராவிடன்' என்னும் தமிழ் நாளேடும், 'ஆந்திர பிரகாசிகா' என்னும் தெலுங்கு நாளேடும் நடத்தப்பட்டன. ஆனாலும், மக்களிடையே 'நீதிக்கட்சி' என்றே பெயர் பெற்றது.

மாண்டேகு செம்ஸ்போர்டு அறிக்கையின் அடிப்படையில் 1920-இல் நடைபெற்ற முதலாவது தேர்தலில் நீதிக்கட்சி வெற்றி பெற்று ஆட்சியமைத்தது. 1923 தேர்தலிலும் வெற்றிபெற்ற நீதிக்கட்சி 1929 தேர்தலில் தோல்வியுற்றது. சுயேச்சையாளர் சிலர் கூடி ஆட்சி நடத்தினர். பின்னர் 1937-இல் காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்றதால் ராஜாஜி முதல்வராகி இந்தி மொழியைப் பள்ளிகளில் கட்டாயப் பாடமாக்கினார். இதற்கிடையில் வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை காங்கிரஸ் கட்சி ஏற்காததால் 1925-இல் காங்கிரஸிலிருந்து வெளியேறி சுயமரியாதை பிரசார இயக்கம் நடத்திக் கொண்டிருந்த பெரியார், ராஜாஜியின் இந்தித் திணிப்பை எதிர்த்து போராட்ட அறிவிப்பு செய்தார்.

பார்ப்பனரல்லாதார் என எதிர்மறைப்பெயரால் சுட்டுவதை விடவும், வட மொழியாளரால் குறிப்பிடப்பட்ட தமிழர் என்பதன் திரிபாகிற திராவிடர் என்பது பார்ப்பனர் அல்லாத தமிழர் எனத் தெளிவாகிவிடும். திராவிடர் என்னும் சொல்லாட்சியின் காரணம் இதுவன்றி வேறல்ல.

மறைமலையடிகள், ச. சோமசுந்தர பாரதியார், திரு.வி.க. முதலாக தமிழறிஞர்களும் இந்தியெதிர்ப்பில் அணிதிரண்டனர். பெரியாரும், தொண்டர்களுமாக மூவாயிரத்திற்கு மேற்பட்டோர் சிறை சென்றனர். நீதிக்கட்சியினரும் இந்தியெதிர்ப்பில் கலந்து கொண்டதுடன், சிறையிலிருந்த பெரியாரையே நீதிக்கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுத்தனர். ராஜாஜி பதவி விலகினார்.

1938-இல் காங்கிரஸ் கட்சி பதவி விலகியதைத் தொடர்ந்து இந்தியும் ஒழிந்தது. இந்தி எதிர்ப்புப் போரில் 'தமிழ்நாடு தமிழருக்கே' என்னும் முழக்கம் எழுந்தது. ஆனால் அதற்கும் முன்பாக 1936-லேயே 'தமிழ்நாடு தமிழருக்கே' என்னும் முழக்கத்தை எழுப்பியவர் பெரியார்.

சிறைமீண்ட பெரியார், 1944-இல் நீதிக்கட்சியை 'திராவிடர் கழகம்' எனப் பெயர் மாற்றி, திராவிடநாடு பிரிவினையை முன்வைத்தார். ஆனாலும் திராவிடர் கழகம் தேர்தல் அரசியலில் ஈடுபடாத சமூகச் சீர்திருத்த இயக்கமாகவே நீடித்தது. திராவிடர் கழகம் என்றதன் காரணம், பார்ப்பனரல்லாதார் அமைப்பு என்பதற்காக; திராவிடநாடு என்றதன் காரணம் அன்றைய சென்னை மாநிலம் தெலுங்கு, கன்னட, மலையாளப் பகுதிகளும் இணைந்திருந்தமையால்.

1956-இல் மாநிலச் சீரமைப்பிற்குப் பின்னர் 'தமிழ்நாடு தமிழருக்கே' என மாற்றிக் கொண்டார். ஆனாலும் திராவிடர் கழகம் தேர்தல் அரசியலில் ஈடுபடாத சமூகச் சீர்த்திருத்த இயக்கமாகவே நீடிக்கின்றது.

இவ்விடத்தேதான் விவாதம் மூள்கிறது. அதாவது திராவிடர் என்னும் சொல்லாட்சியின் அவசியம் யாது என்பது வாதமாகிறது. பெரியார் கன்னடர். எனவேதான் அவர் திராவிடர், திராவிடம் என்னும் சொல்லாட்சிகளை மேற்கொண்டார் என்பது தமிழ்த் தேசியவாதிகளின் குற்றச்சாட்டாகிறது.

'திராவிடர்' என்னும் சொல்லாட்சி, பெரியார் அரசியலில் ஈடுபடுவதற்கு முன்பாகவே பார்ப்பனரல்லாதார் அமைப்பிற்கு திராவிட சங்கம் எனப் பெயரிடப்பட்ட வரலாற்றை முன்னரே பார்த்தோம். அவர்களெல்லாரும் தமிழரல்லாத அயலாரல்ல என்பதையும் நினைவிற் கொள்ள வேண்டும்.

1913-இல் சென்னை 'ஐக்கிய கழகம்' என்பதை 'சென்னை திராவிடர் சங்கம்' என்ப பெயர் மாற்றம் செய்தலில் முனைப்பு காட்டியவர் சி. நடேச முதலியார் என்பது தான் வரலாற்று உண்மை. அதற்கும் முன்பாக, 1842-இல் 'திராவிட சனசபை'யை ஏற்படுத்தியவர்களும் தமிழரல்லாத பிறமொழியாளரல்ல. இப்படியாக எல்லாருமே 'திராவிட', 'திராவிடர்' என்னும் சொல்லாட்சிகளை மேற்கொண்டதன் காரணம் என்ன? மேற்படி அமைப்புகளின் நோக்கம் பார்ப்பனரல்லாத தமிழர்களின் முன்னேற்றம்.

தமிழர் என்று சொன்னால், தமிழ்நாட்டில் பிறந்து, தமிழ்பேசி வாழும் தலைமுறையரான பார்ப்பனர், நாங்களும் தமிழர்தாமே என்பதை மறுத்தல் யாங்ஙனம்? எனவே, பார்ப்பனரல்லாதார் என எதிர் மறைப்பெயரால் சுட்டுவதை விடவும், மனு முதலான வடமொழியாளரால் குறிப்பிடப்பட்ட தமிழர் என்பதன் திரிபாகிற திராவிடர் என்பது பார்ப்பனரல்லாத தமிழர் எனத் தெளிவாகிவிடும். திராவிடர் என்னும் சொல்லாட்சியின் காரணம் இதுவன்றிவேறல்ல.

பெரியாரின் திராவிட நாடு நான்கு மாநிலங்களை உள்ளடக்கியதல்ல என்பதற்கு வரலாற்று ஆதாரம் உள்ளது. 1956-இல் மாநிலச் சீரமைப்புக் குழுவின் அறிக்கை வெளியான போது ஏற்கெனவே ஆந்திரம் தனிமாநிலமாகிவிட்டதால், எஞ்சியுள்ள சென்னை மாநிலத்திலிருந்த கன்னடப்பகுதி மைசூர் சமஸ்தானத்துடனும், மலையாளப் பகுதி திருவிதாங்கூர் சமஸ்தானத்துடனும் இணைக்கப்பட்டு, தனித்தனி மாநிலங்கள் ஆயின.

அதே சமயம், மத்திய அரசு சார்பில் ஒரு திட்டம் முன்வைக்கப்பட்டது. அதாவது, சென்னை, ஆந்திரம், கர்நாடகம், கேரளம் எனும் நான்கு மாநிலங்களையும் இணைத்து 'தட்சிண பிரதேசம்' என ஒரே மாநிலம் ஆக்கலாம் என்பது தான் அந்தத் திட்டம்.

பெரியார் தம்மை கன்னடர் என நினைத்திருந்தால் அந்த யோசனையை ஆதரித்திருக்கலாமல்லவா? ஆனால் பெரியார் அந்த திட்டத்தைக் கடுமையாக எதிர்த்தார். அதுவும் என்ன சொல்லி? மத்திய அரசின் யோசனைப்படி நான்கும் ஒரே மாநிலம் ஒரே சட்டமன்றம் என்றாகுமானால், அந்த சட்டமன்றத்தில் தெலுங்கனும் கன்னடியனும் சேர்ந்து மெஜாரிட்டி ஆகிவிடுவார்கள். நாம்-அதாவது தமிழர்கள்-தொலைந்தோம்- என இரண்டு கைகளையும் உதறிய படி ஆவேசமாகப் பேசியதை மேடையின் எதிரே தரையில் அமர்ந்து கேட்டவர்களில் நானும் ஒருவன்.

இறுதியாக, தட்சிண பிரதேசம் பற்றி நான்கு மாநில முதல்வர்களுடன் கலந்து பேசி இறுதி முடிவு எடுக்க அன்றைய இந்திய பிரதமர் நேரு திருவனந்தபுரம் வந்தார். காமராஜர் திருவனந்தபுரம் சென்றார். அவர் அங்கு சென்று சேர்ந்த பின்னர், 'தட்சிண பிரதேசம் என்பது தமிழர்களின் தற்கொலையாக முடியும்' என காமராஜருக்கு தந்தி கொடுத்தார் பெரியார். காமராஜர் தந்தியைப் பெற்று அதனை, நேருவிடம் காட்டினார். பெரியாரைப் பற்றி நேரு நன்கறிவார். பெரியாரின் தந்தியைப் பார்த்த நேரு அத்துடன் தட்சிணப் பிரதேச யோசனையைக் கைவிட்டு, தில்லி திரும்பினார் என்பது மறைக்கமாட்டாத வரலாறு.

இவ்விடத்தே இன்னொன்றையும் குறிப்பிடவேண்டும். பெரியார் பார்ப்பனர் எதிரியா? அல்ல, பிராமணர் என்னும் ஆதிக்கத்திற்கு மட்டுமே எதிரி. 1955-இல் பெரியார் 'பிராமணாள் ஓட்டல் மறியல்' என்றொரு போராட்டம் அறிவித்தார். அது எப்படி நடைபெற்றது?

பிராமணர் என்னும் பெயரின்றி சரவணபவன், ஆனந்தபவன், மங்களாம்பிகா விலாஸ் என்பன போன்ற பெயர்களில் நடைபெற்ற பார்ப்பனர் உணவகங்களின் முன்னர் மறியல் நடைபெறவில்லை. அதேசமயம் 'பிராமணாள் ஓட்டல்' என்னும் பெயரில் பார்ப்பனரல்லாதார் நடத்திய உணவகங்களின் முன்னர் மட்டுமே மறியல் நடைபெற்றது. அதாவது எதிர்ப்பு பிராமணாள் என்னும் பெயருக்கன்றி பார்ப்பனருக்கு எதிரானது அல்ல.

பெரியாரைக் கன்னடராகவும், பார்ப்பனரைத் தமிழராகவும் கொள்ளும் தமிழ்த்தேசியர்களுக்கு இவ்வளவு போதும் என நினைக்கிறேன்.

கட்டுரையாளர்:
தலைமையாசிரியர் (ஓய்வு).

தொடங்கட்டும் தொடக்கக் கல்வி

முனைவர் என். மாதவன்

கொள்ளை நோய்த்தொற்று காரணமாக பள்ளிகள் மூடப்பட்டுள்ளதால் உலகம் முழுதும் சுமார் ஒன்றரை கோடி குழந்தைகளின் கல்வி பாதிக்கப்பட்டுள்ளது. பொது முடக்கம் என்கிற நிலை ஏற்பட்டால், கடைசியில் மூடப்படுவதாகவும் பொது முடக்கம் முடிவுக்கு வந்ததும் முதலில் திறக்கப்படுவதாகவும் பள்ளிகள் இருக்க வேண்டும்.

கற்றலில் இழப்பு, உளவியல் ரீதியான பாதிப்பு, பல்வேறு வன்முறை சம்பவங்களையும் சந்திக்க நேரிடுதல், பள்ளியின் மூலம் கிடைக்கும் உணவை இழத்தல், பள்ளியில் இருப்பதன் மூலம் கிடைக்கும் சமூகச் சூழலை இழத்தல் என்று பள்ளி செல்லா மாணவர்களின் குறைகள் ஏராளம்.

அண்மையில் மத்திய அரசின் ஐசிஎம்ஆர் அமைப்பின் பொறுப்பாளர் பல்ராம் பார்கவா செய்தியாளர்களை சந்தித்தபோது, 'பெரியவர்களைவிட குழந்தைகளால் வைரஸ் தொற்றை சிறப்பாக கையாள இயலும். சில ஸ்காண்டிநேவியப் பகுதிக்குட்பட்ட நாடுகளில் எந்த அலையிலும் தொடக்கநிலை பள்ளிகள் மூடப்படவில்லை.

இந்தியாவிலும் இடைநிலைப்பள்ளிகளைத் திறக்காவிட்டாலும், தொடக்கநிலைப் பள்ளிகளைத் திறக்க முற்படுவது அறிவுபூர்வமானது. ஆனால் அதே நேரம், பள்ளியோடு தொடர்புடைய ஆசிரியர்கள், பணியாளர்கள், வாகன ஓட்டுநர்கள் போன்ற அனைவரும் கண்டிப்பாக தடுப்பூசி செலுத்திக்கொண்டிருக்கவேண்டும்' என்று கூறினார்.

இவ்வாறான கருத்துகளைப் பரிசீலித்தும், தொற்று எண்ணிக்கை ஓரளவுக்கு கட்டுக்குள் இருப்பதைக் கருத்தில் கொண்டும் தமிழக அரசு, செப்டம்பர் 1 முதல் பள்ளிகளில் 9 முதல் 12 வரையிலான வகுப்புகளைத் தொடங்க முன்வந்துள்ளது. இது ஒரு வகையில் ஆறுதலான விஷயம்.

ஆனாலும் ஆரம்பப் பள்ளிகள் திறப்பினைப் பற்றிய அறிவிப்புகளும் வெளிவரவேண்டும். சில ஆசிரியர் சங்கங்களும் தொடக்கநிலை வகுப்புகளைத் திறக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளன.

எல்லாப் பள்ளிகளையும் ஒரே நேரத்தில் திறக்க இயலாது என்பது அனைவரும் அறிந்ததே. எனவே பகுதிவாரியாகவும், சுழற்சி முறையில் மாணவர்கள் வரும் வகையிலும் தொடக்கப்பள்ளிகள் செயல்படத் தொடங்கலாம். பள்ளிக் கட்டடங்கள் காற்றோட்டமில்லாததாக இருப்பின், காற்றோட்டமான இடங்களில் செயல்பட அனுமதிக்கலாம்.

பாதுகாப்பு வழிமுறைகளைக் கடைப்பிடிக்க அறிவுறுத்தி குறைந்த எண்ணிக்கையில் மாணவர்கள் உள்ள தொடக்கப் பள்ளிகளாவது உடனடியாக செயல்படத் தொடங்கலாம். இதுவே, கல்வியாளர்கள் பலரின் எதிர்பார்ப்பாக உள்ளது.

மாணவர்களின், பெற்றோர்களின் வாழ்வை இக்காலகட்டம் புரட்டிப் போட்டுள்ளது. ஆசிரியர்களும் பள்ளி சென்று கடமை ஆற்ற இயலாத குற்ற உணர்வுக்கும் மன உளைச்சலுக்கும் ஆளாகி உள்ளனர். பள்ளியின் நடைமுறைகளில் ஏற்றத்தாழ்வுகள் ஏற்பட்டுள்ளன. வசதியான குடும்பங்களின் குழந்தைகள் இணையவழிக் கல்வி மூலம் கற்றலைத் தொடர்கின்றனர். அரசும் கல்வித் தொலைக்காட்சி மூலம் பாடங்களைப் போதித்துவருகிறது.

கல்வியின் முழுப்பரிமாணம் கல்விக்கூடங்கள் முறையாக இயங்குவதில்தான் உள்ளது. மாணவர்களைப் பொருத்தவரை, சக மாணவரிடம் கற்றல், பள்ளி நடைமுறைகளில் பங்கேற்றல், சத்தான உணவு உண்ணுதல், விளையாடுதல், சக மாணவர்களோடு பழகுதல், ஒருவருக்கொருவர் உதவுதல், தேர்வுக்குத் தயாராதல், தேர்வெழுதுதல், மதிப்பெண்களால் பூரிப்படைதல், விரக்தியடைதல் என்ற அனைத்து வாழ்வியலின் பயிற்சிப் பட்டறை பள்ளிகளே.

இவ்வாறான வாழ்வியல் கல்வியை கடந்த ஒன்றரை ஆண்டுகளுக்கும் மேலாக இழத்தல் என்பது வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க இழப்பாகும். ஆனாலும், இதே காலகட்டத்தில் அவர்கள் தமது பாடத்திட்ட வரையறைகளுக்குள் வராத பலவற்றையும் கற்றிருப்பர். விரைவில் திறக்கப்படவிருக்கும் பள்ளிகள் அவற்றுக்கான வாசல்களைத் திறந்து மாணவர்களுக்கு நம்பிக்கை கூட்டுவதாக அமைய வேண்டும். அவ்வாறான பகிர்வுக்கான மனநிலையோடு மாணவர்களும் பள்ளி நோக்கிச் செல்லவேண்டும்.

ஆசிரியர்கள், மாணவர்களோடு நேரடித் தொடர்பு கொண்டு அவர்களை நெறிப்படுத்துவோர் ஆவர். இக்காலகட்டத்தில், மாணவர்களுக்காக புதுப்புது கண்டுபிடிப்புகளை நிகழ்த்தி சுயகல்வி பெறும் வாய்ப்பை ஆசிரியர்கள் இழந்துகொண்டிருக்கின்றனர்.

நீண்ட நாள்களுக்குப் பின் பள்ளி திரும்பும் மாணவர்கள் பல்வேறு உளவியல் சிக்கல்களோடும், பொறுமையிழந்தோருமாகவே வருவர். ஆசிரியர்கள் அவர்களை கையாள்வதற்கான திறமையையும் மனநிலையையும் பெறவேண்டும். அவர்களது வாழ்வியல் முறைகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை உள்வாங்கிக்கொண்டு அவர்களை வழிநடத்த வேண்டும்.

பெற்றோர்கள், காலை எழுந்து பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்பிவிட்டு, தமக்கான வாழ்வாதாரப் பணிகளில் ஈடுபடுவர். பின் மாலைதான் தம் மக்கள் குறித்த நினைவே அவர்களுக்கு வரும். அந்த அளவுக்கு அவர்கள் தமது பணிகளில் ஆழ்ந்துவிடுவர். தற்போது, தொடர்ந்து தமது பிள்ளைகளைக் கண்காணித்துக்கொண்டிருக்கும் பெற்றோர், அவர்களை புதிய கோணத்தில் பார்க்கின்றனர்.

ஆசிரியர்கள் செய்த பணிகளை பெற்றோர் செய்ய முனைகின்றனர். அதற்கான போதிய அனுபவமில்லாத நிலையில் பல்வேறு மனத்தாங்கல்களும் ஏற்படுகின்றன. இது நடுத்தர வர்க்கத்துப் பெற்றோரின் கவலை. தம் மக்கள் கல்வி பற்றி கவலை கொள்ள இயலாத மற்றொரு பிரிவினர் செய்வதறியாது திகைத்து நிற்கின்றனர்.

இன்றைக்கு பலருக்கும் தாங்கள் உயிர் பிழைத்திருப்பதே பாக்கியம் என்ற எண்ணம் மேலோங்கியுள்ளது. இருப்பினும் பிழைத்த பின்னருமுள்ள காலம் ஓரளவுக்காவது வளமானதாக அமைவதில் கல்வியின் பங்கு அளவிடற்கரியது.

வேறு எந்தத் துறையின் பின்னடைவையும் விட கல்வித் துறையின் பின்னடைவு மிகவும் கவலையளிக்கக்கூடியது. கல்வியால் அனைத்தையும் சாதிக்க இயலாது என்பது உண்மை; ஆனால் கல்வியில்லாமல் எதையும் சாதிக்க இயலாது என்பது அதைவிட உண்மை.

அன்புள்ள ஆசிரியருக்கு...

edit.dinamani@gmail.com

பாடம்

இந்தியாவும் சீனாவும் கிழக்கு லடாக் கோக்ராவிலுள்ள கண்காணிப்புப் பகுதியில் நிறுத்தியிருந்த தங்கள் வீரர்களை முழுமையாக திரும்பப் பெற்றிருப்பது சமாதானத்திற்கான முதல் அறிகுறியாகத் தெரிகிறது ('பதற்றம் சற்று தணிகிறது!' தலையங்கம் 10-8-2021). ஆனால், கடந்த ஆண்டு கல்வான் பள்ளத்தாக்கில் இருதரப்பு ராணுவத்தினரும் பின்வாங்கியும், பாங்காங்கிலிருந்து வீரர்களைத் திரும்பப் பெற ஒரு வருடம் காத்திருக்க வேண்டியிருந்தது. சீனாவின் எந்தவொரு நடவடிக்கையையும் நாம் அப்படியே நம்பிவிடக் கூடாது என்பதுதான் வரலாறு நமக்குக் கற்றுத் தந்திருக்கும் பாடம். ஆனாலும் இப்போது மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான முயற்சி வெற்றியடைந்து எல்லைப்பகுதியில் அமைதி திரும்ப வேண்டும்.

ஆ. மரகதம், *செங்கம்.*

பாதிப்பு

அரசுத்துறையில் காலியாகும் பணியிடங்களை உடனுக்குடன் நிரப்ப இயலாமைக்குக் காரணம் அரசிடம் போதிய நிதியாதாரம் இல்லாமையே ('இடைக்கால பணி எத்தனைக் காலம்?' வெ. இன்சுவை 10-8-2021). நிதியில்லாமைக்குக் காரணம் வாக்குவங்கியை மனதில் கொண்டு தேவையற்ற இலவசங்களை வாக்காளர்களுக்கு வாரி வழங்குவதுதான். பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருப்பது, வேலை வாய்ப்பைக் குறைப்பதோடு, குறைந்த அளவிலான ஊழியர்களின் பணிச்சுமையையும் அதிகரிக்கிறது. இது அவர்களை உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் பாதிக்கிறது. இலவசங்களைத் தவிர்த்துவிட்டு, காலிப்பணியிடம் இல்லாத அரசுத்துறை உருவானால்தான் இடைக்கால பணிக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க முடியும்.

என்.ஆர். ஸத்யமூர்த்தி, *கடலூர்.*

புகழ்

டோக்கியோ ஒலிம்பிக் போட்டி வெற்றிகரமாக நடந்து முடிந்திருப்பது மனித குலத்திற்குக் கிட்டியிருக்கும் அசாதாரண வெற்றியாகும் ('மாற்றத்தின் அறிகுறி!' தலையங்கம் 11-8-2021). போட்டி தொடங்கிய முதல் நாளிலேயே பளு தூக்கும் போட்டியில் மீராபாய் சானு வெள்ளிப்பதக்கம் வென்றதும், போட்டி நிறைவடையும் நிலையில் நீரஜ் சோப்ரா தங்கப்பதக்கம் வென்றதும் இந்தியாவின் புகழை உலக அளவில் கொண்டு சென்றிருக்கின்றன. இனி வரும் ஒலிம்பிக் போட்டிகளிலும் இந்திய வீரர்கள் தங்கம் வெல்ல வாழ்த்துவோம்.

கா. மணியன், *மேலூர்.*

பொருத்தம் அன்று

'திராவிடர்' என நம்மை அடையாளப்படுத்துவதற்கு மாறாக 'தமிழர்' என்று அடையாளப்படுத்திக் கொள்வதுதான் நேரிய வழி ஆகும் ('நாம் திராவிடர்கள் அல்ல!' ஜனனி ரமேஷ் 11-8-2021). மொழி வழி மாநிலம் பிரிவதற்கு முன்னர் சென்னை ராஜதானிக்கு பிறமொழியாளர்கள் முதல்வர்களாக இருந்ததால் அப்போது 'திராவிடர்' எனும் சொல்லாட்சி பொருத்தமாக இருந்திருக்கலாம். இப்போது அது பொருத்தம் அன்று.

வேலூரில் நடைபெற்ற தமிழர் விழாவில் உரையாற்றிய நாவலர் சோமசுந்தர பாரதியார், 'தமிழன் தன்னைத் தமிழன் என்று சொல்லிக்கொள்ளாமல் வெட்கப்பட்டு, எவனோ இட்ட பெயரில் பெருமை கொண்டு வாழ்கிறான்' என்று கூறியது இங்கு உணரத்தக்கது. பல ஆண்டுகள் கடந்த நிலையில் திராவிடக் கட்சிகள் தம் பெயரை மாற்றிக்கொள்ளும் என்று தோன்றவில்லை.

புலவர் அ. சிவராம சேது, *திருமுதுகுன்றம்.*

ஏற்புடையதல்ல

மதராஸ் ராஜதானியாக இருந்த போது, 'திராவிடம்' என்று கூறியது சரி. அதனால்தான் அப்போது உருவான கட்சிக்கு 'திராவிடர் கழகம்' என்று பெயர் வைக்கப்பட்டது ('நாம் திராவிடர்கள் அல்ல!' ஜனனி ரமேஷ் 11-8-2021). தமிழ்நாடு உருவான பிறகும் 'திராவிடம்' என்று கூறுவது ஏற்புடையதல்ல. தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகள் பேசுவோம் சென்னையில் இருந்ததால் அண்ணா, தான் தொடங்கிய கட்சிக்கு 'திராவிட முன்னேற்றக் கழகம்' என்று பெயர் சூட்டினார். அவர் 'தமிழ்நாடு' என்று மாநிலத்திற்கு பெயர் சூட்டியவுடன் தனது கட்சிக்கும் 'தமிழக முன்னேற்றக் கழகம்' என்று பெயர் சூட்டியிருந்தால் திராவிடம் என்கிற சொல் அப்போதே வழக்கொழிந்திருக்கும்.

அண்ணா அன்பழகன்,
அந்தணப்பேட்டை.

அருமை

ஆகஸ்ட் 15 'தினமணி'யுடன் இணைக்கப்பட்ட 24 பக்க சிறப்பிதழான 'இந்தியா 75' விடுதலை அடைந்த நாளிலிருந்து எப்படிப் படிப்படியாக இந்தியா வளர்ச்சி பெற்று வந்துள்ளது என்பதை சிறப்பாக விளக்கியது. இந்தியாவோடு விடுதலை பெற்ற பல நாடுகளில் ஜனநாயகம் மறைந்து ராணுவ ஆட்சி நிலவிவரும் வேளையில் இந்தியாவில் மட்டும் இன்னும் ஜனநாயகம் உயிர்ப்புடன் இருப்பதை விளக்கியதோடு, அதற்கு முக்கிய காரணம் அன்றைய பிரதமர் ஜவாஹர்லால் நேருவே என்பதை விளக்கியிருந்ததும் அருமை. 24 பக்கங்களில் 75 ஆண்டுகால சுதந்திர இந்தியாவின் வரலாற்றை சுருக்கமாகவும், சுவையாகவும் தொகுத்துத் தந்திருக்கும் 'தினமணி'க்கு வாழ்த்துகள்.

சொ. முத்துசாமி,
பாளையங்கோட்டை.

மனிதகுலம் எதிர்கொள்ளும் சவால்களைத் தீர்க்க விஞ்ஞானிகள் மாறுபட்டு சிந்திக்க வேண்டும்

குடியரசு துணைத் தலைவர் எம்.வெங்கையா நாயுடு

பெங்களூரு, ஆக. 16: மனிதகுலம் எதிர்கொள்ளும் சவால்களைத் தீர்ப்பதற்கு விஞ்ஞானிகள் மாறுபட்டு சிந்திக்க வேண்டும் என குடியரசு துணைத் தலைவர் எம்.வெங்கையா நாயுடு கேட்டுக்கொண்டார்.

பெங்களூரில் திங்கள்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் ஜவாஹர்லால் நேரு அதிநவீன அறிவியல் ஆராய்ச்சி மையத்தின் புத்தாக்கம் மற்றும் மேம்பாட்டு மையத்துக்கு அடிக்கல் நாட்டிய பிறகு அவர் பேசியதாவது:

உயர்கல்வி, ஆராய்ச்சி கல்வி நிறுவனங்களில் பெண்கள் அதிக அளவில் பயில வேண்டும். மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கு ஒவ்வொரு விஞ்ஞானியும் புதுமையாகவும், முனைப்போடும் செயல்பட வேண்டும். பருவநிலை மாற்றம், வேளாண்மை, சுகாதாரம், மருந்து உள்பட பல்வேறு துறை தொடர்பாக மனிதகுலம் எதிர்கொள்ளும் சவால்களைத் தீர்ப்பதற்கு விஞ்ஞானிகள் மாறுபட்டு சிந்திக்க வேண்டும்.

எந்தவொரு ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆராய்ச்சியாக இருந்தாலும், அது சமூகத்துக்கு உகந்ததாக இருக்க வேண்டும். இந்த நோக்கில் பார்க்கும்போது, ஆராய்ச்சிகள் மனித சமூகம் பயன்படுத்தக் கூடியதாக மாற வேண்டும். அந்த வகையில், ஜவாஹர்லால் நேரு அதிநவீன அறிவியல் ஆராய்ச்சி மையம் தனது கண்டுபிடிப்புகளுக்காக 300 காப்புரிமைகளைப் பெற்றுள்ளதோடு, தனது சொந்தக் கண்டுபிடிப்புகளை 'ஸ்டார்ட்-அப்'-கள் வாயிலாக மேம்படுத்தியும் இருக்கிறது.

பாரதரத்னா விருது பெற்றுள்ள விஞ்ஞானி சி.என்.ஆர்.ராவ், புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மற்றும் அதன் சேமிப்பில் ஆராய்ச்சிப் பணியில் ஈடுபட்டதற்காக 2020-ஆம் ஆண்டுக்கான பன்னாட்டு 'எனி' விருதுக்கு முன்மொழியப்பட்டுள்ளார். அவர், இந்தியாவில் மட்டுமல்லாது உலக அளவிலான இளம் விஞ்ஞானிகளை ஈர்த்து வருகிறார்.

ஜவாஹர்லால் நேரு அதிநவீன அறிவியல் ஆராய்ச்சி மையமானது பல்வேறு துறை சார்ந்த அதிநவீன ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகிறது. செயற்கை உயிரியல், கணக்கீட்டு உயிரியல், உயர்செயல்பாட்டு பொறியியல் பொருள்கள், செயற்கை நுண்ணறிவு போன்ற வளர்ந்து வரும் புதிய துறைகளில் ஆராய்ச்சிகளை மேற்கொள்ள விஞ்ஞானிகள், ஆராய்ச்சியாளர்கள் முன்வர வேண்டும்.

பெங்களூரில் ஜவாஹர்லால் நேரு அதிநவீன அறிவியல் ஆராய்ச்சி மையத்தின் புத்தாக்கம் மற்றும் மேம்பாட்டு மையத்துக்கு திங்கள்கிழமை அடிக்கல் நாட்டிய பிறகு, திட்டப் பணியை பார்வையிடுகிறார் குடியரசு துணைத் தலைவர் எம்.வெங்கையா நாயுடு. உடன், ஆளுநர் தாவர்சந்த் கெலாட், முதல்வர் பசவராஜ் பொம்மை உள்ளிட்டோர்.

உலக அளவில் ஜவாஹர்லால் நேரு அதிநவீன அறிவியல் ஆராய்ச்சி மையம் தனக்கே உரிய தலைசிறந்த நிபுணத்துவத்தை பயன்படுத்திக்கொண்டு சர்வதேச அளவில் சிறந்ததொரு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. தனது தரத்தை தொடர்ந்து பராமரித்து, உலகின் சிறந்த பல்கலைக்கழகங்களில் ஒன்றாக உயர வேண்டும் என்ற இலக்கை நோக்கி இம்மையம் பயணிக்கும் என்று நம்புகிறேன்.

தேசிய கல்வி நிறுவனங்களுக்கான தரவரிசையின்படி, இம்மையம் சிறந்த பல்கலைக்கழகங்களில் 4-ஆவது இடத்தையும், மொத்தத்தில் 11-ஆவது இடத்தையும் பெற்றுள்ளது. இம்மையத்தில் பயிலும் மாணவர்களில் 40 சதவீதம் பேர் பெண்கள் என்பது மகிழ்ச்சி அளிக்கிறது. இதை மேலும் ஊக்குவிக்க வேண்டும்.

எந்தவொரு நாட்டின் வளர்ச்சிக்கும், தொழில்நுட்ப முன்னேற்றத்துக்கும் அறிவியல்தான் முதுகெலும்பாக விளங்குகிறது. அதிக அளவிலான இளைஞர்களின் எண்ணிக்கை இந்தியாவுக்கு நல்வாய்ப்பாக அமைந்துள்ளது. இளைஞர்களிடையே அறிவியல் மனப்பான்மையை வளர்த்தெடுக்க வேண்டும். அதன்மூலம் சமூக சிக்கல்களைத் தீர்ப்பதற்கு உலகத்தரத்திலான ஆராய்ச்சிகளில் ஈடுபட வேண்டும்.

அனைத்து வகையான புதிய கற்பித்தல் மற்றும் கற்றல் முறைகளை மாணவர்கள் பெறுவதற்கு புதிய கல்விக் கொள்கை வழிவகுக்கும். இது கற்பதற்கான சரியான சூழலை உருவாக்கித் தருவதோடு, அது திறமைக்கு தகுந்தவாறு மாணவர்களின் அறிவுத்தளத்தையும் விரிவுபடுத்தும். இந்தக் குறிக்கோளை செயல்படுத்துவதற்காகதான், கடந்த சில ஆண்டுகளில் நாட்டில் புதிய ஐஐடிக்கள், ஐஐஎம்கள், மத்திய பல்கலைக்கழகங்கள், திறன் மேம்பாட்டு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை, ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனங்களை ஒரே குடையின் கீழ் கொண்டுவருவதற்காகவே தேசிய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ஆராய்ச்சி பல்கலைக்கழகத்தை அமைக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது என்றார்.

விழாவில், ஆளுநர் தாவர்சந்த் கெலாட், முதல்வர் பசவராஜ் பொம்மை, பேராசிரியர் சி.என்.ஆர்.ராவ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

2 ஏக்கர் நிலம் எத்தனை விவசாயிகளுக்கு கொடுத்தீர்கள்?

எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி கேள்வி

சென்னை, ஆக. 16: திமுக தேர்தல் வாக்குறுதியில் அளித்தபடி 2 ஏக்கர் நிலம் எத்தனை விவசாயிகளுக்குத் தரப்பட்டது என எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி கே.பழனிசாமி கேள்வி எழுப்பினார்.

சட்டப்பேரவையில் நிதிநிலை மற்றும் வேளாண் நிதிநிலை அறிக்கைகள் தொடர்பான விவாதம் திங்கள்கிழமை நடைபெற்றது. அப்போது, அதிமுகவும் தேர்தல் நேரத்தில் அறிவித்த வாக்குறுதிகளை ஆட்சிக்கு வந்த பிறகு நிறைவேற்றவில்லை என்பதை முதல்வர் சுட்டிக் காட்டிப் பேசினார். அவரது பேச்சினைத் தொடர்ந்து எழுந்த விவாதம்:

எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி கே. பழனிசாமி: நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு 2 ஏக்கர் நிலம் தரப்படும் என திமுக தேர்தல் அறிக்கையில் முன்பு தெரிவிக்கப்பட்டது. ஆட்சிக்கு வந்ததும் எத்தனை விவசாயிகளுக்குக் கொடுத்தீர்கள். முழுமையாக நிறைவேற்றவில்லை. அதைப் போன்றே அனைத்து இல்லத்தரசிகளுக்கும் மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் தரப்படும் என இப்போதைய தேர்தலுக்கு முன்பாக அறிவித்தீர்கள். ஆனால், நிதிநிலை அறிக்கையிலோ ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் என குறிப்பிட்டுள்ளீர்கள். தேர்தலுக்கு முன்பு ஒரு கருத்து, தேர்தலுக்குப் பிறகு மற்றொரு கருத்தா என்பதே என் கேள்வி.

அமைச்சர் ஐ.பெரியசாமி: திமுக ஆட்சிக் காலத்தில் அரசு நிலங்கள் ஏழைகளுக்குப் பிரித்து கொடுக்கப்பட்டது. சுமார் 2.5 லட்சம் ஏக்கர் நிலங்களை ஏழை மக்களுக்குப் பிரித்துக் கொடுத்த அரசு திமுக அரசு.

அமைச்சர் எ.வ.வேலு: 2016-ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையில் அதிமுக பல்வேறு வாக்குறுதிகளை அளித்தது. வீட்டுக்கு ஒருவருக்கு வேலை, புதிய துணைக்கோள் நகரம் போன்ற திட்டங்கள் நிறைவேற்றப்படவில்லை என்றார்.

நகை-பயிர்க் கடன்களில் பல கோடி ரூபாய் முறைகேடு

அதிமுக அரசு மீது முதல்வர் மு.க.ஸ்டாலின் குற்றச்சாட்டு

சென்னை, ஆக. 16: அதிமுக ஆட்சிக் காலத்தில் நகை மற்றும் பயிர்க் கடன்கள் வழங்கப்பட்டதில் பல கோடி ரூபாய் முறைகேடுகள் நடைபெற்றுள்ளதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் குற்றஞ்சாட்டினார். மேலும், நிதிப் பற்றாக்குறைகளைக் களைந்து தேர்தல் வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்றுவதே லட்சியம் என்றும் அவர் கூறினார்.

சட்டப்பேரவையில் நிதிநிலை மற்றும் வேளாண் நிதிநிலை அறிக்கைகள் மீதான விவாதம் திங்கள்கிழமை தொடங்கியது. விவாதத்தை அதிமுக உறுப்பினர் ஆர்.பி.உதயகுமார் தொடக்கி வைத்தார். அப்போது, அதிமுக ஆட்சியில் தொடங்கப்பட்ட சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை தொடர வேண்டும் எனவும், நிதிநிலையைக் காரணம் காட்டி தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் இருந்து அரசு பின்வாங்கி விடுமோ என்ற சந்தேகமும் ஏற்படுகிறது என்றார்.

அதிமுக உறுப்பினர் உதயகுமாரின் பேச்சுக்கு பதிலளித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆற்றிய உரை:

சட்டப்பேரவையில் திங்கள்கிழமை உரையாற்றிய முதல்வர் மு.க.ஸ்டாலின்.

வெள்ளை அறிக்கை என்பது ஏதோ தேர்தல் அறிக்கையில் திமுக வழங்கியிருக்கக் கூடிய உறுதிமொழிகளை எல்லாம் நிறைவேற்ற முடியாத நிலையிலே பின்வாங்குவதற்கான முயற்சி என்ற பொருள்படும் வகையில் ஒரு கருத்தினை அதிமுக உறுப்பினர் பேசியிருக்கிறார். 100-ஆவது நாளை நிறைவு செய்திருக்கும் ஆட்சிக்குத் தெரிவிக்கப்பட்ட பாராட்டுக்கு நான் ஏற்புரை ஆற்றும் போதுகூட, எந்தக் காரணத்தைக் கொண்டும், நாங்கள் அளித்திருக்கக் கூடிய வாக்குறுதிகளில் இருந்து என்றைக்கும் பின்வாங்க மாட்டோம் என்றேன்.

நகை-பயிர்க் கடன்கள்: நகைக் கடன்களை வழங்க வேண்டுமென்று நாங்கள் கருதினாலும், அதில் பல முறைகேடுகள் நடைபெற்றிருக்கின்றன. விவசாயிகளின் பயிர்க் கடனைத் தள்ளுபடி செய்வதைக் கணக்கிட்டுப் பார்க்கும் போது, அதிலும் பல கோடி ரூபாய் அளவுக்கு முறைகேடுகள் நடந்துள்ளன. அதையெல்லாம் முறையாகச் சரி செய்து, அதற்குப் பிறகு நிச்சயமாக அது வழங்கப்படும்.

அதிமுகவும் நிறைவேற்றவில்லை: கடந்த 2016 தேர்தலின் போது அதிமுக அறிவித்த வாக்குறுதிகளை, நாங்களும், நாட்டு மக்களும் மறக்கவில்லை. இலவச செல்லிடப்பேசி, ஆவின் பால் பாக்கெட் விலை ரூ.25, ஏழை மக்களுக்கு அம்மா மினரல் வாட்டர், குறைந்த விலையில் அவசியமான மளிகைப் பொருள்கள், அம்மா வங்கி அட்டை, கோ-ஆப்டெக்ஸ் துணிகள் வாங்க கூப்பன், அனைத்து இடங்களிலும் வை-ஃபை வசதி, அம்பேத்கர் அறக்கட்டளை போன்ற திட்டங்களை தேர்தலுக்கு முன்பாக அறிவித்தீர்கள். தேர்தலுக்குப் பிறகு ஆட்சிக்கு வந்ததும் நிறைவேற்றினீர்களா. இப்படி ஒரு பெரிய பட்டியலே இருக்கிறது.

விவசாயிகளின் பயிர்க் கடன்கள், நகைக் கடன்களைப் பொருத்தவரையில் எங்கெங்கு முறைகேடுகள், தவறுகள் நடந்திருக்கின்றன என்பது குறித்து தனது மானியக் கோரிக்கையின் போது கூட்டுறவுத் துறை அமைச்சர் விளக்கமாக எடுத்துரைப்பார் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறினார்.

ஸ்டெர்லைட்டில் ஆக்சிஜன் உற்பத்தி: போராடியவர்கள் மீதான வழக்கை விசாரிக்கத் தடை

மதுரை, ஆக. 16: ஸ்டெர்லைட் ஆலையில் தொடர்ந்து ஆக்சிஜன் உற்பத்திக்கு அனுமதி கோரி போராடியவர்கள் மீதான வழக்கை விசாரிக்க இடைக்காலத் தடை விதித்து சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளை திங்கள்கிழமை உத்தரவிட்டது.

தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலையின் துணைத்தலைவர் சுமதி தாக்கல் செய்த மனு: இந்தியாவில் கரோனா 2 -ஆவது அலையின் போது ஆக்சிஜன் பற்றாக்குறை ஏற்பட்டது. இந்நிலையில் ஸ்டெர்லைட் ஆலையில் ஆக்சிஜன் உற்பத்தி செய்ய நீதிமன்றம் ஜூலை 31 -ஆம் தேதி வரை அனுமதி வழங்கியிருந்தது.

இந்நிலையில், புதியம்புதூரைச் சேர்ந்த சிலர், ஸ்டெர்லைட் ஆலையில் ஆக்சிஜன் உற்பத்தியை தொடர வேண்டும் என ஜூலை 27- ஆம் தேதி வலியுறுத்தினர். அவர்கள் மீது போலீஸார் வழக்குப்பதிவு செய்தனர். இந்த வழக்கை விசாரிக்கத் தடைவிதிக்கவும், வழக்கை ரத்து செய்யவும் உத்தரவிட வேண்டும் எனக் குறிப்பிட்டிருந்தார்.

ஸ்டெர்லைட் ஆலையில் ஆக்சிஜன் உற்பத்திக்கு அனுமதி கோரி போராடியவர்கள் தங்கள் மீதான வழக்கை ரத்து செய்யக்கோரி புதியம்புதூரைச் சேர்ந்த கதிரேசன், செந்தில்குமார் உள்ளிட்ட பலர் மனு தாக்கல் செய்திருந்தனர்.

இந்த மனுக்கள் நீதிபதி ஜி.இளங்கோவன் முன் திங்கள்கிழமை விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதி, ஆக்சிஜன் உற்பத்தி கோரி போராடியவர்கள் மீதான வழக்கை விசாரிக்க இடைக்காலத் தடை விதித்தும், வழக்கை ரத்து செய்வது தொடர்பாக சிப்காட் மற்றும் புதியம்புதூர் காவல் ஆய்வாளர் பதிலளிக்கவும் உத்தரவிட்டு, விசாரணையை செப்டம்பர் 22- ஆம் தேதிக்கு ஒத்திவைத்தார்.

பெட்ரோல்-டீசல் வரியைக் குறைக்க முடியாதது ஏன்?

மத்திய நிதியமைச்சர் விளக்கம்

புது தில்லி, ஆக. 17: முந்தைய காங்கிரஸ் தலைமையிலான அரசு எண்ணெய் நிறுவனங்களுக்கு வழங்கிய எண்ணெய்ப் பத்திரங்களால் ஏற்பட்டுள்ள சுமை மட்டும் இல்லையென்றால், பெட்ரோல்-டீசல் விலை உயர்வை எளிதாக குறைத்திருக்க முடியும் என்றார் மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன்.

இதுதொடர்பாக தில்லியில் செய்தியாளர்களிடம் அவர் கூறியது:

முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியின் போது பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு, மண்ணெண்ணெய் ஆகியவை மானிய விலையில் விற்பனை செய்யப்பட்டன. அதற்கான மானியத் தொகையை ரொக்கமாக வழங்காமல் எண்ணெய் விற்பனை நிறுவனங்களுக்கு ரூ.1.34 லட்சம் கோடிக்கு எண்ணெய்ப் பத்திரங்களாக வழங்கப்பட்டன. அந்த எண்ணெய்ப் பத்திரங்கள் மற்றும் அதற்கான வட்டி இப்போது செலுத்தப்படுகிறது.

அந்த எண்ணெய்ப் பத்திரங்களுக்கான வட்டியை செலுத்த வேண்டிய சூழ்நிலை இருந்திருக்காவிட்டால், பெட்ரோல்-டீசல் மீதான கலால் வரியை இப்போது எளிதாக குறைத்திருக்க முடியும். எண்ணெய்ப் பத்திரங்களை விநியோகித்ததன் மூலம் முந்தைய அரசு நமது பணியை கடினமாக்கிவிட்டது. கடந்த 7 ஆண்டுகளில் எண்ணெய்ப் பத்திரங்களுக்கான வட்டியாக ரூ.70,195.72 கோடி செலுத்தப்பட்டுள்ளது.

ரூ.1.34 லட்சம் கோடி எண்ணெய்ப் பத்திரங்களில், ரூ.3,500 கோடி முதன்மைத் தொகை மட்டும் செலுத்தப்பட்டுள்ளது. மீதி ரூ.1.3 லட்சம் கோடி 2025-26-ஆம் நிதியாண்டுக்குள் திரும்பச் செலுத்தப்பட வேண்டும்.

நிகழ் நிதியாண்டில் (2021-22) அரசு ரூ.10,000 கோடியை திரும்பச் செலுத்த வேண்டும். மேலும் ரூ.31,150 கோடி 2023-24-ஆம் நிதியாண்டிலும், ரூ.52,860.17 கோடி 2024-25-ஆம் நிதியாண்டிலும், ரூ.36,913 கோடி 2025-26-ஆம் நிதியாண்டிலும் திரும்பச் செலுத்தப்பட வேண்டும்.

குறிப்பிடத்தக்க தொகை வட்டிக்கும், அசல் தொகைக்குமே போய்விடுகிறது. இதனால், இப்போதைய அரசுக்கு நியாயமற்ற சுமை ஏற்பட்டுள்ளது.

2014-15-இல் ஆரம்ப இருப்பானது ரூ.1.34 லட்சம் கோடியாகவும், திரும்பச் செலுத்தப்பட வேண்டிய வட்டி ரூ.10,255 கோடியாகவும் இருந்தது. 2015-16-லிருந்து ஆண்டுக்கு ரூ.9,989 கோடி வீதம் வட்டிச் சுமை அதிகரித்துக் கொண்டே செல்கிறது. பெட்ரோல், டீசல் மீதான உயர்த்தப்பட்ட கலால் வரியிலிருந்து கிடைக்கும் தொகையானது, எண்ணெய் நிறுவனங்களுக்குச் செலுத்தப்பட வேண்டிய தொகையைவிடக் குறைவாகும். ஆதலால் பெட்ரோல்-டீசல் மீதான வரியை குறைக்க வழியில்லை என்றார் நிர்மலா சீதாராமன்.

பெட்ரோல் மீதான கலால் வரியானது கடந்த ஆண்டு லிட்டருக்கு ரூ.19.98-லிருந்து ரூ.32.9-ஆக உயர்த்தப்பட்டது. பெட்ரோல்-டீசலுக்கு விதிக்கப்பட்ட வரி மூலம் மத்திய அரசுக்கு கடந்த நிதியாண்டில் ரூ.3.35 லட்சம் கோடி கிடைத்தது. இது அதற்கு முந்தைய நிதியாண்டில் ரூ.1.78 லட்சம் கோடியாக இருந்தது. இந்த உயர்வானது 88 சதவீதம் அதிகமாகும்.

பெகாஸஸ் உளவு விவகாரத்தை ஆராய நிபுணர்கள் குழு

உச்சநீதிமன்றத்தில் மத்திய அரசு தகவல்

புது தில்லி, ஆக. 16: பெகாஸஸ் உளவு விவகாரத்தில் மறைப்பதற்கு எதுவுமில்லை என்று உச்சநீதிமன்றத்தில் தெரிவித்த மத்திய அரசு, அக்குற்றச்சாட்டு தொடர்பாக ஆராய்வதற்கு நிபுணர்கள் அடங்கிய குழு அமைக்கப்படும் எனத் தெரிவித்துள்ளது.

இஸ்ரேலின் என்எஸ்ஓ நிறுவனம் உருவாக்கிய பெகாஸஸ் உளவு மென்பொருளைப் பயன்படுத்தி இந்தியாவில் எதிர்க்கட்சியினர், சமூக ஆர்வலர்கள், பத்திரிகையாளர்கள் உள்ளிட்ட சுமார் 300 பேரின் செல்லிடப்பேசிகள் உளவு பார்க்கப்பட்டதாகக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இது குறித்து சுதந்திரமான விசாரணை நடத்துவதற்கு தனிக் குழுவை நியமிக்கக் கோரி மூத்த பத்திரிகையாளர் என்.ராம், மார்க்சிஸ்ட் எம்.பி. ஜான் பிரிட்டாஸ் உள்ளிட்டோர் சார்பில் உச்சநீதிமன்றத்தில் 9 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

அந்த மனுக்கள் மீதான விசாரணை, தலைமை நீதிபதி என்.வி. ரமணா, நீதிபதிகள் சூர்யகாந்த், அனிருத்தா போஸ் ஆகியோரைக் கொண்ட அமர்வு முன் திங்கள்கிழமை நடைபெற்றது. அப்போது, மத்திய அரசு சார்பில் ஆஜரான சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா கூறுகையில், "பெகாஸஸ் உளவு விவகாரம் முக்கியமான பிரச்னை. இதைப் பரபரப்பாக்குவதற்கான முயற்சிகளை சிலர் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தவிவகாரத்தில் தேசப்பாதுகாப்பு சம்பந்தப்பட வாய்ப்புள்ளது. பெகாஸஸ் விவகாரத்தில் மறைப்பதற்கு எதுவுமில்லை. இந்த விவகாரத்தில் பல்வேறு தொழில்நுட்ப அம்சங்கள் நிறைந்துள்ளதால், அது தொடர்பாக ஆராய்வதற்கு நிபுணர்கள் தேவைப்படுகின்றனர்.

மத்திய அரசைப் பொருத்தவரை, இந்தக் குற்றச்சாட்டு முற்றிலும் தவறானது. எனினும், பெகாஸஸ் உளவுக் குற்றச்சாட்டு குறித்து விசாரிப்பதற்கு நடுநிலையான நிபுணர்களைக் கொண்ட குழுவை மத்திய அரசு நியமிக்கும்" என்றார்.

மத்திய அரசின் விசாரணை தேவையில்லை: மனுதாரரான என்.ராம் தரப்பில் ஆஜரான மூத்த வழக்குரைஞர் கபில் சிபல் வாதிடுகையில், "மத்திய அரசோ அல்லது அதன் விசாரணை அமைப்புகளோ பெகாஸஸ் உளவு மென்பொருளைப் பயன்படுத்தினார்களா என்று தெரிவிக்கப்படவில்லை. அதுகுறித்து பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்ய மத்திய அரசுக்கு நீதிமன்றம் உத்தரவிட வேண்டும். இந்த விவகாரத்தை ஆராய்வதற்கு மத்திய அரசே குழு அமைப்பதில் எங்களுக்கு விருப்பமில்லை" என்றார்.

ஆதாரமற்ற குற்றச்சாட்டு: முன்னதாக, நீதிமன்றத்தில் மத்திய அரசு தாக்கல் செய்த பிரமாணப் பத்திரத்தில், 'ஆதாரமற்ற ஊடக அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு மனுதாரர்கள் வழக்கு தொடுத்துள்ளனர். இந்த விவகாரம் தொடர்பாக மத்திய தகவல்-தொழில்நுட்பத் துறை அமைச்சர் நாடாளுமன்றத்தில் ஏற்கெனவே விளக்கமளித்துவிட்டார்' என்று குறிப்பிட்டிருந்தது. மனுக்கள் மீதான விசாரணை, உச்சநீதிமன்றத்தில் ஆகஸ்ட் 17-ஆம் தேதி தொடர்ந்து நடைபெறவுள்ளது.

7 ஐபிஎஸ் அதிகாரிகள் பணியிட மாற்றம்

சென்னை, ஆக.16: தமிழக காவல்துறையில் 7 ஐபிஎஸ் அதிகாரிகள் பணியிட மாற்றம் செய்யப்பட்டனர்.

இது குறித்து தமிழக அரசின் உள்துறை கூடுதல் தலைமைச் செயலர் எஸ்.கே.பிரபாகர் திங்கள்கிழமை வெளியிட்ட உத்தரவு (பழைய பணியிடம் அடைப்புக்குள்)

தேஷ்முக் சேகர்-மதுரை தமிழ்நாடு சிறப்புக் காவல் படை 6-ஆவது அணி கமாண்டன்ட் (ராணிப்பேட்டை மாவட்ட காவல் கண்காணிப்பாளர்)

தீபா சத்யன்-ராணிப்பேட்டை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் (சென்னை ரயில்வே காவல்துறை கண்காணிப்பாளர்)

ஏ.இளங்கோ-சென்னை ரயில்வே காவல்துறை கண்காணிப்பாளர் (மதுரை தமிழ்நாடு சிறப்புக் காவல் படை 6வது அணி கமாண்டன்ட்)

டி.மகேஷ்குமார்-சென்னை நிலமோசடி தடுப்பு பிரிவு காவல் கண்காணிப்பாளர் (சேலம் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு காவல் கண்காணிப்பாளர்)

ஆர்.ஜெயந்தி-சேலம் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு காவல் கண்காணிப்பாளர் (ராமநாதபுரம் தமிழக கடலோர பாதுகாப்புக் குழுமம் காவல் கண்காணிப்பாளர்)

டி.கல்பனாநாயக்-சென்னை ரயில்வே காவல்துறை ஐஜி (பொருளாதாரக் குற்றப்பிரிவு ஐஜி)

அபின் தினேஷ் மோடக்-பொருளாதாரக் குற்றப்பிரிவு (கல்வி விடுமுறையில் இருந்து பணிக்கு திரும்பியுள்ளார்).

அடிப்படை உரிமைகள் நசுக்கப்படும்போது மௌனமாக இருப்பது பாவச் செயல்

புதுதில்லி, ஆக. 16: மக்களின் அடிப்படை உரிமைகளும் அரசியல் சாசனமும் நசுக்கப்படும்போது மௌனமாக இருப்பது பாவச் செயல் என்று காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி தெரிவித்துள்ளார்.



இது தொடர்பாக ஆங்கில நாளிதழ் ஒன்றில் எழுதிய கட்டுரையில் அவர் கூறியிருப்பது: மத்திய அரசு நாடாளுமன்றத்தைத் தாக்கி, அதன் மரபுகளை நசுக்கி, ஜனநாயகத்தை அடிமைப்படுத்தி, அரசியல் சாசனத்தை மீற முயற்சித்து, அமைப்புகளின் தன்னாட்சியைப் பறிக்கும் போது சுதந்திரத்துக்கு என்ன அர்த்தம் என்பதை மக்கள் சுயபரிசோதனை செய்து கொள்ள வேண்டியுள்ளது. நமது அரசியல் சாசனத்தை உருவாக்கிய முன்னோர் உறுதிப்படுத்தியுள்ள மக்களின் அடிப்படை உரிமைகள் நசுக்கப்படும்போது அமைதியாக இருப்பது பாவச் செயல்.

தற்போது பத்திரிகையாளர்கள் உண்மையை எழுதுவதற்கு சுதந்திரம் இல்லை. உண்மையான செய்திகளைக் காட்டும் சுதந்திரம் தொலைக்காட்சிகளுக்கு இல்லை. எழுத்தாளர்களும் சிந்தனையாளர்களும் தங்கள் கருத்தைக் கூற சுதந்திரம் இல்லை.

நாடாளுமன்றவாதிகளுக்கும் தாங்கள் நினைக்கும் கருத்தைக் கூறும் சுதந்திரம் இல்லை. ஆக்சிஜன் தட்டுப்பாட்டு பிரச்னையாலும் ஜிஎஸ்டியாலும் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு அதுகுறித்து பேசும் சுதந்திரம் இல்லை. கூட்டாட்சி அமைப்பில் மாநிலங்கள் தங்களுக்கு உரிமையானதை கோரிப் பெறும் சுதந்திரம் இல்லை.

இந்திய ஜனநாயகத்தை பழுது பார்க்க வேண்டியுள்ளது. அதற்கு ஏற்பட்டுள்ள சேதத்தை சரி செய்ய வேண்டியுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

வாஜ்பாய் நினைவு தினம்: குடியரசுத் தலைவர், பிரதமர் அஞ்சலி

புது தில்லி, ஆக. 16: முன்னாள் பிரதமரும், பாஜக மூத்த தலைவருமான அடல் பிகாரி வாஜ்பாயின் நினைவு தினத்தையொட்டி குடியரசு துணைத் தலைவர் வெங்கையா நாயுடு, பிரதமர் நரேந்திர மோடி ஆகியோர் அவருக்கு புகழஞ்சலி செலுத்தினர்.

பாஜக சார்பில் பிரதமரான முதல் தலைவர், காங்கிரஸ் கட்சியைச் சாராமல் 5 ஆண்டுகள் பிரதமராக இருந்த முதல் தலைவர் என்ற பெருமைக்குரிய வாஜ்பாய், கடந்த 2018-ஆம் ஆண்டு தனது 93-ஆவது வயதில் காலமானார்.

அவரது நினைவு தினத்தையொட்டி, தில்லியில் உள்ள அவரது நினைவிடத்தில் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த், குடியரசு துணைத் தலைவர் வெங்கையா நாயுடு, பிரதமர் நரேந்திர மோடி, உள்துறை அமைச்சர் அமித் ஷா உள்ளிட்ட மத்திய அமைச்சர்கள், பாஜக தேசியத் தலைவர் ஜே.பி. நட்டா உள்ளிட்ட பாஜக தலைவர்கள் பலர் திங்கள்கிழமை நேரில் அஞ்சலி செலுத்தினர்.

தில்லியில் உள்ள வாஜ்பாய் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்திய குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த், குடியரசு துணைத் தலைவர் வெங்கையா நாயுடு, பிரதமர் நரேந்திர மோடி.

வாஜ்பாயை நினைவுகூர்ந்து வெங்கையா நாயுடு சுட்டுரையில் வெளியிட்ட பதிவில், 'நமது நாட்டுக்காக அர்ப்பணிப்புடன் தன்னை ஒப்படைத்தவர் வாஜ்பாய். சிறந்த அரசு நிர்வாகத்துக்கு உதாரணமாக அவர் விளங்கினார். நாட்டின் வளர்ச்சியில் அவரது பங்களிப்பு எப்போதும் நினைவுகூரப்படும். சிறந்த நாடாளுமன்றவாதி, கவிஞர், பேச்சாளர், இலக்கியவாதியாகவும் வாஜ்பாய் திகழ்ந்தார்' என்று கூறியுள்ளார்.

பிரதமர் மோடி வெளியிட்ட சுட்டுரைப் பதிவில், 'வாஜ்பாயின் கனிவான ஆளுமை, அன்பான குணநலன், அவரின் நகைச்சுவை உணர்வு, அவர் நாட்டு முன்னேற்றத்துக்கு ஆற்றிய அரும்பணிகள் ஆகிய அனைத்தையும் நாம் நினைவுகூர்கிறோம். நாட்டு மக்களின் மனதில் வாஜ்பாய் என்றும் வாழ்கிறார். வாஜ்பாயின் நினைவு நாளை முன்னிட்டு அவரது நினைவிடத்துக்குச் சென்று மரியாதை செலுத்தினேன்' என்று கூறியுள்ளார்.

உத்தர பிரதேசத்தை சேர்ந்த வாஜ்பாய் 50 ஆண்டுகளுக்கு மேல் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த பெருமைக்குரியவர். மக்களவைக்கு 9 முறையும், மாநிலங்களவைக்கு இருமுறையும் தேர்வு செய்யப்பட்டார். உத்தர பிரதேசம், மத்திய பிரதேசம், குஜராத், தில்லி என 4 வெவ்வேறு மாநிலங்களில் இருந்து மாநிலங்களவைக்குத் தேர்வு செய்யப்பட்ட ஒரே தலைவர் வாஜ்பாய் மட்டுமே.

2015-ஆம் ஆண்டு அவருக்கு நாட்டின் மிக உயரிய கௌரவமான பாரத ரத்னா விருது வழங்கப்பட்டது. பாரதிய ஜன சங்கத்தின் நிறுவன உறுப்பினரான வாஜ்பாய், பாஜக நிறுவப்பட்டபோது அதன் முதல் தலைவராகவும் இருந்தார். மொரார்ஜி தேசாய் அமைச்சரவையில் வெளியுறவுத் துறை அமைச்சராகவும் பொறுப்பு வகித்துள்ளார். அவரது பிறந்த தினமான டிசம்பர் 25-ஆம் தேதி 'சிறந்த நிர்வாக தினமாக' கொண்டாடப்படுகிறது.

இந்தியாவில் கரோனா பாதிப்பு

திங்கள்கிழமை காலை 8 மணி நிலவரம்

24 மணி நேரத்தில் புதிய பாதிப்பு

32,937

மொத்த பாதிப்பு எண்ணிக்கை

3,22,25,513

மொத்த உயிரிழப்பு

4,31,642

கடந்த 24 மணி நேரத்தில் பதிவு செய்யப்பட்ட உயிரிழப்பு

417

அதிக உயிரிழப்புகள்

மகாராஷ்டிரம்	130
கேரளம்	102
ஒடிஸா	64

தேசிய அளவில் இறப்பு விகிதம்

1.34%

இதுவரை குணமடைந்தோர்

3,14,11,924

சிகிச்சையில் இருப்போர்

3,81,947

ஆகஸ்ட் 15-ஆம் தேதி வரை கரோனா பரிசோதனைகள்

49,48,05,652

பார்சி புத்தாண்டு: பிரதமர் வாழ்த்து

புது தில்லி, ஆக. 16: பார்சி புத்தாண்டான நவ்ரோஜ் பண்டிகையை முன்னிட்டு பிரதமர் நரேந்திர மோடி நாட்டு மக்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார்.

பார்சி மக்களின் புத்தாண்டான நவ்ரோஜ் திங்கள்கிழமை (ஆக. 16) கொண்டாடப்பட்டது. பாரசீகம் என்று கூறப்படும் இப்போதைய ஈரானின் பூர்வகுடிமக்களான பார்சிகள், முஸ்லிம்கள் படையெடுப்பால் அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர். அக்காலகட்டத்தில் அவர்கள் இந்தியாவுக்கும் குடிபெயர்ந்தனர். எண்ணிக்கையில் குறைவாக இருந்தாலும் இந்தியாவில் தொழில், வணிகத்தில் பார்சி மக்கள் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செலுத்தி வருகின்றனர்.

பார்சி புத்தாண்டை முன்னிட்டு பிரதமர் வெளியிட்டுள்ள சுட்டுரைப் பதிவில், 'பார்சி புத்தாண்டு வாழ்த்துகள். இந்த ஆண்டில் மகிழ்ச்சியும், வளமையும், நல்ல ஆரோக்கியமும் நிறைந்திருக்க பிரார்த்திக்கிறேன். பல்வேறு துறைகளில் பார்சி இன மக்கள் அளித்த அளப்பரிய பங்களிப்பை இந்தியா போற்றுகிறது' என்று கூறியுள்ளார்.

சென்னை உள்பட 10 இடங்களில் கைத்தறி வடிவமைப்பு வள மையம்

புது தில்லி, ஆக. 16: கைத்தறி துறைக்கு பெரியளவில் ஊக்கமளிக்கும் வகையில் பல்வேறு புதிய நடவடிக்கைகளை ஜவுளி அமைச்சகம் எடுத்து வருகிறது. இதன்படி, சென்னை உள்பட 10 இடங்களில் கைத்தறி வடிவமைப்பு வள மையங்கள் அமைக்கப்படவுள்ளன.

கைத்தறி துறையில் வடிவமைப்பு சார்ந்த உயர்சிறப்பு நிலையை எட்டும் வகையிலும், நெசவாளர்கள், ஏற்றுமதியாளர்கள், உற்பத்தியாளர்கள் மற்றும் வடிவமைப்பாளர்களுக்கு மாதிரி, பொருள் மேம்பாடு மற்றும் உருவாக்கத்துக்கான

மத்திய அரசு அமைக்கிறது

வடிவமைப்பு களஞ்சியங்களை வழங்கும் நோக்கத்திலும் சென்னை, கொல்கத்தா, பெங்களூரு, ஹைதராபாத், கண்ணூர், இந்தூர், நாகபுரி, மீரட், பாகல்பூர் மற்றும் பானிப்பட் ஆகிய இடங்களில் உள்ள நெசவாளர் சேவை மையங்களில் மேலும் 10 கைத்தறி வடிவமைப்பு வள மையங்களை மத்திய தேசிய ஃபேஷன் தொழில்நுட்ப நிறுவனம் (நிஃப்ட்) அமைக்கவுள்ளது. ஜவுளி அமைச்சகத்தின் அமைப்பாக நிஃப்ட் விளங்குவதாலும், நவீன நாகரிகம் மற்றும் வடிவமைப்பு உள்ளிட்டவற்றில் நிஃப்ட்டின் நிபுணத்துவத்தைப் பயன்படுத்தி கைத்தறி துறைக்கு பெரியளவில் சந்தை இணைப்புகளை வழங்க முடியுமென்பதாலும், இப்பணிக்காக நிஃப்ட்டை அமைச்சகம் தேர்ந்தெடுத்துள்ளது.

நெசவாளர் சேவை மையங்களில் நிஃப்ட் படிப்படியாக அமைக்கவிருக்கும் கைத்தறி வடிவமைப்பு வள மையங்களின் மூலம் நெசவாளர்கள், ஏற்றுமதியாளர்கள், உற்பத்தியாளர்கள் மற்றும் வடிவமைப்பாளர்களுக்கு வடிவமைப்பு மற்றும் வளங்கள் குறித்த விரிவான தகவல்கள் கிடைக்கும். தில்லி, மும்பை, அகமதாபாத், புவனேசுவரம், குவாஹாட்டி, ஜெய்ப்பூர் மற்றும் வாரணாசியில் உள்ள நெசவாளர் சேவை மையங்களில் கைத்தறி வடிவமைப்பு வள மையங்கள் ஏற்கனவே நிறுவப்பட்டுள்ளன. காஞ்சிபுரத்தில் அமைக்கப்பட்டுள்ள எட்டாவது கைத்தறி வடிவமைப்பு வள மையத்தை தேசிய கைத்தறி தினமான கடந்த 7 -ஆம் தேதி திறந்துவைக்கப்பட்டது.

'நாடு முழுவதும் செலுத்தப்பட்ட கரோனா தடுப்பூசிகள் 55 கோடியைக் கடந்தது'

புது தில்லி, ஆக. 16: நாடு முழுவதும் இதுவரை செலுத்தப்பட்ட கரோனா தடுப்பூசிகளின் எண்ணிக்கை 55 கோடியை கடந்துவிட்டதாக மத்திய சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா திங்கள்கிழமை வெளியிட்ட சுட்டுரைப் பதிவில், "நாடு முழுவதும் செலுத்தப்பட்ட கரோனா தடுப்பூசிகளின் அளவு சாதனை படைக்கும்விதமாக 55 கோடியைக் கடந்து விட்டது. கரோனாவுக்கு எதிரான இந்தியாவின் போராட்டத்தை வலுப்படுத்துவோம்; தடுப்பூசி செலுத்துவோம்" என்று குறிப்பிட்டுள்ளார். கரோனா தடுப்பூசிகளை செலுத்தும் இலக்கில் 10 கோடியை எட்ட இந்தியாவுக்கு 85 நாள்கள் ஆனது. 20 கோடியைக் கடக்க 45 நாள்களும், 30 கோடியைக் கடக்க 29 நாள்களும் ஆனது. அடுத்த 24 நாள்களில் 40 கோடி தடுப்பூசிகளும், ஆகஸ்ட் 6-ஆம் தேதியுடன் 50 கோடி தடுப்பூசிகளும் செலுத்தப்பட்டுவிட்டது.

இந்நிலையில் ஆக. 14-ஆம் தேதியுடன் செலுத்தப்பட்ட மொத்த தடுப்பூசிகளின் எண்ணிக்கை 54 கோடியைத் தாண்டிவிட்டது. நாடு தழுவிய தடுப்பூசி இயக்கம் கடந்த ஜனவரி 16-ஆம் தேதிமுதல் சுகாதாரப் பணியாளர்களுக்கும், பிப். 2-ஆம் தேதிமுதல் முன்களப் பணியாளர்களுக்கும் தொடங்கப்பட்டது.

அதன் அடுத்த கட்டமாக மார்ச் 1-ஆம் தேதி முதல் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும், 45 வயதுக்கு மேற்பட்டவர்களில் இணை நோய் பாதிப்புள்ளவர்களுக்கும் தடுப்பூசி செலுத்தும் முகாம் தொடங்கப்பட்டது. மேலும், ஏப்ரல் 1 முதல் 45 வயதுக்கு மேற்பட்ட அனைத்து தரப்பு மக்களுக்கும் தடுப்பூசி போடும் திட்டத்தை இந்தியா தொடங்கியது. 18 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் மே 1 முதல் தடுப்பூசித் திட்டத்தை மத்திய அரசு விரிவுபடுத்தியது.

மும்பை உயர்நீதிமன்ற நீதிபதி ராஜிநாமா

மும்பை, ஆக. 16: மகாராஷ்டிர மாநிலம் மும்பை உயர்நீதிமன்ற நீதிபதி தாமா சேஷாத்ரி நாயுடு (59) தனது பணியை திங்கள்கிழமை ராஜிநாமா செய்தார்.

கடந்த 1962-ஆம் ஆண்டு ஆந்திர மாநிலம் சித்தூரில் பிறந்தவர் தாமா சேஷாத்ரி நாயுடு. திருப்பதியில் உள்ள ஸ்ரீ வெங்கடேஸ்வரா பல்கலைக்கழகத்தில் சட்டப் படிப்பை முடித்த அவர், 1997-ஆம் ஆண்டு ஆந்திர பார் கவுன்சிலில் வழக்குரைஞராகப் பதிவு செய்து கொண்டார். கடந்த 2013-ஆம் ஆண்டு ஆந்திர உயர்நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்ட அவர், கேரள உயர்நீதிமன்ற நீதிபதியாகவும் பதவி வகித்துள்ளார்.

கடந்த 2019-ஆம் ஆண்டு மும்பை உயர்நீதிமன்ற நீதிபதியாக அவர் பணியிடமாற்றம் செய்யப்பட்டார். 2024-ஆம் ஆண்டு வரை அவரின் பதவிக் காலம் உள்ள நிலையில், தனது நீதிபதி பதவியை அவர் திடீரென ராஜிநாமா செய்தார். தனிப்பட்ட காரணங்களுக்காக இந்த முடிவை எடுத்ததாக அவர் கூறியுள்ளார்.

மேக்கேதாட்டு அணைத் திட்டம்: முதல்வரை விரைவில் சந்திப்பேன்

பெங்களூரு, ஆக. 16: மேக்கேதாட்டு அணைத் திட்டத்தை உடனடியாகச் செயல்படுத்தக் கோரி, கர்நாடக முதல்வர் பசவராஜ் பொம்மையை விரைவில் சந்திப்பேன் என மதச்சார்பற்ற ஜனதா தளத்தைச் சேர்ந்த முன்னாள் முதல்வர் எச்.டி.குமாரசாமி தெரிவித்தார்.

இதுகுறித்து திங்கள்கிழமை அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: மேக்கேதாட்டு அணை கட்டுவது தொடர்பாக அரசு தொடர்ந்து அறிவிப்பை மட்டுமே வெளியிட்டு வருகிறது. ஆனால், அதனைச் செயல்படுத்த நிதானம் காட்டி வருகிறது.

மேக்கேதாட்டு திட்டத்தைச் செயல்படுத்த வலியுறுத்தி ஏற்கெனவே ஆளுநர் மூலம் குடியரசுத் தலைவருக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அதுபோல, குடிநீருக்காகத் தொடங்கப்பட்ட எத்தினஹொலே திட்டமும் பணிகள் நிறைவடைவதில் தாமதமாகி வருகிறது. இதனால் எத்தினஹொலே திட்டத்துக்கான செலவுத் தொகை ரூ. 23 ஆயிரம் கோடியாக உயர்ந்துள்ளது. இதே நிலைமை நீடித்தால், இதற்கான செலவுத் தொகை ரூ. 50 ஆயிரம் கோடியாக உயருவதற்கான வாய்ப்பு உள்ளது.

எனவே, வட கர்நாடகம், தென் கர்நாடகம் ஆகிய பகுதிகளில் தொடங்கியுள்ள அனைத்து குடிநீர்த் திட்டங்களையும் உடனடியாக செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். மேக்கேதாட்டு அணைத் திட்டம், எத்தினஹொலே குடிநீர்த் திட்டம் உள்ளிட்டவற்றை உடனடியாகச் செயல்படுத்த வலியுறுத்தி, முதல்வர் பசவராஜ் பொம்மையை விரைவில் சந்தித்துப் பேச முடிவு செய்துள்ளேன் என்றார்.

ம.பி. அமைச்சர் வாகனத்தில் தலைகீழாக தேசியக் கொடி: ஓட்டுநர் இடைநீக்கம்

போபால், ஆக. 16: மத்திய பிரதேச மாநிலத்தில் சுதந்திர தின அணிவகுப்பைப் பார்வையிட்ட அமைச்சரின் வாகனத்தில் தேசியக் கொடி தலைகீழாகப் பறக்கவிடப்பட்டது சர்ச்சையை ஏற்படுத்திய நிலையில், அந்தத் தவறைச் செய்ததாக காவல் துறை ஓட்டுநர் ஒருவர் பணி இடைநீக்கம் செய்யப்பட்டார்.

மத்திய பிரதேச மாநிலம், ராஜ்கர் மாவட்டத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற சுதந்திர தின விழாவில் மாநில உயர் கல்வித் துறை அமைச்சர் மோகன் யாதவ் பங்கேற்றார். அப்போது அவர் காவல் துறை வாகனத்தில் சென்று அணிவகுப்பு மரியாதை ஏற்றுக் கொண்டார். அந்த வாகனத்தில் தேசியக் கொடி தலைகீழாகப் பறக்கவிடப்பட்டிருந்தது சர்ச்சையை ஏற்படுத்தியது. இது தொடர்பான காணொலி சமூக வலைதளங்களில் பரவியது. இதையடுத்து, பல்வேறு விமர்சனங்களும் முன்வைக்கப்பட்டன.

தான் பயணித்த வாகனத்தில் நிகழ்ந்த இந்த தவறு தொடர்பாக விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்குமாறு காவல் துறை அதிகாரிகளிடம் அமைச்சர் வலியுறுத்தினார்.

இதையடுத்து, மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் விசாரணை மேற்கொண்டார். அந்த வாகன ஓட்டுநரின் கவனக்குறைவால் இந்தத் தவறு நேர்ந்தது தெரியவந்தது. இதையடுத்து, அவர் உடனடியாகப் பணியிடை நீக்கம் செய்யப்பட்டார். இதுதவிர அந்த வாகனத்தின் பொறுப்பாளரான காவலர் உள்பட காவல் துறையைச் சேர்ந்த மேலும் இருவரிடம் விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது. அவர்கள் அளிக்கும் பதிலுக்கு ஏற்ப அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது.

https://t.me/Tamil_epaper2

வயநாட்டில் ராகுல் இரு நாள் பயணம்: காந்தி சிலையை திறந்து வைத்தார்

கோழிக்கோட்டில் பழங்குடியின சமூக மாணவர்களுடன் அமர்ந்து உணவருந்திய ராகுல் காந்தி.

வயநாடு, ஆக. 16: தனது மக்களவைத் தொகுதியான கேரள மாநிலம் வயநாடுக்கு இரண்டு நாள் பயணமாக சென்றுள்ள காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தி, அங்கு மனந்தவாடி புதியில் உள்ள காந்தி பூங்காவில் புதிதாக அமைக்கப்பட்ட மகாத்மா காந்தி சிலையை திங்கள்கிழமை திறந்துவைத்தார்.

கேரள சிற்பி கே.கே.ஆர்.வெங்கரா மூலம் வடிவமைக்கப்பட்ட இந்தச் சிலையை திறந்து வைத்த பிறகு, அங்கு கூடியிருந்த மக்கள் மத்தியில் பேசிய ராகுல் காந்தி, 'இந்தச் சிலையை பார்க்கும்போது மகாத்மா காந்தியை மட்டும் நினைவுகூராமல், அவருடைய செயல்பாடுகள் மற்றும் வாழ்வு முறையையும் நாம் நினைவில் கொள்ளவேண்டும். காந்தியின் சக்தி என்னவென்றால், அவர் சொன்ன ஒவ்வொன்றையும் செயல்படுத்திக் காட்டினார். உதாரணமாக, இந்தியா சகிப்புத்தன்மையுள்ள நாடாக இருக்க வேண்டும் என்று அவர் கூறிய நிலையில், அதன் வழி அவர் வாழ்ந்து காட்டினார். இந்தியா பெண்களை மதிப்புடன் நடத்த வேண்டும் கூறிய அவர், பெண்களை மதித்து நடந்தார். அதுபோல, மதச்சார்பற்ற நாடாக இருக்க வேண்டும் என்று கூறியதுபோல், மதச்சார்பற்ற தன்மையுடன் காந்தி நடந்துகொண்டார்' என்று கூறினார்.

முன்னதாக, திங்கள்கிழமை காலை கோழிக்கோடு வந்த ராகுல் காந்தி, பொது சட்ட சேர்க்கை தகுதித் தேர்வில் (கிளாட்) தேர்ச்சி பெற்ற காட்டுநாயக்கன் பழங்குடியின சமூக மாணவர்களுடன் மதிய உணவு உட்கொண்டார்.

அந்தப் புகைப்படங்களை தனது முகநூல் பக்கத்தில் பதிவிட்ட ராகுல், 'இளம் மாணவர்களின் நம்பிக்கைகளும், விருப்பங்களும் எந்தச் சூழலிலும் பாதுகாக்கப்பட வேண்டும். ஒரு தேசமாக அதனை பாதுகாக்க நாம் கடமைப்பட்டிருக்கிறோம். மிகவும் பின்தங்கிய இந்தப் பழங்குடி சமூக மாணவர்கள் சட்டம் முடித்து, நாட்டின் மிக உயரிய நீதித் துறை அலுவலகத்தை அலங்கரிப்பர் என்ற நம்பிக்கை உள்ளது' என்று பதிவிட்டுள்ளார்.

விவசாயம், வளி மண்டல ஆய்வுக்கு ட்ரோன்களை பயன்படுத்த அனுமதி

நமது சிறப்பு நிருபர்

புது தில்லி, ஆக. 16: விவசாயம், வளி மண்டல ஆய்வு உள்ளிட்ட முக்கியப் பணிகளின் பயன்பாட்டிற்கு ஆளில்லா விமானமான ட்ரோனை பயன்படுத்த நாடு முழுவதும் உள்ள 10 நிறுவனங்களுக்கு மத்திய சிவில் விமானப் போக்குவரத்துத் துறை திங்கள்கிழமை அனுமதி அளித்துள்ளது.

மத்திய சிவில் விமானப் போக்குவரத்துத் துறை இயக்குநர் ஜெனரல் அலுவலகத்தின் நிபந்தனைகளுடன் அனுமதி பெற்ற நிறுவனங்கள் அவர்கள் மேற்கொள்ளும் பணிகள் விவரங்கள்:

பெங்களூரு உள்ளிட்ட நகர்ப்புறங்களில் உரிமையாளர்கள் சொத்துகள் ஆவணப் பதிவுக்கு வான் வழி ஆய்வு ட்ரோன் மூலம் மேற்கொள்ளுதல்; மகாராஷ்டிரம் மாநிலம், பல்கார் மாவட்டம் ஜவ்ஹார் பகுதி பழங்குடியினருக்கு தேசிய சுகாதாரப் பணிகள் மூலம் அத்தியாவசியப் சுகாதாரப் பொருள்கள் வழங்க சோதனை அடிப்படையில் பிவிஎல்ஓஎஸ் ட்ரோன் பயன்படுத்துதல்; குஜராத் ப்ளூ ரே விமானப் போக்குவரத்து, ஹைதராபாதைச் சேர்ந்த ஆசிய பசிபிக் விமானப் பயிற்சி அகாதெமி ஆகிய நிறுவனங்களில் விமானிகளுக்கான பயிற்சிகள் ஆகியவற்றுக்கு ட்ரோன் பயன்படுத்த அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது.

மேலும், மும்பையிலுள்ள பேயர் பயிர் அறிவியல் நிறுவனத்தின் வேளாண் ஆய்வுகளுக்கும், சென்னையைச் சேர்ந்த டாபே (டிராக்டர்ஸ் அண்ட் ஃபார்ம் எக்யூப்மெண்ட் லிமி.) என்கிற நிறுவனம் பயிர்களின் வளத்தை மதிப்பிடவும், நோய்த் தடுப்பு மருந்து தெளிப்புக்கு பயன்படுத்த ட்ரோன் அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று ஆந்திரம், தெலங்கானா மாநிலங்களில் மஹிந்திரா - மஹிந்திரா நிறுவனத்துக்கு நெல், மிளகு போன்ற பயிர்களுக்கு துல்லியமாக தெளிப்பதற்கு ட்ரோனை சோதனை அடிப்படையில் பயன்படுத்த அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இவை தவிர இந்திய வெப்ப மண்டல வானிலை ஆய்வு நிறுவனம், 5 நகரங்களில் வளிமண்டல ஆராய்ச்சிகளை மேற்கொள்ள ட்ரோனை பயன்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ளது.

இவை உள்பட 10 நிறுவனங்களுக்கு ஆளில்லா விமானமான ட்ரோனை பயன்படுத்த சிவில் விமானப் போக்குவரத்து துறையின் விதிமுறைகளுக்குட்பட்டு குறிப்பிட்ட காலங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

12 லட்சம் டன் மரபணு மாற்ற சோயாமீல் இறக்குமதி செய்யும் இந்தியா

புது தில்லி, ஆக. 16: 'மரபணு மாற்ற விவகாரத்தில் உள்ள குழப்பத்தை மத்திய அரசு தெளிவுபடுத்தியவுடன், முதல் முறையாக 12 லட்சம் டன் மரபணு மாற்றம் செய்யப்பட்ட சோயாமீல் இறக்குமதி செய்யப்பட உள்ளது' என்று கால்நடை பராமரிப்பு மற்றும் பால்பண்ணைத் துறை அமைச்சக மூத்த அதிகாரிகள் திங்கள்கிழமை தெரிவித்தனர்.

கால்நடைத் தீவனங்களின் விலை தொடந்து அதிகரித்து, விவசாயிகள் கடும் பாதிப்பை சந்தித்து வரும் நிலையில் அது குறித்து அண்மையில் ஆய்வுக் கூட்டம் நடத்திய மத்திய உணவுத் துறை அமைச்சகம், 'கால்நடைத் தீவன தட்டுப்பாட்டைப் போக்கும் வகையில் 12 லட்சம் டன் சோயாமீல் இறக்குமதி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை உடனடியாக செய்து தருமாறு வெளிநாட்டு வர்த்தக கட்டுப்பாட்டு இயக்குநரகம் மற்றும் சம்பந்தப்பட்ட பிற துறைகளைக் கேட்டுக் கொண்டுள்ளது.

சோயாபீன் விதையிலிருந்து எண்ணெய் பிரித்தெடுக்கப்பட்ட பிறகு எஞ்சியிருக்கும் புரதச் சத்து நிறைந்த பொருள் தான் சோயாமீலாகும். இது கால்நடைத் தீவனத்தில் முக்கிய மூலப் பொருளாக சேர்க்கப்படும்.

இதுகுறித்து அதிகாரிகள் கூறுகையில், 'தற்போது சோயாமீல் அல்லது மரபணு மாற்றம் செய்யப்பட்ட சோயாமீல் இறக்குமதி செய்ய தடை எதுவும் இல்லை. இருந்தபோதும், கொள்முதல் உத்தரவு பிறப்பிப்பதற்கு முன்பாக, மரபணு மாற்ற பயிர்கள் பயன்பாடு விவகாரத்தில் உள்ள குழப்பத்தை மத்திய அரசு தெளிவுபடுத்த வேண்டும் என நிறுவனங்கள் விரும்புகின்றன. மரபணு மாற்ற உணவில் மூன்று வகைகள் உள்ளன. அதாவது, மரபணு ரீதியில் மாற்றம் செய்யப்பட்ட உணவு (ஜிஎம்ஓ), உயிர் மாற்ற உணவு வகை (எல்எம்ஓ) மற்றும் உயிரற்ற ரீதியில் மாற்றம் செய்யப்பட்ட (என்எல்எம்ஓ) உணவு வகை என 3 வகைகள் உள்ளன. இதில் சோயா மீல் என்எல்எம்ஓ வகையைச் சேர்ந்தது. இது மனிதர்கள் மீதோ, விலங்குகளின் உடல்நலனிலோ அல்லது சுற்றுச் சூழல் மீதோ எந்தவித தாக்கத்தையும் ஏற்படுத்தாது என்று மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. இருந்தபோதும், உணவுப் பாதுகாப்பு கட்டுப்பாட்டு அமைப்பான எஃப்.எஸ்.எஸ்.ஐ.க்கு இதில் ஆட்சேபம் இல்லை என்பது தெளிவுபடுத்தப்பட வேண்டும் என்பதையும் நிறுவனங்கள் எதிர்பார்க்கின்றன' என்று கூறினர்.

மேலும், 'இந்தியாவில் புதிய பயிர்கள் வரும் அக்டோபரில் தான் கிடைக்கும் என்பதால்தான், 12 லட்சம் டன் சோயாமீலை இறக்குமதி செய்ய நிறுவனங்கள் திட்டமிட்டுள்ளன. ஆர்ஜென்டீனா, ஐரோப்பா, அமெரிக்கா நாடுகளிலிருந்து இந்த இறக்குமதி செய்யப்பட இருக்கிறது. சில நிறுவனங்கள் இறக்குமதிக்கான உத்தரவை ஏற்கெனவே பிறப்பிக்கத் தொடங்கிவிட்டன. எனவே, நிறுவனங்களின் அச்சத்தைப் போக்கும் வகையில் மரபணு மாற்ற சோயாமீல் பயன்பாட்டுக்கான அனுமதியில் உள்ள குழப்பத்தை வெளிநாட்டு வர்த்தக இயக்குநரகம் விரைந்து தெளிவுபடுத்தவேண்டும்' என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

உயிரிழந்த இந்தியர்களின் குறிப்பிட்ட விவரங்களை 'ஆர்டிஐ' மூலம் அளிக்கலாம்

6 வளைகுடா நாடுகளின் தூதரகங்களுக்கு சிஐசி உத்தரவு

புது தில்லி, ஆக. 16: ஐக்கிய அரபு அமீரகம், சவூதி அரேபியா, குவைத், ஓமன், பஹ்ரைன், கத்தார் ஆகிய நாடுகளில் இனி இந்தியர்கள் உயிரிழந்தால் அவர்களின் குறிப்பிடட்ட விவரங்களை தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் (ஆர்டிஐ) கீழ் தெரிவிக்கலாம் என்று மத்திய தகவல் ஆணையம் (சிஐசி) அந்நாட்டு தூதரகங்களுக்கு வலியுறுத்தியுள்ளது.

2012 ஜனவரி 1-ஆம் தேதி முதல் இந்த ஆறு நாடுகளில் உயிரிழந்த இந்திய பணியாளர்களின் பெயர், வயது, பாலினம், பணி ஆகிய விவரங்களைக் கேட்டும் காமன்வெல்த் மனித உரிமை ஆர்வலர் வெங்கடேஷ் நாயக் என்பவர் மனு தாக்கல் செய்திருந்தார். மேலும், அவர்கள் உயிரிழந்ததற்கான காரணத்தை சம்பந்தப்பட்ட நாட்டின் இந்திய தூதரகங்கள் தெரிவிக்காததற்கும் அவர் அதிருப்தி தெரிவித்திருந்தார்.

இந்த மனு மீது விசாரணை நடத்தி தலைமை தகவல் ஆணையர் ஒய்.கே.சின்ஹா பிறப்பித்த உத்தரவில், 'உயிரிழந்தவர்களின் குடும்பத்தினரின் விவரங்களை அளிப்பது தனிநபர் தகவல் உரிமைக்கு எதிரானது. நாயக் கேட்டுள்ள சில தகவல்கள் தவறாக பயன்படுத்தப்படலாம். ஆகையால், வரும் நாள்களில் உயிரிழந்தவர்களின் வருடம், எண்ணிக்கை, பாலினம், காரணம் ஆகிய குறிப்பிட்ட விவரங்களை மட்டும் சம்பந்தப்பட்ட வளைகுடா நாடுகளின் இந்திய தூதரகங்கள் வெளியிடலாம்.

இதுதொடர்பாக மத்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் இந்திய தூதரகங்கள் தாங்களாக முன்வந்து இந்த விவரங்களை வரும்நாள்களில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் வெளியிட வேண்டும். நாயக் கேட்ட விவரங்களை சம்பந்தப்பட்ட நாட்டின் இந்திய தூதரகங்கள் ஒரே மாதிரியான விவரக் குறிப்புகளை அளிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, இந்த வழக்கு விசாரணையின்போது நாயக் சார்பில் ஆஜரான வழக்குரைஞர், 'பொதுமக்களின் நலனைக் கருத்தில்கொண்டே இந்த விவரங்கள் கோரப்படுகின்றன. குவைத், பஹ்ரைன் ஆகிய நாட்டு இந்திய தூதரகங்கள் அளித்த தகவலில் உயிரிழந்தவரின் பணி விவரங்கள் குறிப்பிடப்படவில்லை' என்று தெரிவித்திருந்தார்.

பஹ்ரைனில் உள்ள இந்திய தூதரகத்தின் சார்பில் ஆஜரான வழக்குரைஞர், 'உயிரிழந்தவரின் உடலை கொண்டு சேர்ப்பதற்காக பெயர், நாள், காரணம் ஆகியவை இணையதளத்தில் பதிவிடப்படுகிறது. அவரது பணி விவரங்கள் குறிப்பிடப்படுவதில்லை' என்றார்.

திரிணமூலில் இணைந்தார் மகளிர் காங்கிரஸ் தலைவர்

புது தில்லி, ஆக. 16: காங்கிரஸ் மூத்த தலைவர்களில் ஒருவரான சுஷ்மிதா தேவ் கட்சியிலிருந்து திடீரென விலகியுள்ளார். தனது ராஜிநாமா கடிதத்தை அவர் கட்சித் தலைவர் சோனியா காந்திக்கு அனுப்பியுள்ளதாக கட்சி வட்டாரங்கள் திங்கள்கிழமை தெரிவித்தன.

கட்சியிலிருந்து விலகியதற்கான காரணம் எதையும் அவர் கூறாத நிலையில், திரிணமூல் காங்கிரஸ் கட்சியின் அவர் இணைந்துள்ளார். முன்னாள் எம்.பி.யான அவர், காங்கிரஸ் தேசிய செய்தித் தொடர்பாளராகவும், அகில இந்திய மகிளா காங்கிரஸ் தலைவராகவும் பதவி வகித்து வந்தார்.

சோனியா காந்திக்கு அனுப்பிய தனது ராஜிநாமா கடிதத்தில், 'இந்திய தேசிய காங்கிரஸில் கடந்த 30 ஆண்டுகளாக அங்கம் வகித்தது மகிழ்ச்சியளிக்கிறது. இப்போது, எனது பொது வாழ்வில் புதிய அத்தியாயத்தை நான் தொடங்க இருப்பதற்கு உங்களுடைய நல்வாழ்த்துகள் கிடைக்கும் என நம்புகிறேன்' என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில், சுஷ்மிதா தேவி

திரிணமூல் காங்கிரஸில் இணைந்த சுஷ்மிதா தேவை வரவேற்ற கட்சியின் தேசிய பொதுச் செயலர் அபிஷேக் பானர்ஜி.

டமிருந்து எந்தவித கடிதமும் வரவில்லை என்று காங்கிரஸ் கட்சி சார்பில் மறுப்பு தெரிவிக்கப்பட்டது.

இதுகுறித்து அக் கட்சியின் தலைமை செய்தித் தொடர்பாளர் ரண்தீப் சுர்ஜேவாலா கூறுகையில், 'சுஷ்மிதாவை தொடர்புகொள்ள முயற்சித்தோம். ஆனால், முடியவில்லை. அவருடைய திறமையை கட்சித் தலைவர்கள் சோனியா காந்தி, ராகுல் காந்தி ஆகியோர் பாராட்டியிருக்கின்றனர். காங்கிரஸ் குடும்பத்துடனும், சித்தாந்தத்துடனும் பல ஆண்டுகளாக தொடர்பில் உள்ளவர். அவருடைய எதிர்காலம் சிறக்க வாழ்த்துகள்' என்றார்.

கட்சியின் மூத்த தலைவரும் முன்னாள் மத்திய அமைச்சருமான கபில் சிபில் தனது சுட்டுரைப் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், 'கட்சியின் முக்கிய பொறுப்பிலிருந்து சுஷ்மிதா தேவ் ராஜிநாமா செய்துள்ளார். இளம்தலைவர்கள் இவ்வாறு கட்சியைவிட்டு விலகும் நிலையில், கட்சியை வலுப்படுத்துவதற்கான முயற்சிகளுக்காக எங்களைப் போன்ற முதிய உறுப்பினர்கள் குற்றம்சாட்டப்படுகிறோம். கட்சி தனது கண்களை மூடிக் கொண்டு இயங்குகிறது' என்று குறிப்பிட்டுள்ளார்.

திரிணமூல் காங்கிரஸில்... காங்கிரஸிலிருந்து சுஷ்மிதா தேவ் விலகியதாக தகவல் வெளியான சில மணி நேரங்களிலேயே, அவர் திரிணமூல் காங்கிரஸ் கட்சியில் இணைந்தார். கொல்கத்தாவில் திரிணமூல் காங்கிரஸ் கட்சியின் தேசிய பொதுச்செயலர் அபிஷேக் பானர்ஜி முன்னிலையில், அவர் அக் கட்சியின் இணைந்தார்.

மருத்துவ உள்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்த கேரளத்துக்கு ரூ. 267.35 கோடி ஒதுக்கீடு

மத்திய அரசு

திருவனந்தபுரம், ஆக. 16: கேரளத்தில் மருத்துவ உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக மத்திய அரசு சார்பில் ரூ. 267.35 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கூடுதலாக, மருந்து தொகுப்பு ஒன்றை உருவக்கும் வகையில் மாநிலத்தின் ஒவ்வொரு மாவட்டத்துக்கு ரூ. 1 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்று மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா கூறினார்.

கேரளத்தில் தினசரி கரோனா பாதிப்பு மீண்டும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. இந்திய அளவில் ஏற்படும் மொத்த பாதிப்பில் பாதிக்கும் மேல் கேரளத்தில் பதிவாகி வருகிறது.

இந்த நிலையில், மாநிலத்தில் கரோனா பாதிப்பு நிலவரம் குறித்து ஆய்வு செய்வதற்காக மத்திய அமைச்சர் மன்சுக் மாண்டவியா மற்றும் மத்தியக் குழு கேரளத்துக்கு திங்கள்கிழமை வந்தது. கேரள முதல்வர் பினராயி விஜயன், மாநில சுகாதாரத் துறை அமைச்சர் வீணா ஜார்ஜ் ஆகியோருடன் மத்திய அமைச்சர் ஆலோசனை மேற்கொண்டு, பாதிப்பு நிலவரத்தை ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வுக்குப் பிறகு தனது சுட்டுரைப் பக்கத்தில் மத்திய அமைச்சர் மாண்டவியா வெளியிட்ட பதிவில் கூறியிருப்பதாவது:

மாநிலத்தின் கரோனா பாதிப்பு நிலவரம் குறித்து கேரள முதல்வர், சுகாதாரத் துறை அமைச்சர் மற்றும் அதிகாரிகளுடன் தீவிர ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது. தடுப்பூசி உள்பட கேரளத்துக்கு தேவையான அனைத்து சாத்தியமுள்ள உதவிகளையும் அளிக்க மத்திய அரசு உறுதியளித்துள்ளது.

'அவசர கரோனா நிலையை எதிர்கொள்ளும் திட்டம்-2'-இன் கீழ் மாநிலத்துக்கு ரூ. 267.35 கோடியை மத்திய அரசு ஒதுக்கியுள்ளது. இது கேரளத்தில் மருத்துவ உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், கரோனா பாதிப்பு நிலைமையை திறம்பட சமாளிக்கவும் உதவும்.

கூடுதலாக, மாவட்ட வாரியாக ஒரு மருந்து தொகுப்பை உருவாக்கும் வகையில் மாநிலத்தின் ஒவ்வொரு மாவட்டத்துக்கும் தலா ரூ. 1 கோடி நிதி மத்திய அரசு சார்பில் ஒதுக்கப்படும். ஒவ்வொரு மாவட்டத்திலும் தொலைபேசி வழி மருந்து விநியோக சேவையை நடைமுறைப்படுத்தும் வகையில் ஆற்றல்சார் மையங்கள் உருவாக்கப்படுவதை மத்திய அரசு உறுதிப்படுத்தும்.

குழந்தைகளின் உடல் நலனுக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் மாவட்ட மருத்துவ மனைகளில் 10 கிலோ லிட்டர் மருத்துவதிரவ ஆக்சிஜன் சேமிப்புக் கலனுடன் கூடிய குழந்தைகள் தீவிர கண்காணிப்புப் பிரிவு உருவாக்கப்படும் என்று மத்திய அமைச்சர் மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

முன்தேதியிட்ட வரி ரத்து விதிகள் விரைவில் வகுக்கப்படும்

நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன்

புது தில்லி, ஆக. 16: முன்தேதியிட்ட வரி ரத்து குறித்த விதிமுறைகள் விரைவில் வகுக்கப்படும் என்று மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் திங்கள்கிழமை தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியுள்ளதாவது:

2012-ஆம் ஆண்டின் முன்தேதியிட்ட வரி சட்டங்களை பயன்படுத்தி முன்வைக்கப்பட்ட அனைத்து கோரிக்கைகளையும் நீக்குவதற்கான மசோதா நாடாளுமன்றத்தில் இம்மாத தொடக்கத்தில் நிறைவேற்றப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக, கெய்ர்ன் எனர்ஜி, வோடஃபோன் போன்ற நிறுவனங்கள் மீதான முன்கூட்டிய வரி கோரிக்கைகளை ரத்து செய்ய வழிவகுக்கும் விதிமுறைகள் விரைவில் வகுக்கப்படும். முன்தேதியிட்ட வரி வழக்குகள், மறுநிதியளிப்பது தொடர்பாக அதிகாரிகள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர்.

வலைதளம் சீரமைக்கப்படும்: புதிய வருமான வரி வலைதளத்தில் பல்வேறு பிரச்னைகள் இருப்பதை வரிசெலுத்துவோர் சுட்டிக்காட்டியுள்ளனர். இதுதொடர்பாக, வலைதளத்தை வடிவமைத்த இன்ஃபோஸிஸ் நிறுவனத்துடனும், அதன் தலைவர் நந்தன் நிலேகனியுடனும் தொடர்ச்சியாக பேசி வருகிறேன். இப்பிரச்னைக்கு விரைவில் தீர்வு காணப்படும் என அவர்கள் உறுதியளித்துள்ளனர்.

கட்டுக்குள் பணவீக்கம்: கடந்த சில மாதங்களாகவே ஜிஎஸ்டி மற்றும் நேரடி வரி வசூல் சிறப்பான அளவில் மேம்பட்டு வருகிறது. பண்டிகை காலம் வருவதால் கடன் வளர்ச்சி நன்றாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இது சந்தையில் போதுமான பணப்புழக்கத்தை உருவாக்கி தேவையை அதிகரிக்கச் செய்யும். நடப்பு நிதியாண்டில் பணவீக்கம் நிர்ணயிக்கப்பட்ட அளவிற்கு உள்ளாகவே இருக்கும்.

வோடஃபோனுடன் பேச்சுவார்த்தை: கடன்சுமையில் சிக்கியுள்ள வோடஃபோன் ஐடியா நிறுவனத்தின் பிரச்னைக்கு தீர்வு காணும் வகையில் ஏராளமான அதிகாரிகள் அந்நிறுவனத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர். ஆனால், இதுவரையில் எனது கவனத்துக்கு இப்பிரச்னை கொண்டுவரப்படவில்லை.

கிரிப்டோகரன்ஸி: கிரிப்டோகரன்ஸி என்றழைக்கப்படும் மெய்நிகர் நாணயம் தொடர்பான மசோதா ஏற்கெனவே தயாரிக்கப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இது, தற்போது மத்திய அமைச்சரவை குழுவின் ஒப்புதலுக்காக காத்திருக்கிறது என்றார் அவர்.

கரோனா நிவாரணம்: வழிகாட்டுதல்களை உருவாக்க மத்திய அரசுக்கு 4 வாரம் அவகாசம்

புதுதில்லி, ஆக. 16: கரோனா நோய்த் தொற்றால் பலியானவர்களின் குடும்பங்களுக்கு நிவாரணம் அளிப்பதற்கான வழிகாட்டுதல்களை உருவாக்க மத்திய அரசுக்கு உச்சநீதிமன்றம் 4 வாரங்கள் அவகாசம் அளித்துள்ளது.

கரோனா நோய்த்தொற்றால் பலியானவர்களின் குடும்பங்களுக்கு நிவாரணம் அளிக்கக் கோரி உச்சநீதிமன்றத்தில் வழக்குரைஞர்கள் இருவர் உள்பட பல்வேறு தரப்பினர் மனு தாக்கல் செய்துள்ளனர்.

கடந்த ஜூன் 30-ஆம் தேதி அந்த மனுக்கள் விசாரணைக்கு வந்தபோது நிவாரணம் அளிப்பது தொடர்பாக மத்திய அரசுக்கு பல்வேறு உத்தரவுகளை உச்சநீதிமன்றம் பிறப்பித்தது. கரோனா தொற்றால் உயிரிழந்தவர்களின் இறப்புச் சான்றிதழ்களில் அவர் கவலின் இறப்புக்கான உண்மையான காரணத்தைக் குறிப்பிட்டு சான்றிதழ்களை அளிப்பதற்கான வழிகாட்டுதல்களை எளிமையாக்கவும் உச்சநீதிமன்றம் ஆணையிட்டது.

இந்த வழக்கு நீதிபதிகள் டி.ஒய். சந்திரசூட், எம்.ஆர்.ஷா ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பாக திங்கள்கிழமை விசாரணைக்கு வந்தது. அப்போது மத்திய அரசு தரப்பில் ஆஜரான கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் ஐஸ்வர்யா கூறுகையில், "கரோனா தொற்றால் பலியானவர்களின் குடும்பங்களுக்கு நிவாரணம் அளிப்பதற்கான வழிகாட்டுதல்களை உருவாக்கும் பணிகள் கடைசிக் கட்டத்தை எட்டும் நிலையில் உள்ளன. அந்த வழிகாட்டுதல்களை இறுதி செய்து நடைமுறைப்படுத்தும் முன்பாக அதுகுறித்து ஆழமாக ஆய்வு மேற்கொள்ள கூடுதல் நேரம் தேவைப்படுகிறது.

நிவாரணம் அளிப்பது தொடர்பாக உச்சநீதிமன்றம் பிறப்பித்த இதர கட்டளைகள் குறித்து மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் பற்றி இரண்டு வாரங்களுக்குள் முழுமையான தகவல்கள் அடங்கிய பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்யப்படும்" என்று தெரிவித்தார். அதனை ஏற்றுக்கொண்ட நீதிபதிகள் நிவாரணம் அளிப்பதற்கான வழிகாட்டுதல்களை உருவாக்க மத்திய அரசுக்கு மேலும் 4 வாரங்கள் அவகாசம் அளித்து வழக்கை இரண்டு வாரங்களுக்கு ஒத்திவைத்தனர்.

கரோனா தடுப்பூசி பரிசோதனை: மேலும் ஓர் ஆய்வகத்துக்கு ஒப்புதல்

புது தில்லி, ஆக. 16: தேசிய கால்நடை உயிரி தொழில்நுட்ப நிறுவனத்தை கரோனா தடுப்பூசிகளின் பரிசோதனைக்காக மேலும் ஓர் ஆய்வகமாக பயன்படுத்த சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம் அங்கீகாரம் அளித்துள்ளது.

மேலும், புணேவில் உள்ள தேசிய செல் அறிவியல் மையத்தும் அனுமதியளிக்கப்பட்டுள்ளது. இந்த இரு ஆய்வகங்களையும் மேம்படுத்துவதற்காக பிரதமரின் நிதி அறக்கட்டளையில் இருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஹைதராபாதில் உள்ள தேசிய கால்நடை உயிரி தொழில்நுட்ப நிறுவனத்தை மத்திய மருந்து ஆய்வகமாக அறிவிக்க மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்திடம் வரைவு அறிவிப்பு ஒன்றை மத்திய மருந்து தரக் கட்டுப்பாட்டு அமைப்பு சமர்ப்பித்திருந்த நிலையில், ஹைதராபாதில் உள்ள தேசிய கால்நடை உயிரி தொழில்நுட்ப நிறுவனத்தை மத்திய மருந்து ஆய்வகமாக மத்திய சுகாதார அமைச்சகம் தற்போது அறிவித்துள்ளது.

ஆப்கன் நிலவரம்: விளக்கமளிக்கிறார் ஜோ பைடன்



வாஷிங்டன், ஆக. 16: ஆப்கன் நாட்டில் நிலவி வரும் நிலவரம் தொடர்பாக அமெரிக்க அதிபர் ஜோ பைடன் நாட்டு மக்களுக்கு உரையாற்றுகிறார்.

ஆப்கன் தலைநகர் காபூலைவிட்டு அமெரிக்க படைகள் கடைசிக் கட்டமாக திங்கள்கிழமை வெளியேறியபோது அந்நாட்டு மக்கள் ஓடுபாதையில் சூழ்ந்து கொண்டதும், அப்போது அவர்கள் மீது பாதுகாப்புப் படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டிலும், விமானத்தின் மீது சிலர் ஏறி பறக்கும்போது கீழே விழுந்ததிலும் 7 பேர் உயிரிழந்தனர். இதனால் ஆப்கன் விமானத் தளம் போர்க்களம் போல் காட்சியளித்தது.

இதுகுறித்தும், ஆப்கன் விவகாரம் குறித்தும் அமெரிக்க அதிபர் ஜோ பைடன் நாட்டு மக்களுக்கு உரையாற்றுவார் என்று வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது. தலிபான்கள் பிடியில் ஆப்கன் சென்ற பிறகு அதிபர் பைடன் ஆற்றும் முதல் உரை இதுவாகும்.

பிரிட்டன் நாடாளுமன்றம் நாளை கூடுகிறது

லண்டன், ஆக. 16: ஆப்கனில் ஆட்சியை தலிபான்கள் கைப்பற்றியுள்ள நிலையில், அதுகுறித்து விவாதிப்பதற்காக பிரிட்டன் நாடாளுமன்றம் புதன்கிழமை கூடுகிறது.

பிரிட்டன் நாடாளுமன்றத்துக்கு தற்போது கோடை விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், ஆப்கன் சூழல் குறித்து விவாதிப்பதற்காக நாடாளுமன்றத்தைக் கூட்ட வேண்டும் என்ற அரசின் கோரிக்கைக்கு நாடாளுமன்ற அவைத் தலைவர் அனுமதி அளித்துள்ளார். அதன்படி, நாடாளுமன்றக் கூட்டம் புதன்கிழமை காலை 9.30 மணியளவில் நடைபெறுகிறது.

இதற்கிடையே, பிரதமர் போரிஸ் ஜான்சன் மற்றோர் அவசரகால அமைச்சரவை அலுவலக கூட்டத்தை திங்கள்கிழமை கூட்டினார். அதில், ஆப்கனில் உள்ள பிரிட்டன் குடிமக்கள் 4000 பேரை விரைவாகவும் பாதுகாப்பாகவும் மீட்டு வருவது குறித்து ஆலோசிக்கப்பட்டது.

பின்னர், செய்தியாளர்களிடம் ஜான்சன் கூறுகையில், தலிபான்களின் அரசை அவசரப்பட்டு அங்கீகரிக்க வேண்டாம் என ஒருமித்த கருத்துடைய நாடுகளைக் கேட்டுக்கொள்கிறோம். காபூலில் ஒரு புதிய ஆட்சி அமைகிறது. அது எப்படிப்பட்டதாக இருக்கும் என நமக்குத் தெரியாது என்றார்.

ஹெலிகாப்டர் நிறைய பணத்துடன்

தஜிகிஸ்தானில் அதிபர் கனி தஞ்சம்

மாஸ்கோ, ஆக. 16: ஆப்கன் தலைநகர் காபூலில் இருந்து ஹெலிகாப்டரில் அந்நாட்டு அதிபர் அஷ்ரஃப் கனி வெளியேறியதாக ரஷிய நாட்டின் அரசு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

ஹெலிகாப்டர் நிறைய பணத்துடன் அண்டை நாடான தஜிகிஸ்தானில் அவர் தஞ்சம் அடைந்திருக்கலாம் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தலிபான்கள் காபூலை ஞாயிற்றுக்கிழமை கைப்பற்றியதையடுத்து, அமெரிக்க ஆதரவு பெற்ற அதிபர் அஷ்ரஃப் கனி நாட்டைவிட்டு வெளியேறிவிட்டார்.

இதுகுறித்து ரஷிய அரசு ஊடகமான 'டிஏஎஸ்எஸ்' வெளியிட்டுள்ள செய்தியில், 'அதிபர் அஷ்ரஃப் கனியின் ஆட்சி கவிழ்ந்த பின்பு, நான்கு கார்களில் பணம் கொண்டு வரப்பட்டு, ஹெலிகாப்டரில் நிர்ப்பப்பட்டன. ஆனால், முழு பணப் பைகளையும் ஹெலிகாப்டரில் திணிக்க முடியாததால் பணம் கீழே சிதறிக் கிடந்தது.

இதை அங்கிருந்த ஊழியர் ஒருவர் தெரிவித்தார்' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், யார் அந்த ஊழியர் என்று குறிப்பிடவில்லை.

இதே தகவலை அந்நாட்டுக்கான ரஷிய தூதரக செய்தித் தொடர்பாளர் நிகிதா இஷ் என்கோ கூறியதாக அந்நாட்டு செய்தி நிறுவனமும் 'ஸ்புட்னிக்' தெரிவித்துள்ளது.

மனிதப் பேரிடரை தடுக்கவே வெளியேறினேன்

காபூலைவிட்டு வெளியேறிய பின்பு அதிபர் அஷ்ரஃப் கனி ஃபேஸ்புக்கில் வெளியிட்டுள்ள முதல் பதிவில், 'ஆயுதங்களுடன் தலிபான்கள் அதிபர் மாளிகைக்குள் நுழைய வேண்டும் அல்லது 20 ஆண்டுகளாக எனது வாழ்நாளை அர்ப்பணித்து பாதுகாத்த எனது நாட்டைவிட்டு நான் வெளியேற வேண்டும் என்பதில் ஏதாவது ஒன்றை தேர்வு செய்ய வேண்டிய இக்கட்டான நிலையில் இருந்தேன்.

நாட்டு மக்கள் தொடர்ந்து கொல்லப்பட்டும், காபூல் நகரம் அழிக்கப்பட்டும் மிகப்பெரிய மனித பேரிடர் ஏற்பட்டிருக்கும். என்னை வெளியேற்றுவதில் தலிபான்கள் வெற்றி கண்டுள்ளனர். ரத்த ஆறு ஓடுவதைத் தடுக்கவே நாட்டைவிட்டு வெளியேறி உள்ளேன்.

கத்தி, துப்பாக்கிகளுடன் தலிபான்கள் வெற்றி பெற்றுள்ளனர். தற்போது நாட்டு மக்களின் கௌரவம், வளம் ஆகியவற்றைப் பாதுகாக்க வேண்டியது அவர்களின் பொறுப்பாகும். அவர்கள் மக்கள் மனதை வெல்லவில்லை. ஆட்சி அதிகாரத்தை வலுக்கட்டாயமாக கைப்பற்றியதால் அனைவருக்கும் நீதி கிடைக்கும் என்பது வரலாற்றில் பதிவானதே கிடையாது என்று குறிப்பிட்டுள்ளார்.

பாகிஸ்தான் எல்லையான சாமன் பகுதியில் திங்கள்கிழமை அந்நாட்டுக்குள் குடும்பத்துடன் தஞ்சமடையும் ஆப்கானிஸ்தான் நாட்டு மக்கள்.
(வலது) காபூல் விமான நிலையத்தில் விமானத்துக்குள் குறுக்குவழியில் முண்டியடித்துக் கொண்டு ஏறும் ஆப்கன் நாட்டு மக்கள்.

https://t.me/Tamil_epaper2

ஷமி, பும்ரா அதிரடி; இந்தியா வெற்றி

லார்ட்ஸ் டெஸ்ட்

லண்டன், ஆக. 16: இங்கிலாந்துக்கு எதிரான 2-ஆவது டெஸ்டில் இந்தியா 151 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதையடுத்து 5 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் இந்தியா முன்னிலை பெற்றுள்ளது.

முன்னதாக இந்த டெஸ்டின் கடைசி கட்டத்தில் தடுமாற்றமான நிலையில் இருந்த இந்தியா, 5-ஆம் நாளில் பௌலர்களான முகமது ஷமி, ஜஸ்பிரீத் பும்ராவின் அதிரடியான 'ஆல்-ரவுண்ட்' ஆட்டத்தால் தன்னை நிலைப்படுத்திக் கொண்டு வெற்றியை எட்டியது. இந்தியாவின் கே.எல்.ராகுல் ஆட்டநாயகன் ஆனார்.

இந்தியாவின் 2-ஆவது இன்னிங்ஸில் 9-ஆவது விக்கெட்டுக்கு 90 ரன்கள் சேர்த்த ஷமி - பும்ரா பார்ட்னர்ஷிப், பின்னர் இங்கிலாந்தின் 2-ஆவது இன்னிங்ஸின்போது முக்கியமான 4 விக்கெட்டுகளை சரித்தது. இதனால் ஆட்டம் இந்தியாவின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது. அவர்களோடு முகமது சிராஜும், இஷாந்த் சர்மாவும் சேர்ந்து இங்கிலாந்து பேட்டிங்கை முற்றிலுமாக சரிக்க, ஆட்டம் முடிவுக்கு வந்தது.

முன்னதாக, 4-ஆம் நாளான ஞாயிற்றுக்கிழமை முடிவில் இந்தியா 2-ஆவது இன்னிங்ஸில் 6 விக்கெட் இழப்புக்கு 181 ரன்கள் அடித்து தடுமாற்றமான நிலையில் இருந்தது. கடைசி நாளான திங்கள்கிழமை ஆட்டத்தை ரிஷப் பந்த், இஷாந்த் சர்மா தொடங்கினர். இதில் பந்த் பவுண்டரியுடன் 22 ரன்களுக்கு வெளியேற, இஷாந்த் 2 பவுண்டரிகளுடன் 16 ரன்களுக்கு நடையைக் கட்டினார்.

எஞ்சியோரையும் சரித்து முற்றிலுமாக ஆட்டத்தை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் உற்சாகத்தில் இருந்தது இங்கிலாந்து. ஆனால், களம் கண்டிருந்த முகமது ஷமி - ஜஸ்பிரீத் பும்ரா வேறு திட்டம் வைத்திருந்தனர். விக்கெட்டை விட்டுக் கொடுக்காத அவர்கள், வித்தை காட்டினர். பாரபட்சமின்றி இங்கிலாந்து பௌலிங்கை இருவருமே பவுண்டரி, சிக்ஸர்களாக பதம் பார்க்க, ஒரு கட்டத்தில் சோர்ந்துபோய் அமர்ந்தார் இங்கிலாந்து கேப்டன் ஜோ ரூட்.

109.3 ஓவர்களில் 8 விக்கெட் இழப்புக்கு 298 ரன்கள் எடுத்திருந்தபோது டிக்ளேர் செய்வதாக அறிவித்தது இந்தியா. அப்போது, டெஸ்ட் கிரிக்கெட்டில் தனது 2-ஆவது அரைசதத்தை எட்டிய ஷமி, 6 பவுண்டரிகள் 1 சிக்ஸருடன் 56 ரன்களும், பும்ரா 3 பவுண்டரிகளுடன் 34 ரன்கள் சேர்த்திருந்தனர்.

இங்கிலாந்து தரப்பில் மார்க் வுட் 3, ஆலி ராபின்சன், மொயீன் அலி ஆகியோர் தலா 2, சாம் கரன் 1 விக்கெட் சாய்த்திருந்தனர்.

பின்னர் 272 ரன்கள் என்ற இக்கட்டான இலக்கை நோக்கி 2-ஆவது இன்னிங்ஸை தொடங்கிய இங்கிலாந்து, மளமளவென விக்கெட்டுகளை இழந்தது. 51.5 ஓவர்களில் 120 ரன்களுக்கு ஆட்டமிழந்தது அந்த அணி. ஜோ ரூட் 33, ஜோஸ் பட்லர் 25, மொயீன் அலி 13 ரன்கள் சேர்க்க, ஆலி ராபின்சன் (9), ஹசீப் ஹமீது (9), ஜானி பேர்ஸ்டோ (2) ஒற்றை இலக்க ரன்னில் நடையைக் கட்டினர். ரோரி பர்ன்ஸ், டாம் சிப்லி, சாம் கரன், ஜேம்ஸ் ஆன்டர்சன் டக் அவுட்டாகினர்.

ஜோ ரூட் விக்கெட்டை வீழ்த்திய ஆக்ரோஷத்தில் ஜஸ்பிரீத் பும்ரா.

முகமது ஷமி 56*



ஷமி, பும்ரா தந்த திருப்பத்தால் சோர்ந்துபோன ஜோ ரூட்.

சுருக்கமான ஸ்கோர்

முதல் இன்னிங்ஸ்

இந்தியா

கே.எல்.ராகுல் 129
ரோஹித் சர்மா 83
விராட் கோலி 42
மொத்தம் (126.1 ஓவர்களில் 10 விக்கெட் இழப்புக்கு) 364
பந்துவீச்சு: ஜேம்ஸ் ஆன்டர்சன் - 5/62, ஆலி ராபின்சன் - 2/73, மார்க் வுட் - 2/91

இங்கிலாந்து

ஜோ ரூட் 180*
ஜானி பேர்ஸ்டோ 57
ரோரி பர்ன்ஸ் 49
மொத்தம் (128 ஓவர்களில் 10 விக்கெட் இழப்புக்கு) 391
பந்துவீச்சு: முகமது சிராஜ் - 4/94, இஷாந்த் சர்மா - 3/69, முகமது ஷமி - 2/95

2-ஆவது இன்னிங்ஸ்

இந்தியா

அஜிங்க்ய ரஹானே 61
முகமது ஷமி 56*
சேதேஷ்வர் புஜாரா 45
மொத்தம் (109.3 ஓவர்களில் 8 விக்கெட் இழப்புக்கு).....298
பந்துவீச்சு: மார்க் வுட் - 3/51, ஆலி ராபின்சன் - 2/45, மொயீன் அலி - 2/84

இங்கிலாந்து (இலக்கு 272)

ஜோ ரூட் 33
ஜோஸ் பட்லர்.....25
மொயீன் அலி 13
மொத்தம் (51.5 ஓவர்களில் 10 விக்கெட் இழப்புக்கு) 120
பந்துவீச்சு: முகமது சிராஜ் - 4/32, ஜஸ்பிரீத் பும்ரா - 3/33 , இஷாந்த் சர்மா - 2/13, முகமது ஷமி - 1/ 13

ஒலிம்பிக் போட்டியாளர்களுக்கு பிரதமர் மோடி பாராட்டு

ஹாக்கி வீரர்களுடன் உரையாடிய மோடி.

புது தில்லி, ஆக. 16: டோக்கியோ ஒலிம்பிக்கில் பங்கேற்ற இந்திய அணியினரை திங்கள்கிழமை தனது இல்லத்துக்கு அழைத்து விருந்தளித்த பிரதமர் நரேந்திர மோடி, ஒலிம்பிக்கில் அவர்களது பங்களிப்புக்காக பாராட்டு தெரிவித்தார்.

ஈட்டி எறிதலில் தங்கம் வென்ற நீரஜ் சோப்ரா உள்பட பதக்கம் வென்ற அனைத்து போட்டியாளர்களிடமும் உரையாடி அவர்களுக்கு பாராட்டு தெரிவித்த பிரதமர் மோடி, இதர போட்டியாளர்களின் ஒலிம்பிக் அனுபவத்தை கேட்டறிந்து அவர்களையும் உற்சாகப்படுத்தினார்.

ஆடவர் ஹாக்கி அணியினருடன் உரையாடியபோது, ஒலிம்பிக் போட்டியில் அவர்கள் பயன்படுத்திய ஹாக்கி பேட் ஒன்றையும் வாங்கிப் பார்வையிட்டார். ஒலிம்பிக் வரலாற்றில் இதுவரை இல்லாத வகையில் இந்தியா, டோக்கியோ ஒலிம்பிக்கில் 7 பதக்கங்கள் வென்றுள்ளது. அதில், தடகளத்தில் முதல் முறையாக நீரஜ் சோப்ரா வென்ற தங்கம், பளுதூக்குதலில் சாய்கோம் மீராபாய் சானு, மல்யுத்தத்தில் ரவி தாஹியா ஆகியோர் வென்ற வெள்ளி, குத்துச்சண்டையில் லவ்லினா போர்கோஹெய்ன், பாட்மிண்டனில் பி.வி.சிந்து, ஆடவர் ஹாக்கி அணி, மல்யுத்தத்தில் பஜ்ரங் புனியா ஆகியோர் வென்ற வெண்கலம் ஆகியவை அடங்கும்.

இதுதவிர மகளிர் ஹாக்கி அணியும், கோல்ஃப் வீராங்கனை அதிதி அசோக்கும் பதக்க வாய்ப்பை நெருங்கி நழுவ விட்டதும் குறிப்பிடத்தக்கது.

https://t.me/Tamil_epaper2

ரோஜர்ஸ் கோப்பை டென்னிஸ்

மெத்வதேவ், கமிலா சாம்பியன்

டொரன்டோ, ஆக. 16: ரோஜர்ஸ் கோப்பை டென்னிஸ் போட்டியில் ஆடவர் ஒற்றையர் பிரிவில் ரஷியாவின் டேனில் மெத்வதேவ் சாம்பியன் ஆனார்.

போட்டித்தரவரிசையில் முதலிடத்தில் இருந்த அவர் இறுதிச் சுற்றில் அமெரிக்காவின் ரைலி ஒபெல்காவை 6-4, 6-3 என்ற நேர் செட்களில் வீழ்த்தினார். இந்த ஆட்டம் ஒரு மணி நேரம், 27 நிமிஷங்களில் முடிவுக்கு வந்தது.

வெற்றிக்குப் பிறகு பேசிய மெத்வதேவ், 'டென்னிஸ் விளையாடத் தொடங்கும்போது மாஸ்டர்ஸ் போட்டிகளில் விளையாடுவதை நினைத்துக் கூடப் பார்க்கவில்லை. ஆனால் தற்போது மாஸ்டர்ஸ் போட்டிகளில் எனது 5-ஆவது இறுதிச்சுற்றில் 4-ஆவது வெற்றியை பதிவு செய்துள்ளேன். இன்னும் அதிகமாக சாதிக்க விரும்புகிறேன்.

டேனில் மெத்வதேவ்

சற்று ஆஜானுபாகுவாக இருக்கும் ஒபெல்காவின் பெரிய ஷாட்களை எதிர்கொள்வதே எனது திட்டமாக இருந்தது. அவரது ஷாட்களை சற்று பின்வாங்கி எதிர்கொண்டு, அவரையும் சற்று தடுமாறச் செய்வதே இலக்கு. அதைச் சரியாகச் செய்ததாக நினைக்கிறேன்' என்றார்.

பிளிஸ்கோவாவை வீழ்த்திய கமிலா

மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதிச்சுற்றில் இத்தாலி வீராங்கனை கமிலா ஜியார்ஜி, போட்டித் தரவரிசையில் 4-ஆம் இடத்திலிருந்த செக் குடியரசின் கரோலினா பிளிஸ்கோவாவை வீழ்த்தி வாகை சூடினார்.

பிளிஸ்கோவாவை 6-3, 7-5 என்ற செட்களில் வீழ்த்திய கமிலா, அவரது டென்னிஸ் வரலாற்றில் வென்ற பட்டங்களில் இதுவே மிகப்பெரிய பட்டமாகும். வெற்றிக்குப் பிறகு பேசிய கமிலா, 'இந்த வெற்றி உணர்வுப்பூர்வமானதாக உள்ளது' என்றார்.

தடுமாற்றத்துடன் தோல்வியை சந்தித்த பிளிஸ்கோவா இந்த சீசனில் இத்துடன் 3 போட்டிகளின் இறுதிச்சுற்றுகளில் தோல்வி கண்டுள்ளார்.

ஆடவர் இரட்டையர் பிரிவில் அமெரிக்காவின் ராஜீவ் ராம்/இங்கிலாந்தின் ஜோ சாலிஸ்பரி ஜோடியும், மகளிர் இரட்டையர் பிரிவில் கனடாவின் கேப்ரியேலா டப்ரௌஸ்கி/பிரேசிலின் லுய்சா ஸ்டெஃபானி இணையும் சாம்பியன் ஆகினர்.

கமிலா ஜியார்ஜி

போலந்து சர்வதேச தடகள போட்டி: தமிழக வீராங்கனைக்கு அனுமதி

நமது சிறப்பு நிருபர்

புது தில்லி, ஆக. 16: தமிழகத்தைச் சேர்ந்த சமீஹா பர்வீனுக்கு போலந்தில் நடைபெறும் மாற்றுத் திறனாளிகளுக்கான சர்வதேச தடகள போட்டியில் பங்கேற்க இந்திய விளையாட்டு ஆணையம் திங்கள்கிழமை அனுமதி வழங்கியது.

முன்னதாக, இப்போட்டிக்கான இந்திய வீரர், வீராங்கனைகளை தேர்வு செய்ய இந்திய விளையாட்டு ஆணையம் பல்வேறு தகுதிப் போட்டிகளை நடத்தியது. இதில் கன்னியாகுமரியைச் சேர்ந்த பள்ளி மாணவி சமீஹா பர்வீன் (18) தகுதி பெற்றார். ஆனால், வேறு போட்டியாளர்கள் தேர்வாகாததால் பர்வீனை மட்டும் போலந்துக்கு அனுப்ப இந்திய விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் தகுதிச் சான்று வழங்கவில்லை.

சமீஹா பர்வீன்

இது தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றத்தில் பர்வீன் சார்பில் வழக்குத் தொடரப்பட்டது. அதன் விசாரணை முடிவில், சமீஹா பர்வீன் போலந்து போட்டியில் பங்கேற்க அனுமதி வழங்குமாறு இந்திய விளையாட்டு ஆணையத்துக்கு கடந்த வெள்ளிக்கிழமை சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

அதன் பேரில் சமீஹா பர்வீனுக்கான அனுமதிச் சான்றை இந்திய விளையாட்டு ஆணையம் திங்கள்கிழமை வழங்கியது. வரும் 23-ஆம் தேதி தொடங்கும் இப்போட்டியில், நீளம் தாண்டுதலில் பங்கேற்க சமீஹா பர்வீன் போலந்துக்கு செல்லவுள்ளார்.

கிங்ஸ்டன் டெஸ்ட்

மேற்கிந்தியத் தீவுகள் 'த்ரில்' வெற்றி

வெற்றி மகிழ்ச்சியில் மேற்கிந்தியத் தீவுகள் வீரர்கள்.

கிங்ஸ்டன், ஆக. 16: பாகிஸ்தானுக்கு எதிரான முதல் டெஸ்டில் மேற்கிந்தியத் தீவுகள் 1 விக்கெட் வித்தியாசத்தில் த்ரில் வெற்றி கண்டது. இதையடுத்து 2 டெஸ்டுகள் கொண்ட தொடரில் அந்த அணி முன்னிலையில் உள்ளது.

இந்த டெஸ்டில் டாஸ் வென்ற மேற்கிந்தியத் தீவுகள் ஃபீல்டிங்கை தேர்வு செய்தது. பேட் செய்த பாகிஸ்தான் முதல் இன்னிங்ஸில் 70.3 ஓவர்களில் 217 ரன்களுக்கு ஆட்டமிழந்தது. அதிகபட்சமாக ஃபவாத் ஆலம் 56 ரன்கள் சேர்க்க, மேற்கிந்தியத் தீவுகள் தரப்பில் ஜேடன் சீல்ஸ், ஜேசன் ஹோல்டர் தலா 3 விக்கெட்டுகள் சாய்த்தனர்.

இதையடுத்து தனது முதல் இன்னிங்ஸை தொடங்கிய மேற்கிந்தியத் தீவுகள் 89.4 ஓவர்களில் 253 ரன்கள் சேர்த்தது. அதிகபட்சமாக கேப்டன் கிரெய்க் பிரத்வெயிட் 97 ரன்கள் விளாசினார். பாகிஸ்தான் பௌலர்களில் ஷாஹீன் ஷா அஃப்ரிதி 4 விக்கெட்டுகள் வீழ்த்தினார். பின்னர் முதல் இன்னிங்ஸில் 36 ரன்கள் பின்தங்கிய நிலையில் 2-ஆவது இன்னிங்ஸை தொடங்கிய பாகிஸ்தான் 83.4 ஓவர்களில் 203 ரன்கள் அடித்தது. அதிகபட்சமாக கேப்டன் பாபர் அஸாம் 55 ரன்கள் அடித்திருந்தார். மேற்கிந்தியத் தீவுகள் தரப்பில் ஜேடன் சீல்ஸ் 5 விக்கெட்டுகள் சாய்த்தார்.

அடுத்து 168 ரன்களை வெற்றி இலக்காகக் கொண்டு 2-ஆவது இன்னிங்ஸை தொடங்கிய மேற்கிந்தியத் தீவுகள், 56.5 ஓவர்களில் 9 விக்கெட் இழப்புக்கு 168 ரன்கள் அடித்து வென்றது. அதிகபட்சமாக ஜெர்மெய்ன் பிளாக்வுட் 55 ரன்கள் அடித்தார். பாகிஸ்தான் தரப்பில் ஷாஹீன் ஷா அஃப்ரிதி 4 விக்கெட்டுகள் வீழ்த்தினார்.

லா லிகா கால்பந்து

பார்சிலோனாவுக்கு மெஸ்ஸி இல்லாத முதல் வெற்றி

மாட்ரிட், ஆக. 16: ஸ்பெயினில் நடைபெறும் லா லிகா கால்பந்து போட்டியில் பார்சிலோனா எஃப்சி தனது முதல் ஆட்டத்தில் 4-2 என்ற கோல் கணக்கில் ரியல் சோசியாடட் அணியை வீழ்த்தியது.

நட்சத்திர வீரர் மெஸ்ஸி இல்லாமல் பார்சிலோனா பதிவு செய்துள்ள முதல் வெற்றி இதுவாகும். கடந்த 17 ஆண்டுகளாக அந்த அணியில் இடம்பிடித்திருந்த மெஸ்ஸி, தற்போது அதிலிருந்து விலகி பாரீஸ் செயின்ட் ஜெர்மெய்ன் அணியில் இணைந்துள்ளார். இருப்பினும், அவர் இல்லாதபார்சிலோனா அணியின் இந்த முதல் ஆட்டத்தின்போது மைதானத்தில் இருந்த ரசிகர்கள் அவரது பெயரைக் கூறி அவ்வப்போது கோஷமிட்டனர். அவரை கௌரவிக்கும் பதாகைகளை ஏந்தியிருந்ததுடன், அவரது 10-ஆம் எண் ஜெர்ஸியையும் பெருவாரியாக அணிந்திருந்தனர்.

இந்த ஆட்டத்தில் முதல் கோல் பார்சிலோனாவுக்கு கிடைத்தது. 19-ஆவது நிமிஷத்தில் மெம்ஃபிஸ் டிபே உதவியுடன் கோலடித்தார் ஜெரார்ட் பிக். சோசியாடட் தனது முதல் கோலுக்காக கடுமையாகப் போராடி வந்த நிலையில், முதல் பாதியின் முடிவை நெருங்கியபோது (45+2), பார்சிலோனா அடுத்த கோல் எட்டியது.

ரியல் சோசியாடட் வீரரை முந்திக்கொண்டு பந்தை தலையால் முட்டும் பார்சிலோனா வீரர் மார்டின் பிரத்வெயிட்.

அந்த அணியின் ஃபிராங்கி டி ஜோங் தூக்கியடித்து கிராஸ் வழங்கிய பந்தை தலையால் முட்டி கோலடித்தார் மார்டின் பிரத்வெயிட்.

2-ஆவது பாதியிலும் பிரத்வெயிட் 59-ஆவது நிமிஷத்தில் ஒரு கோல் அடித்து எண்ணிக்கையை 3-ஆக உயர்த்தினார். அல்பா கோல்போஸ்ட்டுக்குள்ளாக கிராஸ் செய்த பந்தை சோசியாடட் கோல்கீப்பர் ரெமிரோ தடுக்க, அவரிடமிருந்து தன்னை நோக்கி வந்த பந்தை அப்படியே உதைத்து கோலாக்கினார் பிரத்வெயிட்.

இந்நிலையில், சோசியாடட் அணியின் கடுமையான போராட்டத்துக்கு 82-ஆவது நிமிஷத்தில் பலன் கிடைத்தது. 3 பார்சிலோனா வீரர்கள் சூழ்ந்ததையும் சமாளித்து பரெனெட்ஸியா கிராஸ் வழங்கிய பந்தை லாவகமாக கோல் போஸ்ட்டுக்குள் உதைத்தார் ஜூலன் லொபெடெ.

இதனால் உத்வேகம் பெற்ற அந்த அணியினர் அடுத்த 3 நிமிஷங்களிலேயே 2-ஆவது கோல் அடித்தனர். அந்த நிமிஷத்தில் சோசியாடட் டுக்கு கிடைத்த ஃப்ரீ கிக் வாய்ப்பை மிகேல் ஓயர்ஸபால் அருமையான கோலாக மாற்றினார். இடைவெளி குறைவதை உணர்ந்த பார்சிலோனா கடைசி நிமிஷத்தில் (90+2) நான்காவது கோல் அடித்தது. கோல்போஸ்டின் வலதுபுறம் இருந்து பிரத்வெயிட் வழங்கிய கிராஸை, அப்படியே கோல்போஸ்ட்டுக்குள் திருப்பினார் சொஜிராபர்டோ. இறுதியில் பார்சிலோனா 4-2 என்ற கோல் கணக்கில் வென்றது.

இதர ஆட்டங்கள்: லா லிகா போட்டியில் நடைபெற்ற மற்ற இரு ஆட்டங்களில், அட்லெடிகோ மாட்ரிட் 2-1 என்ற கோல் கணக்கில் செல்டா விகோவையும், செவில்லா 3-0 என்ற கோல் கணக்கில் ராயோ வால்கெனோவையும் வீழ்த்தின.

இங்கிலீஷ் பிரீமியர் லீக்...

இங்கிலாந்தில் நடைபெறும் இங்கிலீஷ் பிரீமியர் லீக் கால்பந்து போட்டியில் மான்செஸ்டர் சிட்டிக்கு எதிரான ஆட்டத்தில் டோட்டன்ஹாம் ஹாட்ஸ்பர்ஸ் அணிக்காக கோலடிக்கும் சன் ஹியூங் மின் (வலது). இந்த ஆட்டத்தில் டோட்டன்ஹாம் 1-0 என்ற கோல் கணக்கில் வென்றது.

துளிகள்...

- வலது முழங்காலில் 3-ஆவது அறுவைச் சிகிச்சை செய்துகொள்ள இருப்பதாகத் தெரிவித்துள்ள ஸ்விட்சர்லாந்து டென்னிஸ் வீரர் ரோஜர் ஃபெடரர், அதைத் தொடர்ந்து 3 மாதங்களுக்கு ஓய்வெடுக்க இருக்கிறார். இதனால் அமெரிக்க ஓபன் போட்டியில் பங்கேற்க முடியாத அவர், தாம் மீண்டும் களத்துக்கு திரும்பும் நம்பிக்கை குறைவாகவே இருப்பதாக தெரிவித்துள்ளார்.
- ஜூனியர் மல்யுத்தம் உலக சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவின் கௌரவ் பலியான் (79 கிலோ பிரிவு), தீபக் (97 கிலோ பிரிவு), ஷுபம் (57 கிலோ பிரிவு), ரோஹித் (65 கிலோ பிரிவு) ஆகியோர் வெண்கலப் பதக்கத்துக்கான சுற்றில் களம் காண்கின்றனர்.
- டோக்கியோ பாராலிம்பிக் போட்டியிலும் ரசிகர்களுக்கு அனுமதி அளிப்பதில்லை என போட்டி நிர்வாகம் முடிவு செய்துள்ளது.
- புதிதாக அறிவிக்கப்பட்டுள்ள பிரீமியர் ஹேண்ட்பால் லீக் போட்டியின் முதல் அணியாக 'கார்வித் குஜராத்' என்ற அணி உருவாகியுள்ளது.
- தலிபான்கள் அதிகாரத்துக்கு வந்துள்ளபோதிலும் ஆப்கானிஸ்தானில் கிரிக்கெட்டின் வளர்ச்சி பாதிக்காது என்றும், அந்நாட்டு வீரர்களுக்கும், அவர்களின் குடும்பத்துக்கும் உரிய பாதுகாப்பு இருக்கும் என்றும் ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் வாரியத் தலைவர் ஹமீத் ஷின்வாரி கூறியுள்ளார்.

epaper.dinamani.com

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை கிடைக்காததால் மலேசிய பிரதமர் ராஜிநாமா

கோலாலம்பூர், ஆக. 16: மலேசிய நாடாளுமன்றத்தில் போதிய பெரும்பான்மை கிடைக்காததால் பிரதமர் முகைதீன் யாசீன் தனது பதவியை ராஜிநாமா செய்துள்ளார்.

மலேசியாவில் கடந்த 2018-ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலுக்குப் பிறகு மகாதீர் முகமது நாட்டின் பிரதமரானார்.

அவரது கட்சிக்கு அளித்து வந்த ஆதரவை முகைதீன் யாசீன் தலைமையிலான கட்சி திரும்பப் பெற்றதால், மகாதீர் முகமது தனது பதவியை ராஜிநாமா செய்தார்.

அதைத் தொடர்ந்து, முக்கிய எதிர்க்கட்சிகளுடன் இணைந்து முஹியிதீன் யாசீன் நாட்டின் பிரதமர் பொறுப்பைக் கடந்த ஆண்டு மார்ச்சில் ஏற்றார்.

மலேசியாவில் கரோனா தொற்று பரவலைக் கட்டுக்குள் கொண்டு வருவதற்கு யாசீன் தலைமையிலான அரசு போதிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்று பல்வேறு தரப்பினரும் தொடர்ந்து குற்றஞ்சாட்டி வந்தனர்.

அதன் காரணமாக, நாடாளுமன்றத்தில் அவருக்குப் போதிய பெரும்பான்மை கிடைக்குமா என்று சந்தேகம் நிலவி வந்தது. கரோனா பரவலைக் காரணம்காட்டி நாடாளுமன்றத்தை பிரதமர் யாசீன் தொடர்ந்து முடக்கி வந்தார். இந்நிலையில், நாடாளுமன்ற கீழவையில் பெரும்பான்மை பெறத் தவறியதால், தனது பதவியை ராஜிநாமா செய்வதாக தொலைக்காட்சி உரையில் திங்கள்கிழமை அவர் தெரிவித்தார்.

அவரது ராஜிநாமாவை ஏற்றுள்ள மலேசிய அரசர் சுல்தான் அப்துல்லா சுல்தான் அகமது ஷா, அடுத்த அரசு பொறுப்பேற்கும் வரை யாசீனை காபந்து பிரதமராகத் தொடருமாறு கேட்டுக் கொண்டுள்ளார். அதேவேளையில், கரோனா தொற்று பரவல் அச்சுறுத்திவருவதால், உடனடியாகத் தேர்தல் நடத்துவது சாத்தியமில்லை என்றும் மலேசிய அரசர் தெரிவித்துள்ளார்.

ஜெர்மனி: 12 வயதுக்கு மேற்பட்டசிறார்களுக்கு கரோனா தடுப்பூசி

பெர்லின், ஆக. 16: ஜெர்மனியில் 12 வயதுக்கு மேற்பட்டோருக்கு கரோனா தடுப்பூசி செலுத்த அரசு அனுமதி அளித்துள்ளது.

இதுகுறித்து ஜெர்மனியின் நோய்க் கட்டுப்பாட்டு அமைப்பு திங்கள்கிழமை தெரிவித்திருப்பது:

ஜெர்மனியில் கரோனா 4-ஆவது அலை மற்றும் டெல்டா வகை தொற்றால் சிறார்கள் அதிகம் பாதிக்கப்படுவர் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, 12 வயதுக்கு மேற்பட்டோருக்கு கரோனா தடுப்பூசி செலுத்த அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் இளம் பருவத்தினர் ஒரு கோடிக்கும் மேற்பட்டோருக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

இதனால் நல்ல பலன் கிடைத்துள்ளது. அந்தத் தரவைப் பின்பற்றி ஜெர்மனியில் 12 வயதுக்கு மேற்பட்டோருக்கு தடுப்பூசி செலுத்த அனுமதி அளிக்கப்பட்டுள்ளதுஎனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேல் ராணுவத்துடன் மோதல்: 4 பாலஸ்தீனர்கள் சுட்டுக் கொலை

ஜெருசலேம், ஆக. 16: இஸ்ரேல் ஆக்கிரமிப்பில் உள்ள மேற்குக் கரைப் பகுதியில் ஏற்பட்ட மோதலில் ஆயுதம் ஏந்திய பாலஸ்தீனர்கள் 4 பேரை இஸ்ரேல் ராணுவம் சுட்டுக் கொன்றது. பிரச்னைக்குரிய இந்தப் பகுதியின் உரிமை தொடர்பாக இஸ்ரேல்-பாலஸ்தீனம் இடையே பல ஆண்டுகளாக மோதல் போக்கு நிலவி வருகிறது.

மேற்கு கரையின் வடபகுதியில் உள்ள ஜெனின் நகரில் இந்த மோதல் நிகழ்ந்தது. இம்மாதத் தொடக்கத்தில் அங்கு இஸ்ரேல் ராணுவத்தினருடன் நிகழ்ந்த மோதலில் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். இதையடுத்து தொடர்ந்து பதற்றம் நீடித்து வருகிறது.

இது தொடர்பாக இஸ்ரேல் எல்லை ராணுவப் படையினர் கூறுகையில், 'சந்தேகப்படும் நபரைத் தேடிச் சென்றபோது, அவர்கள் பதுங்கியிருந்து துப்பாக்கியால் சுடத் தொடங்கினர்.

இதையடுத்து, ராணுவத்தினரும் பதிலடி தாக்குதல் நடத்தினர். இதில், 4 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். இஸ்ரேல் தரப்பில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை' என்றனர்.

மேற்குக் கரையில் கூடுதல் குடியிருப்புகளை அமைக்க இஸ்ரேல் அரசு திட்டமிட்டு வருகிறது. அதற்கு பாலஸ்தீனம் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

அதனால், அப்பகுதியில் கடந்த சில மாதங்களாக இஸ்ரேல்-பாலஸ்தீனம் இடையே மோதல் அதிகரித்துள்ளது. கடந்த சில வாரங்களில் இஸ்ரேல் ராணுவத் தாக்குதலில் 24 பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர்.

பிரிட்டன் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அலோக் சர்மா இந்தியா வருகை

லண்டன்/ புது தில்லி, ஆக. 16: பிரிட்டன் சுற்றுச்சூழல் துறை அமைச்சரும், பிரிட்டிஷ்-இந்தியருமான அலோக் சர்மா 3 நாள் பயணமாக இந்தியாவுக்கு திங்கள்கிழமை வந்தார்.

ஐ.நா. சுற்றுச்சூழல் பாதுகாப்பு மாநாடு - 2021, வரும் நவம்பர் 1 முதல் 12-ஆம் தேதி வரை பிரிட்டனின் ஸ்காட்லாந்தில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது தொடர்பாக இந்திய அதிகாரிகளுடன் விவாதிப்பதற்காக அலோக் சர்மா பயணம் மேற்கொண்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறுகையில், 'பாரீஸ் பருவநிலை மாறுபாடு ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதில் இந்தியா முக்கியப் பங்கு வகித்தது. முக்கியத்துவம் வாய்ந்த இந்த விஷயத்தில் உலக நாடுகளை ஒருங்கிணைப்பதில் இந்தியா முக்கியமான நாடு.

சர்வதேச சூரிய மின் சக்தி கூட்டமைப்பு உள்ளிட்ட வற்றுக்கு இந்தியா தலைமை தாங்குகிறது' என்றார்.

இந்தப் பயணத்தின்போது மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் பூபேந்தர் யாதவ், மின்சாரம் மற்றும் மரபுசாரா எரிசக்தித் துறை அமைச்சர் ஆர்.கே.சிங் உள்ளிட்டோரை அலோக் சர்மா சந்திக்க இருக்கிறார்.

இந்த ஆண்டில் அவர் இந்தியாவுக்கு வருவது இது இரண்டாவது முறையாகும்.

அலோக் சர்மா, ஆக்ராவில் பிறந்தவர். அவருக்கு 5 வயதாக இருந்தபோது அவரது பெற்றோர் பிரிட்டனுக்கு குடிபெயர்ந்தனர்.

ஹைட்டி நிலநடுக்கம்

உயிரிழப்பு 1,297-ஆக அதிகரிப்பு

லெஸ் காயெஸ், ஆக.16: ஹைட்டியில் ஏற்பட்ட சக்திவாய்ந்த நில நடுக்கத்துக்கு உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 1,297-ஆக திங்கள்கிழமை அதிகரித்தது. காயமடைந்த 5,700-க்கும் மேற்பட்டோர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கரீபியன் தீவு நாடான ஹைட்டியின் டிபுரோன் தீபகற்பப் பகுதியில் சனிக்கிழமை சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம், ரிக்டர் அளவுகோலில் 7.2 ஆக பதிவானது.

தலைநகர் போர்டோபிரின்ஸுக்கு மேற்கே சுமார் 125 கி.மீ. தொலைவியில் நிலநடுக்கம் மையம் கொண்டிருந்தது. நிலநடுக்கத்துக்குப் பிறகு ஞாயிற்றுக்கிழமை பின்அதிர்வுகளும் ஏற்பட்டன.

இந்த நிலநடுக்கத்தின் அதிர்வுகளால் நூற்றுக்கணக்கான கட்டடங்கள் வீடுகள் இடிந்து விழுந்தன. அதில் வசித்த ஏராளமான மக்கள் இடிபாடுகளில் சிக்கினர். உயிரிழந்தவர்களின் உடல்கள், இடிபாடுகளில் சிக்கி காயமடைந்தவர்களை மீட்கும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

நிலநடுக்கத்தால் 1,297 பேர் உயிரிழந்ததாக அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது. 5,700-க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

7,000-க்கும் மேற்பட்ட வீடுகள் முற்றிலுமாகத் தரைமட்டமாயின. மருத்துவமனைகள், பள்ளிகள், தேவாலயங்கள், வணிக வளாகங்கள் என பல்வேறு கட்டடங்களும் நிலநடுக்கத்தால் இடிந்து விழுந்தன.

வறுமை அதிகமுள்ள நாடான ஹைட்டியில் காயமடைந்தவர்களுக்குத் தேவையான மருத்துவ வசதிகள், அடிப்படைத் தேவைகளான குடிநீர், உணவு உள்ளிட்டவையும் சரிவர கிடைக்கவில்லை என்று தெரியவந்துள்ளது.

இலங்கை சுகாதாரத் துறை அமைச்சர் மாற்றம்

ராஜபட்ச மகனுக்கு கூடுதல் பொறுப்பு

கொழும்பு, ஆக. 16: இலங்கையில் கரோனா பரவலைக் கட்டுப்படுத்துவதில் சரியாக செயல்படவில்லை என்ற விமர்சனத்தை எதிர்கொண்ட சுகாதாரத் துறை அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி அப்பதவியிலிருந்து மாற்றப்பட்டார்.

நாமல் ராஜபட்ச

இலங்கையில் புதிய அமைச்சரவை பதவியேற்று ஓராண்டு ஆகும் நிலையில், அமைச்சரவையில் அதிபர் கோத்தபய ராஜபட்ச திங்கள்கிழமை மாற்றம் செய்தார். அதன்படி 7 அமைச்சர்களுக்கு புதிய துறைகள் வழங்கப்பட்டுள்ளன.

சுகாதாரத் துறை அமைச்சராக இருந்த பவித்ரா வன்னியாராச்சி மாற்றப்பட்டு போக்குவரத்து அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். புதிய சுகாதாரத் துறை அமைச்சராக கெஹெலியா ரம்புக்வெல்ல நியமிக்கப்பட்டுள்ளார். கரோனா பெருந்தொற்று பரவத் தொடங்கிய கடந்த 2020-ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து சுகாதாரத் துறை அமைச்சராக பவித்ரா வன்னியாராச்சி பதவி வகித்து வந்தார்.

ஆனால், நாட்டில் கரோனா பரவலை சரியாக கையாளவில்லை என அவர் மீது விமர்சனம் எழுந்தது. இந்தச் சூழ்நிலையில் சுகாதாரத் துறை பொறுப்பிலிருந்து அவர் மாற்றப்பட்டுள்ளார்.

வெளியுறவுத் துறை அமைச்சராக ஜி.எல்.பீரிஸ் நியமிக்கப்பட்டுள்ளார். ஏற்கெனவே அப்பொறுப்பில் இருந்த தினேஷ் குணவர்தன கல்வி அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கு முன்னதாக பீரிஸ் வெளியுறவு அமைச்சராக கடந்த 2010-2015-இல் பதவி வகித்துள்ளார்.

பிரதமர் மகிந்த ராஜபட்சவின் மகன் நாமல், ஏற்கெனவே இளைஞர் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சராக இருக்கும் நிலையில், கூடுதலாக மேம்பாட்டு ஒருங்கிணைப்புத் துறையும் அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

https://t.me/Tamil_epaper2

கரன்சி நிலவரம்	அமெரிக்கா	ஐரோப்பா	பிரிட்டன்	மலேசியா	சிங்கப்பூர்
(இந்திய ரூபாயில்)	டாலர் 74.18	யூரோ 87.41	பவுண்ட் 102.74	ரிங்கிட் 17.50	டாலர் 54.74

தங்கம் (24 கேரட்) 1 கிராம் ரூ.4,792
தங்கம் (22 கேரட்) 1 கிராம் ரூ. 4,428

வெள்ளி 1 கிலோ.... ரூ.67,700
வெள்ளி 1 கிராம்..... ரூ.67.70

சென்செக்ஸ் 55,582 ▲ 145
நிஃப்டி 16,563 ▲ 34

புதிய உச்சத்தில் சென்செக்ஸ், நிஃப்டி

மும்பை, ஆக. 16: இந்தியப் பங்குச் சந்தைகளில் வாரத்தின் முதல் நாளான திங்கள்கிழமை நடைபெற்ற வர்த்தகம் ஏற்றத்துடன் முடிவடைந்தது. இதையடுத்து, சென்செக்ஸ் மற்றும் நிஃப்டி புதிய உச்சங்களைத் தொட்டன.

பங்குச் சந்தைகளில் தொடக்கத்தில் வர்த்தகம் மந்த நிலையில் காணப்பட்டது. ஆனால், அதன்பிறகு முதலீட்டாளர்களின் பங்களிப்பு சந்தையில் அதிகரிக்கத் தொடங்கியது. குறிப்பாக, சென்செக்ஸ் பட்டியலில் முக்கிய இடம் வகிக்கும் ரிலையன்ஸ், எச்டிஎஃப்சி பங்குகளுக்கு முதலீட்டாளர்களிடையே வரவேற்பு அதிகரித்து காணப்பட்டது. இவைதவிர, தகவல் தொழில்நுட்பம் மற்றும் மருந்து துறையைச் சேர்ந்த நிறுவனப் பங்குகளிலும் முதலீடு கணிசமான அளவில் அதிகரித்தது. இதன் காரணமாக, பங்குச் சந்தை ஏற்றத்துடன் திங்கள்கிழமை வர்த்தகத்தை நிறைவு செய்தது.

நிறுவனங்களின் நிதி நிலை முடிவுகள், கரோனா கட்டுப்பாடுகளில் மேலும் தளர்வுகள், தடுப்பூசி திட்டத்தின் வேகம் ஆகியவற்றை சந்தை உன்னிப்பாக கவனிக்கும். அதேநேரம், சர்வதேச சந்தைகளின் செயல்பாடுகளும் வர்த்தகத்தில் ஏற்ற இறக்கத்தை உருவாக்கும் என ரெலிகேர் புரோக்கிங் அதிகாரி அஜித் மிஸ்ரா தெரிவித்துள்ளார்.

அதிகம் ஏற்றம் கண்ட பங்குகள்

▲ 145 பிஎஸ்இ சென்செக்ஸ்

தற்போதைய விலை	ஆகஸ்ட் 16	%
1519.15	டாடா ஸ்டீல்	3.96
6376.35	பஜாஜ் ஃபைனான்ஸ்	3.64
799.30	எம்&எம்	2.64
14544.65	பஜாஜ் ஃபின்சர்வ்	1.69
2172.45	ரிலையன்ஸ்	1.29
2428.20	ஹிந்துஸ்தான் யுனிலீவர்	1.02
2729.80	எச்டிஎஃப்சி	0.99
118.85	எண்டிபிசி	0.46
780.60	சன்பார்மா	0.35
1123.00	ஹெச்சிஎல்டெக்	0.29

மும்பை பங்குச் சந்தையில் திங்கள்கிழமை நடைபெற்ற வர்த்தகத்தில் சென்செக்ஸ் 145.29 புள்ளிகள் (0.26%) உயர்ந்து புதிய உச்சமாக 55,582.58 புள்ளிகளில் நிலைத்தது. இக்குறியீட்டெண் வர்த்தகத்தின் இடையே அதிகபட்சமாக 55,680.75 புள்ளிகள் வரை அதிகரித்தது.

தேசிய பங்குச் சந்தையில் நடைபெற்ற வர்த்தகத்தில் நிஃப்டி 33.95 புள்ளிகள் (0.21%) முன்னேற்றம் கண்டு இதுவரை இல்லாத அளவில் 16,563.05 புள்ளிகளில் நிலைபெற்றது. இக்குறியீட்டெண் வர்த்தகத்தின் இடையே அதிகபட்சமாக 16,589.40 வரை சென்றது. இதர ஆசிய சந்தைகளான ஹாங்காங், டோக்கியோ, சியோல் சந்தைகளில் வர்த்தகம் சரிவுடன் முடிவடைந்தன. அதே சமயம், ஷாங்காய் சந்தை ஏறுமுகம் கண்டது.

ஐரோப்பிய சந்தைகளைப் பொருத்தவரையில் பிற்பகல் வரையிலான வர்த்தகம் மந்த நிலையிலேயே காணப்பட்டது.

அந்நியச் செலாவணி: பார்ஸி புத் தாண்டை முன்னிட்டு அந்நிய மற்றும் நிதி செலாவணி சந்தைகளுக்கு திங்கள்கிழமை விடுமுறையாக இருந்தது.

கச்சா எண்ணெய் 69.65 டாலர்

சர்வதேச முன்பேர சந்தையில் திங்கள்கிழமை வர்த்தகத்தில் பிரெண்ட் கச்சா எண்ணெய் விலை பேரலுக்கு 1.33 சதவீதம் குறைந்து 69.65 டாலருக்கு வர்த்தகம் ஆனதாக சந்தை வட்டாரத்தினர் தெரிவித்தனர்.

நிலக்கரி கையாளுவதில் தூத்துக்குடி வஉசி துறைமுகம் புதிய சாதனை

தூத்துக்குடி துறைமுகத்துக்கு நிலக்கரி ஏற்றிவந்த ஸ்டார் லாரா கப்பல்.

தூத்துக்குடி, ஆக. 16: நிலக்கரி கையாளுவதில் தூத்துக்குடி வஉசி துறைமுகம் புதிய சாதனை படைத்துள்ளது.

இதுகுறித்து துறைமுக பொறுப்புக் கழகத் தலைவர் தா.கி. ராமச்சந்திரன் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

தூத்துக்குடி வ.உ.சிதம்பரனார் துறைமுகத்தின் 9ஆவது கப்பல் சரக்குத் தளத்தில் 'எம்.வி. ஸ்டார் லாரா' என்ற கப்பலிலிருந்து 57,090 டன் நிலக்கரி 24 மணி நேரத்தில் கையாளப்பட்டு புதிய சாதனை படைக்கப்பட்டது. இதற்கு முன்பு கடந்த ஆண்டு அக்டோபர் 27ஆம் தேதி 24 மணி நேரத்தில் 56,785 டன் நிலக்கரி கையாளப்பட்டதே சாதனையாக இருந்து வந்தது.

புதிய சாதனை படைக்கக் காரணமாக இருந்த அந்த பெரியவகைக் கப்பல் மார்ஷெல் தீவு கொடியுடன் 14.20 மீட்டர் மிதவை ஆழத்துடன் இந்தோனேசியா நாட்டில் உள்ள முரா புரோவ் என்ற துறைமுகத்திலிருந்து 77,675 டன் நிலக்கரியை இங்கு ஏற்றிவந்தது.

இந்த நிலக்கரி, இந்தியா கோக் அன்டு பவர் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. இம்கோலா கிரேன் கம்பெனி பிரைவேட் லிமிடெட் நிறுவனம் மூலம் இயக்கப்படும் மூன்று நகரும் பளுதூக்கி இயந்திரங்களால் கப்பலிலிருந்து 57,090 டன் நிலக்கரி 24 மணி நேரத்தில் கையாளப்பட்டது குறிப்பிடத்தக்கது என்றார் அவர்.

ஹீரோ மோட்டோகார்ப் லாபம் 4 மடங்கு உயர்வு

புது தில்லி, ஆக. 16: நாட்டின் இருசக்கர வாகன தயாரிப்பு நிறுவனமான ஹீரோ மோட்டோகார்ப் முதல் காலாண்டில் ஈட்டிய லாபம் 4 மடங்கு அதிகரித்துள்ளது.

இதுகுறித்து அந்த நிறுவனம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது: நடப்பு 2021-22-ஆம் நிதியாண்டின் முதல் காலாண்டில் (ஏப்ரல்-ஜூன்) ஹீரோ மோட்டோகார்ப் நிறுவனம் செயல்பாட்டின் மூலம் ஈட்டிய வருமானம் ரூ.5,503 கோடியாக இருந்தது. இது, கடந்த நிதியாண்டில் ஈட்டிய வருமானமான ரூ.2,969 கோடியுடன் ஒப்பிடுகையில் மிக அதிகம்.

விற்பனையில் ஏற்பட்ட விறுவிறுப்பையடுத்து நிறுவனத்தின் நிகர லாபம் ரூ.58 கோடியிலிருந்து 4 மடங்கு அதிகரித்து ரூ.256 கோடியானது. கரோனா இடர்பாட்டுக்கிடையிலும் 10.25 லட்சம் வாகனங்களை முதல் காலாண்டில் விற்பனை செய்துள்ளதாக ஹீரோ மோட்டோகார்ப் தெரிவித்துள்ளது.

பணவீக்கம் 11.16%-ஆக குறைந்தது

புது தில்லி, ஆக. 16: பணவீக்கம் சென்ற ஜூலை மாதத்தில் 11.16 சதவீதமாக குறைந்துள்ளதாக மத்திய அரசு திங்கள்கிழமை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து மத்திய வர்த்தகம் மற்றும் தொழிற் துறை அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:

உணவுப் பொருள்களின் விலை குறைந்ததையடுத்து மொத்தவிற்பனை விலை குறியீட்டெண் (டபிள்யூபிஐ) அடிப்படையில் கணக்கிடப்படும் பணவீக்கம் தொடர்ந்து இரண்டாவது மாதமாக சென்ற ஜூலையிலும் 11.16 சதவீதமாக குறைந்துள்ளது.

ஜூன் மாதத்தில் 3.09 சதவீதமாக இருந்த உணவுப் பொருள்களுக்கான பணவீக்கம் ஜூலையில் பூஜ்யமாக இருந்தது. வெங்காயத்தின் விலை உயர்ந்தும் இந்த நிலை காணப்பட்டது. அந்த மாதத்தில் வெங்காயத்துக்கான பணவீக்கம் 72.01 சதவீதமாக இருந்தது.

அதேபோன்று, சென்ற ஜூன் மாதத்தில் 36.34 சதவீதமாக இருந்த கச்சா பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயுவுக்கான பணவீக்கம் ஜூலையில் 40.28 சதவீதமானது. உற்பத்தி துறை பொருள்களுக்கான பணவீக்கமும் 10.88 சதவீதத்திலிருந்து 11.20 சதவீதமானது.

டபிள்யூபிஐ பணவீக்கம் நடப்பாண்டு ஏப்ரலில் 10.74 சதவீதம் என்ற இரட்டை இலக்கத்தில் இருந்தது.

மே மாதத்தில் இப்பணவீக்கம் இதுவரை கண்டிராத வகையில் 13.11 சதவீதமாக வரலாற்று உச்சம் கண்டது.

அதன் பிறகு, ஜூன் மாதத்தில் இப்பணவீக்கம் 12.07 சதவீதமாக இருந்தது. தற்போது ஜூலையில் அதை விட குறைந்துள்ளதாக அந்த அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கோத்ரெஜ் இண்டஸ்ட்ரீஸ் லாபம் ரூ.186 கோடி

புது தில்லி, ஆக. 16: கோத்ரெஜ் இண்டஸ்ட்ரீஸ் முதல் காலாண்டில் ரூ.186 கோடி நிகர லாபத்தை பதிவு செய்துள்ளது.

இதுகுறித்து அந்த நிறுவனம் பங்குச் சந்தையிடம் தெரிவித்துள்ளதாவது:

நடப்பு 2021-22-ஆம் நிதியாண்டின் ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான முதல் காலாண்டில் நிறுவனம் செயல்பாடுகளின் மூலம் ரூ.2,890.49 கோடி வருவாய் ஈட்டியது. இது, முந்தைய 2020-21-ஆம் நிதியாண்டில் இதே காலகட்டத்தில் ஈட்டிய வருவாய் ரூ.1,980.06 கோடியுடன் ஒப்பிடுகையில் அதிகம்.

நிகர லாபம் ரூ.107.14 கோடியிலிருந்து ரூ.185.97 கோடியாக அதிகரித்துள்ளது.

நிறுவனத்தின் மொத்த செலவினம் மதிப்பீட்டு காலாண்டில் ரூ.2,945.53கோடியாகஇருந்தது. ரசாயனம் வர்த்தகம் மூலம் நிறுவனம் ஈட்டிய வருவாய் ரூ.245.62 கோடியிலிருந்து ரூ.621.43 கோடியாக வளர்ச்சி கண்டுள்ளது. அதேபோன்று, கால்நடை தீவன வர்த்தக பிரிவு மூலமாக ஈட்டிய வருவாயும் ரூ.748 கோடியிலிருந்து ரூ.1,001.29 கோடியைத் தொட்டுள்ளதாக கோத்ரெஜ் தெரிவித்துள்ளது.

பங்கின் விலை: மும்பை பங்குச் சந்தையில் திங்கள்கிழமை வர்த்தகத்தில் கோத்ரெஜ் இண்டஸ்ட்ரீஸ் பங்கின் விலை 1.76 சதவீதம் உயர்ந்து 571.95-இல் நிலைத்தது.

epaper.dinamani.com

ஞாயிற்றுக்கிழமைதோறும்
தினமணி கதிர்
இளமை! புதுமை! இனிமை!

தினமணி
செவ்வாய்க்கிழமை, 17 ஆகஸ்ட் 2021

இந்தியாவுடன் புதுவை இணைந்த நாள்

புதுச்சேரி, ஆக. 16: இந்தியாவுடன் புதுவை இணைந்த நாள் விழாவையொட்டி, புதுச்சேரி கீழூர் நினைவிடத்தில் சட்டப்பேரவைத் தலைவர் ஆர்.செல்வம், அமைச்சர் தேனீ சி.ஜெயக்குமார், எம்எல்ஏ-க்கள் திங்கள்கிழமை மரியாதை செலுத்தினர்.

பிரான்ஸ் ஆதிக்கத்திலிருந்த புதுவை மாநிலம், கடந்த 1962-ஆம் ஆண்டு, ஆகஸ்ட் 16-ஆம் தேதி இந்தியாவுடன் அதிகாரப்பூர்வமாக இணைக்கப்பட்டது. முன்னதாக, புதுச்சேரி அருகே உள்ள கீழூர் பகுதியில் பொது மக்கள் முன்னிலையில், தலைவர்கள் வாக்கெடுப்பை நடத்தி, இதற்கான முடிவை எடுத்தனர். இதையடுத்து, தாயகத்துடன் புதுவை சட்டப்பூர்வமாக இணைந்தது. இந்த நாளில், கீழூரில் வாக்கெடுப்பு நடைபெற்ற இடத்தில் புதுவை அரசு சார்பில் ஆண்டுதோறும் மரியாதை செலுத்தப்படுகிறது.

அதன்படி, நிகழாண்டு திங்கள்கிழமை சட்டப்பூர்வ பரிமாற்ற நாள் விழா கொண்டாடப்பட்டது. வில்லியனூர் அருகே உள்ள கீழூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாநில வேளாண் துறை அமைச்சர் தேனீ சி.ஜெயக்குமார் தேசியக் கொடியேற்றி மரியாதை செலுத்தினார். தொடர்ந்து, வாக்கெடுப்பு நடைபெற்ற நினைவிடத்தில் சட்டப்பேரவைத் தலைவர் ஆர்.செல்வம் மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

நிகழ்வில் சட்டப்பேரவை உறுப்பினர்கள் ஏ.கே.டி.ஆறுமுகம், கே.எஸ்.பி.ரமேஷ், தலைமைச் செயலர் அஸ்வனிகுமார், டிஜிபி ரன்வீர்சிங் கிருஷ்ணியா, ஏடிஜிபி ஆனந்த மோகன், செய்தித் துறை செயலர் உதயகுமார், இயக்குநர் வினயராஜ் உள்ளிட்ட அதிகாரிகள், தியாகிகள் கலந்து கொண்டு மரியாதை செலுத்தினர். தியாகிகள் கௌரவிக்கப்பட்டனர்.

தொடர்ந்து, கீழூர் அரசுப் பள்ளியில் நடைபெற்ற விழாவில், மாநில உள்துறை அமைச்சர் ஏ.நமச்சிவாயம் கலந்து கொண்டு, பள்ளி மாணவர்களுக்கு நோட்டு, புத்தகங்களை வழங்கி, நினைவிடப் பகுதியில் அன்னதானத்தைத் தொடங்கிவைத்தார்.

ஆளுநர், முதல்வர் பங்கேற்கவில்லை: விழாவில் துணைநிலை ஆளுநர் தமிழிசை, முதல்வர் என்.ரங்கசாமி பங்கேற்பர் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், அவர்கள் பங்கேற்கவில்லை. திடீரென ஏற்பட்ட உடல் நலக்குறைவால் முதல்வர் பங்கேற்கவில்லை எனவும், ஆளுநர் தெலங்கானாவில் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஆண்டுதோறும் முதல்வர் தேசியக் கொடியேற்றுவதும், ஆளுநர் உள்ளிட்ட அமைச்சர்கள் பங்கேற்று மரியாதை செலுத்துவதும் வழங்கமாக உள்ள நடைமுறை. நிகழாண்டு ஆளுநர், முதல்வர் கலந்து கொள்ளாதது அதிருப்தியை ஏற்படுத்தியதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

கீழூர் நினைவிடத்தில் மரியாதை

புதுச்சேரி கீழூர் நினைவிடத்தில் தேசியக் கொடியேற்றி மரியாதை செலுத்தும் சட்டப்பேரவைத் தலைவர் ஆர்.செல்வம், அமைச்சர் தேனீ சி.ஜெயக்குமார் உள்ளிட்டோர்.

நரிக்குறவர் மொழி உள்பட பத்து மொழிகளில் வெளியாகிறது திருக்குறள்

சென்னை, ஆக. 16: நரிக்குறவர் இன மக்கள் பேசும் வாக்ரிபோலி மொழி உள்பட பத்து மொழிகளில் திருக்குறள் மொழிபெயர்ப்புகள் வெளியிடப்படவுள்ளதாக செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் தெரிவித்துள்ளது.

இது குறித்து அந்த நிறுவனத்தின் இயக்குநர் பேராசிரியர் இரா.சந்திர சேகரன் வெளியிட்டுள்ள அறிவிப்பு: மத்திய கல்வி அமைச்சகம், திருக்குறளை இந்திய அரசமைப்பின் எட்டாவது அட்டவணையில் உள்ள 21 மொழிகளில் மொழிபெயர்க்கும் திட்டத்தைச் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்துக்கு வழங்கியுள்ளது. இந்த நிறுவனம், ஏற்கெனவே பஞ்சாபி (2012), மணிப்புரி (2012), தெலுங்கு (2014), கன்னடம் (2014), குஜராத்தி (2015) ஆகிய மொழிகளில் திருக்குறள் மொழிபெயர்ப்புகளை வெளியிட்டுள்ளது. மேலும் திருக்குறள் ஆங்கில மொழிபெயர்ப்புகளின் தொகுப்புகளையும் மூன்று பாகங்களாக வெளியிட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக வரும் அக்டோபர் மாதம் மலையாளம், மராத்தி, ஒடியா, ஹிந்தி, நேபாளி, உருது, அரபி, பாரசீகம், வாக்ரிபோலி (நரிக்குறவர் மொழி), படுகு ஆகிய பத்து மொழிகளில் திருக்குறள் மொழிபெயர்ப்புகள் வெளியிடப்படவுள்ளன.

இது தவிர மொழிபெயர்ப்புத் திட்டத்தின் மூலமாகவும், குறுந்திட்ட ஆய்வுகள் மூலமாகவும் வரப் பெற்றுள்ள ஆய்வுகள் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் மூலம் நூலாக்கம் பெற்று வருகின்றன.

அந்த வகையில் உ.வே.சாமிநாதையர் நாட்குறிப்பு, உ.வே.சாமிநாதையர் அருஞ்சொல் அகராதியும் சங்கநூற் சொல்லடைவும், நற்றிணை (கன்னட மொழிபெயர்ப்பு), தொல்காப்பியம் (ஹிந்தி மொழிபெயர்ப்பு), பதிற்றுப்பத்து (கன்னட மொழிபெயர்ப்பு) ஆகியவை உள்ளிட்ட 20 நூல்கள் செப்டம்பர் மாதம் வெளியிடப்படவுள்ளன என அதில் தெரிவித்துள்ளார்.

காந்திகிராம கிராமிய பல்கலை. துணைவேந்தர் திடீர் ராஜிநாமா

திண்டுக்கல், ஆக. 16: காந்திகிராம கிராமியப் பல்கலை.யின் துணைவேந்தராக பணியாற்றி வந்த எஸ்.மாதேஸ்வரன் திடீரென திங்கள்கிழமை தனது பதவியை ராஜிநாமா செய்துள்ளார்.

புதிய துணைவேந்தராக எஸ். மாதேஸ்வரன்(58) கடந்த ஏப். 7-ஆம் தேதி பொறுப்பேற்றுக் கொண்டார். ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையம் பகுதியை பூர்வீகமாகக் கொண்ட இவர், பெங்களூருவிலுள்ள சமூக மற்றும் பொருளாதார மாற்றத்திற்கான ஆய்வு மையத்தில் 30 ஆண்டுகளாக பேராசிரியராகவும், அதன் இயக்குநராகவும் பதவி வகித்தவர்.

கிராமியப் பல்கலை. துணைவேந்தராக பொறுப்பேற்றுக் கொண்ட மாதேஸ்வரன், அந்தப் பதவியில் 5 ஆண்டுகள் நீடிப்பார் என அறிவிக்கப்பட்டது. இதனிடையே உடல் நலக்குறைவால் அவர் பாதிக்கப்பட்டு வந்ததாகக் கூறப்படுகிறது. பல்கலை. வளாகத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற 75 ஆவது சுதந்திர தின விழாவில் கலந்து கொண்டு உரையாற்றினார். இந்நிலையில் தனது உடல் நிலை காரணமாக துணைவேந்தர் பதவியிலிருந்து ராஜிநாமா செய்து கொள்வதாக மத்திய கல்வி அமைச்சகத்திற்கு மாதேஸ்வரன் திங்கள்கிழமை கடிதம் அனுப்பியுள்ளார்.

அதனைத் தொடர்ந்து திங்கள்கிழமை பிற்பகல், பெங்களூருவுக்கு புறப்பட்டுச் சென்றுள்ளதாக பல்கலை. வட்டாரங்கள் தெரிவித்தன. பொறுப்பேற்ற 5 மாதங்களில், துணைவேந்தர் திடீர் ராஜிநாமா செய்துள்ள தகவல், பல்கலை. வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பொறுப்பு துணைவேந்தர் நியமனம்: இதனிடையே, காந்திகிராம கிராமியப் பல்கலை. பொறுப்பு துணைவேந்தராக பேராசியர் டி.டி.ரெங்கநாதன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுதொடர்பாக பல்கலை. பதிவாளர் வி.பி.ஆர். சிவக்குமார் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: துணைவேந்தராகப் பணியாற்றி வந்த எஸ். மாதேஸ்வரன் ராஜிநாமா செய்ததை அடுத்து, மத்திய கல்வி அமைச்சகத்தின் உத்தரவின்பேரில் காந்தி கிராம பல்கலை. வேந்தர் கே.எம்.அண்ணாமலை, வேளாண் மற்றும் கால்நடை அறிவியல் புலப் பேராசிரியர் டி.டி.ரெங்கநாதனை பொறுப்பு துணைவேந்தராக நியமித்துள்ளார். அதன்படி டி.டி.ரெங்கநாதன் பொறுப்பு துணைவேந்தராக திங்கள்கிழமை பிற்பகல் பொறுப்பேற்றுக் கொண்டார் என தெரிவித்துள்ளார்.

ஜாதிச் சான்றிதழ் இல்லாததால் கல்லூரிப் படிப்பை தொடர முடியாத காட்டுநாயக்கர் சமூக மாணவி

கு.அழகியநம்பி

அம்பாசமுத்திரம், ஆக. 16: ஜாதிச் சான்றிதழ் இல்லாததால் கல்லூரிப் படிப்பைத் தொடர முடியாத நிலையில் உள்ளதாக ஆழ்வார்குறிச்சி பகுதியைச் சேர்ந்த காட்டுநாயக்கர் சமூக மாணவி தெரிவித்துள்ளார்.

நாடோடியாக வாழ்ந்து வந்த காட்டுநாயக்கர் சமூகத்தினர், கடந்த நூறு ஆண்டுகளுக்கும் மேலாக ஆழ்வார்குறிச்சி பகுதியில் வசித்து வருகின்றனர். முன்னோர் யாரும் படிக்காத நிலையில், இளைய சமுதாயத்தினர் பலர் பள்ளிகளுக்குச் சென்று மேல்நிலைப் படிப்பை முடித்துள்ளனர். இங்குள்ள அரசு உதவி பெறும் மேல்நிலைப் பள்ளியில் நிகழாண்டு பிளஸ் 2 முடித்துள்ள விஜயலட்சுமி, இங்குள்ள கல்லூரியில் சேர விண்ணப்பித்த நிலையில் ஜாதிச் சான்றிதழ் இல்லாததால் கல்லூரியில் சேர முடியாது என்று நிர்வாகத்தினர் கூறியுள்ளனர். இதுகுறித்து விஜயலட்சுமி கூறியதாவது:

நான் இங்குள்ள தனியார் பள்ளியில் பிளஸ் 2-வில் 480 மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சியடைந்துள்ளேன். தொடர்ந்து கல்லூரியில் சேர விண்ணப்பித்தேன். ஆனால் எனக்கு ஜாதிச் சான்றிதழ் இல்லாததால் கல்லூரியில் சேர முடியாது என்று கூறிவிட்டனர். இது போன்று பலர் மேல்நிலைப் படிப்பை முடித்த நிலையில் ஜாதிச் சான்றிதழ் இல்லாததால் உயர்கல்வியைத் தொடராமல் விட்டு விட்டனர். படிக்கும் ஆர்வமுள்ள என்னைப் போன்றவர்களுக்கு இது பெரும் ஏமாற்றமாக உள்ளது.

மாணவி விஜயலட்சுமி.

எனவே, எங்கள் சமூகத்தினருக்கு காட்டுநாயக்கர் என்பதற்கான ஜாதிச் சான்றிதழ் வழங்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து படிப்பைத் தொடர உதவ வேண்டும் என்றார்.

விஜயலட்சுமியின் தந்தை சங்கர் கூறியதாவது: எங்கள் சமூக முன்னோர்கள் படிப்பறிவில்லாத நிலையில், ஜாதிச் சான்றிதழ் குறித்து முன்னெடுக்கவில்லை. இதனால் இன்றைய தலைமுறையினரின் கல்வி பாதிக்கும் நிலை உள்ளது.

திருநெல்வேலி மாவட்டத்தில் அம்பாசமுத்திரம், பேட்டை, முக்கூடல் மற்றும் தூத்துக்குடி மாவட்டத்தில் பல இடங்களிலும் எங்கள் உறவினர்களுக்கு காட்டு நாயக்கர் என சாதிச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. தென்காசி மாவட்டத்தில் 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட காட்டு நாயக்கர் சமுதாயத்தினர் வசித்து வருகிறோம். எனவே, தென்காசி மாவட்டத்திலும் எங்கள் சமூகத்தினருக்கு காட்டுநாயக்கர் என சான்றிதழ் வழங்க வேண்டும் என்றார்.

இது குறித்து தென்காசி வட்டாட்சியர் சுப்பையனிடம் கேட்ட போது, 'பழங்குடியினருக்கான ஜாதிச் சான்றிதழ் வழங்குவது வருவாய்க் கோட்டாட்சியர் தான். மேலும், இது குறித்து வருவாய்க் கோட்டாட்சியரிடம் கோரிக்கை மனு வந்துள்ளது. அவர் உரிய வகையில் விசாரணை செய்து ஜாதிச் சான்றிதழ் வழங்குவது குறித்து முடிவெடுப்பார்' என்றார்.

மாவட்ட ஆட்சியர் கோபால சுந்தரராஜைத் தொடர்பு கொண்டு கேட்ட போது, பழங்குடியினருக்கான சான்றிதழ் வழங்குவதற்கான அதிகாரம் வருவாய்க் கோட்டாட்சியரிடம் உள்ளது, அவரிடம் கேளுங்கள் என்றார்.

இதைத் தொடர்ந்து தென்காசி வருவாய்க் கோட்டாட்சியர் ராமச்சந்திரனிடம் கேட்ட போது அவர் கூறியது: ஆழ்வார்குறிச்சி பகுதியில் வசிப்பவர்களிடம், காட்டு நாயக்கர் என்பதற்கான சான்று எதுவும் இல்லை.

உரிய சான்று இல்லாமல் ஜாதிச் சான்று வழங்கக் கூடாது என்று உத்தரவு உள்ளது. மேலும் அவர்களது பூர்விகம் குறித்தும் தெரியவில்லை. பழங்குடியினர் சான்றிதழ் வழங்க வேண்டும் என்றால் சான்றிதழ் கோருபவர்களின் மூதாதையர் எங்கு வாழ்ந்தார்கள், அவர்களது சமூகப் பழக்க வழக்கங்கள் என்ன உள்ளிட்டவை குறித்த தெளிவான தகவல்கள் தேவை. ஆழ்வார்குறிச்சியில் வசிப்பவர்களுக்கு அவர்களது மூதாதையர் குறித்த சரியான தகவல்கள் எதுவும் இல்லை. மேலும், தாய் வழி உறவினர்களின் சான்றிதழை ஆதாரமாகக் கொண்டும் சான்றிதழ் வழங்க முடியாது. எனவே அவர்களுக்கு ஜாதிச் சான்றிதழ் வழங்க இயலாது என்றார்.

புதுச்சேரி-புதுதில்லி விரைவு ரயில் அரக்கோணம் வழியாக இயக்கப்படும்

சென்னை, ஆக.16: புதுச்சேரி-புதுதில்லிக்கு இயக்கப்படும் விரைவு ரயில் ஆக.18, 25, செப்.1, 8, 15 ஆகிய தேதிகளில் செங்கல்பட்டு, அரக்கோணம், பெரம்பூர் வழியாக திருப்பி விடப்படவுள்ளது.

இதுகுறித்து சென்னை ரயில்வே கோட்டம் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

புதுச்சேரி-புதுதில்லிக்கு ஆக.18, 25, செப்.1, 8, 15 ஆகிய தேதிகளில் இயக்கப்படும் விரைவு சிறப்பு ரயில் (04071) செங்கல்பட்டு, அரக்கோணம், பெரம்பூர், கொருக்குபேட்டை வழியாக திருப்பி விடப்படுகிறது.

இந்த குறிப்பிட்ட நாள்களில் சென்னை எழும்பூரில் ரயில் நிறுத்தப்படாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தடை செய்யப்பட்ட வலைகளுடன் கடலுக்குள் சென்ற மீனவர்கள் மீது நடவடிக்கை கோரி

நாகை மீனவர்கள் 3-ஆவது நாளாக வேலைநிறுத்தம்

நாகப்பட்டினம், ஆக. 16: தடை செய்யப்பட்ட சுருக்குமடி வலைகளுடன் கடலுக்குள் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் மீது நடவடிக்கை எடுக்க கோரி, நாகை மீனவர்கள் திங்கள்கிழமை 3-ஆவது நாளாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

சுருக்குமடிவலை மற்றும் இரட்டை மடிவலைகளை மீன்பிடிப்பில் பயன்படுத்துவதற்கு அரசு தடைவிதித்துள்ளது. நாகை மற்றும் மயிலாடுதுறை மாவட்டங்களில் உள்ள சில கிராமங்களைச் சேர்ந்த மீனவர்கள் சுருக்குமடி வலையை பயன்படுத்த அனுமதிக்க வேண்டும் என கோரிக்கை விடுத்து வருகின்றனர். ஆனால் அரசு இதற்கு அனுமதி அளிக்கவில்லை.

இந்நிலையில், கடந்த 13- ஆம் தேதி சில கிராமங்களைச் சேர்ந்த மீனவர்கள் தடைசெய்யப்பட்ட வலைகளுடன் விசைப்படகுகளில் கடலுக்குள் சென்றனர். இது தொடர்பாக போலீஸார் வழக்குப் பதிவு செய்தனர்.

இந்நிலையில், தடை செய்யப்பட்ட வலைகளுடன் கடலுக்குள் சென்ற மீனவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி, ஆகஸ்ட் 20-ஆம்தேதி வரை தொடர்வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவது என நாகை அக்கரைப்பேட்டை மீன்பிடித் துறைமுக வளாகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற நாகை, மயிலாடுதுறை மற்றும் காரைக்கால் மாவட்ட மீனவர்களின் ஆலோசனைக் கூட்டத்தில் முடிவு மேற்கொள்ளப்பட்டது.

இதன்படி நாகை அக்கரைப்பேட்டை, கீச்சாங்குப்பம், கல்லார் உள்ளிட்ட கிராமங்களைச் சேர்ந்த மீனவர்கள் திங்கள்கிழமை 3-ஆவது நாளாக வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர். இதனால், நாகை மீன்பிடித் துறைமுக பகுதிகளில் 1000-க்கும் மேற்பட்ட ஃபைபர் மற்றும் விசைப்படகுகள் நிறுத்தப்பட்டிருந்தன.

நாகை அக்கரைப்பேட்டை மீன்பிடித்துறைமுக பகுதியில் திங்கள்கிழமை நிறுத்தப்பட்டிருந்த ஃபைபர் மற்றும் விசைப்படகுகள்.

முன்னாள் சிறப்பு டிஜிபிக்கு எதிரான பாலியல் வழக்கு: விசாரணை ஒத்திவைப்பு

விழுப்புரம், ஆக.16: பெண் எஸ்.பி.யிடம் பாலியல் சீண்டலில் ஈடுபட்டதாக முன்னாள் சிறப்பு டிஜிபிக்கு எதிராக தொடுக்கப்பட்ட வழக்கின் விசாரணையை வருகிற 23-ஆம் தேதிக்கு ஒத்திவைத்து விழுப்புரம் நீதிமன்றம் திங்கள்கிழமை உத்தரவிட்டது.

பெண் எஸ்.பி. ஒருவரிடம் கடந்த பிப்ரவரி மாதம் அப்போதைய சிறப்பு டிஜிபி பாலியல் சீண்டலில் ஈடுபட்டதாக குற்றச்சாட்டு எழுந்தது. இது தொடர்பாக புகார் அளிக்கச் சென்ற பெண் எஸ்.பி.யை அப்போதைய செங்கல்பட்டு எஸ்.பி. தடுத்ததாகவும் புகார் கூறப்பட்டது.

இதுதொடர்பாக சிறப்பு டிஜிபி, எஸ்.பி. ஆகியோர் மீது சிபிசிஐடி போலீஸார் வழக்குப் பதிந்து விழுப்புரம் தலைமை குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தனர். இதற்கிடையே, டிஜிபி, எஸ்.பி. ஆகியோர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டனர்.

இந்த வழக்கு விசாரணையை வருகிற டிச. 20-ஆம் தேதிக்குள் முடிக்க சென்னைஉயர்நீதிமன்றம்அண்மையில் உத்தரவிட்டது. இதையடுத்து, கடந்த 9-ஆம் தேதி விழுப்புரம் தலைமை குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு வந்தது. குற்றஞ்சாட்டப்பட்ட முன்னாள் சிறப்பு டிஜிபி, எஸ்.பி. ஆகியோர் நீதிமன்றத்தில் ஆஜராகி ஜாமீன் பெற்றனர். அவர்களுக்கு குற்றப்பத்திரிகை நகல்கள் வழங்கப்பட்டன. இதையடுத்து, வழக்கு விசாரணை ஆக.16-ஆம் தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

இதனிடையே, வழக்கு விசாரணையை ஆந்திர மாநிலம், நெல்லூரில் உள்ள சிறப்பு நீதிமன்றம் அல்லது வேறு மாநில நீதிமன்றத்துக்கு மாற்றக் கோரி முன்னாள் சிறப்பு டிஜிபி தரப்பில் உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனுவை விசாரித்த உச்ச நீதிமன்றநீதிபதியு.யு.லலித்தலைமையிலான அமர்வு, இந்த வழக்கை வருகிற 18-ஆம் தேதிக்கு ஒத்திவைத்து உத்தரவிட்டது.

இந்த நிலையில், இந்த வழக்கு விழுப்புரம் தலைமைக் குற்றவியல் நீதிமன்றத்தில் நீதிபதி கோபிநாதன் முன் திங்கள்கிழமை விசாரணைக்கு வந்தது. அப்போது, முன்னாள் சிறப்பு டிஜிபி, எஸ்.பி. ஆகியோர் ஆஜராகவில்லை. அவர்கள் தரப்பு வழக்குரைஞர்கள் ஆஜராகி, வழக்குத் தொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டு விசாரணை நடைபெற்று வருவதாகதெரிவிக்கப்பட்டது.மேலும்,இந்த வழக்கில் முன்னாள் சிறப்பு டிஜிபி, எஸ்.பி. ஆகியோர் நேரில் ஆஜராவதிலிருந்து விலக்கு கேட்டும் மனு தாக்கல் செய்யப்பட்டது. இதைத் தொடர்ந்து வழக்கு விசாரணையை வருகிற 23-ஆம் தேதிக்கு ஒத்திவைத்து நீதிபதி கோபிநாதன் உத்தரவிட்டார்.

தங்கம் பவுன் ரூ.35,424

சென்னை, ஆக.16: சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை பவுனுக்கு ரூ.56 குறைந்து, ரூ.35,424-க்கு திங்கள்கிழமை விற்பனை செய்யப்பட்டது.

ஒரு கிராம் தங்கம் ரூ.7 குறைந்து, ரூ.4,428-ஆக இருந்தது. வெள்ளி கிராமுக்கு 50 பைசா குறைந்து, ரூ.67.70 ஆகவும், கட்டி வெள்ளி கிலோவுக்கு ரூ.500 குறைந்து, ரூ.67,700 ஆகவும் இருந்தது.

திங்கள்கிழமை விலை ரூபாயில் (ஜி.எஸ்.டி. தனி)

1 கிராம் தங்கம்	4,428
1 பவுன் தங்கம்	35,424
1 கிராம் வெள்ளி	67.70
1 கிலோ வெள்ளி	67,700

தினமணி மகளிர்மணி
நாளைய இணைப்பில்

வெற்றிக்குப் பின்னால்...
நம்பிக்கை நிறைவேறும்!
அடையாளத்தை இழக்காதீர்கள்!

நேசிப்போம் பாதுகாப்போம்!

கதை சொல்லும் குறள்
-சாந்தகுமாரி சிவகடாட்சம்
ஆடைகள் ... வீணாகும் துணிகளில்...!

DINAMANI, Chennai Phone: 23457501 Fax: 044-23452814 RNI Reg. No. 368903. Printed and Published by R.K. Jhunjhunwala on behalf of Express Publications (Madurai) Private Limited., at Express Press, 'Express Gardens', 29, Second Main Road, Ambattur Industrial Estate, Chennai - 600 058. தமிழ்நாடு. www.dinamani.com - Editor: K.Vaidyanathan. Chennai. Vol. 88, No 224.
COPYRIGHT: Express Publications (Madurai) Private Limited. All rights reserved. Reproduction in any manner, electronic or otherwise, in whole or in part, without prior written permission is prohibited.